ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்

ஆனி

2020

270ஆவது மலர்

ஓம்

முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

குறள் வழி

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பொருள் : புற இருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகா; குணத்தால் நிறைந்தவர்க்கு மன இருள் போக்கும் பொய் பேசாமையாகிய விளக்கே விளக்கு.

(299)

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள் : யாம் உண்மை என்று கண்ட பலவற்றுள் மெய் பேசுவதற்கு எவ்வகையிலாவது ஒப்பான நல்ல வேறு செயல் ஒன்றும் இல்லை. (300)

நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை
முத்தி நல்குமே

இன்பம் எது

கலிவிருத்தம்

யாவருஞ் சமமென வுணர்ந்திட லின்பம்
யாவருஞ் சகோதர ரென்பது மின்பம்
யாவரும் நலனுற வுழைத்திட லின்பம்
யாவரு மொன்றென வொன்றிட லின்பமே 07

பணித்தலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதா தாற்றிட லின்பம்
பணிமுயன் றாற்றி முற்றுற லின்பம்
பணியெலாஞ் சிவபணி யாக்கிட லின்பமே 08

கூசுங் கொலைகள வொழித்திட லின்பம்
மாசுடை மதுவகை நீக்கிட லின்பம்
பூசலும் பகைமையும் போக்கிட லின்பம்
தேசத் தொற்றுமை யோம்பிட லின்பமே 09

ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 270

2020 பொருளடக்கம் ஆனி

ஐந்தொழிலின் அற்புதம்	திருமதி ந. பரமேஸ்வரி	01 - 04
திருச்சதகம்	சு. அருளம்பலவனார்	05 - 07
இன்பம் எங்கே?	மு. செல்லத்தம்பி	08 - 10
திருவிளையாடற் புராண வசனம்	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்	11 - 17
தவயோகி சரவணமுத்துச்...	முருகவே பரமநாதன்	18 - 21
வழித்துணை	ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம்	22 - 23
பஞ்சமா பாதகங்களின்...	பு. கதிரித்தம்பி	24 - 26
நித்திய அன்னப்பணி...	சந்நிதியான் ஆச்சிரமம்	27 - 28
திருவாசகம் எனும் தேனில்...	ஆ. விநாயகமூர்த்தி	29 - 32
யாமிருக்கப் பயம் ஏன்?	திருமதி ஜெ. இராஜேஸ்வரி	33 - 34
சிவஞானபோதம் ...	திருமதி ச. மனோரஞ்சனி	35 - 37
ஆற்றங்கரையான் நூல்...	நா.வி.மு. நவரத்னம்	38 - 39
சமய வாழ்வு	இரா. செல்வவடிவேல்	40 - 42
சைவத்தமிழ் போற்றும்...	மூ. சிவலிங்கம்	43 - 47
செல்வச்சந்நிதியில் உறையும்...	இ. ஸ்ரீதரன்	48 - 49
கொடுப்பதை தடுப்பது...	சி. தனபாலசிங்கம்	- 50
கதிர்காம யாத்திரை	செல்வி சி. நிலா	51 - 56

வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

18. சிவலோக வகுப்பு

உரகமு மிதழியு முதனமு முடுபதி யும்புனை
யும்பளு சாட்சார் பங்கின் கொடிதாளினில்
உலகமு மலைகளு முததியு முயிருமு டங்கவொ
டுங்கும் பார்ப்பதி மைந்தன் கமலாலயன்
உபநிட முடிவினு மிடபம தனிலுமு யங்கிவ
யங்குளு சீர்ப்பதி யொன்றென் றவிதாவென
உறைவிடு படையின னடலுடை நிசிசரர் தண்டமு
டைந்தங் கார்ப்பெழ வங்கம் பொருசேவகன்:,

வரபதி சுரபதி சரவண மடுவினில் வந்தருள்
கந்தன் கார்த்திகெ யன்செங் கழுநீர்மலர்
மருவிய குருபரன் வனசரி பதயுக கஞ்சம்வ
ணங்கும் பாக்யக தம்பன் கருணாகரன்
வடதரு விலையிலும் வெகுமுக மவுலிய னந்தனெ
னுஞ்செஞ் சேக்கையி லுங்கண் டுயின்மால்திரு
மருமக னிமையவர் வழிபடு மணியணி கிங்கிணி
பண்கொண் டார்த்திசை கொஞ்சும் பதசூடிகை:,

அருவுரு மொழியவொ ரபிநவ வடிவரு ளுந்தனி
யந்தந் தீசஷையெ னுங்குண் டலபூஷணம்
அணிமய மெனுமொரு சிவிகையொ டதிகுண மஞ்சினு
மஞ்சொன் றாக்கிய தென்பொங் கரியாசனம்
அறநெறி முறைமையி லொழுகிய வழகிய பண்பெனு
மம்பொன் சேர்த்தக லிங்களு சயசாரமும்
அவனவ ளதுவென மொழியவு மிலதொரு வன்பிணி
யுங்கொண் டாக்கமு மின்பங் களுமேதரும்:,

இரவலர் மிடிகெட வுதவிய விதரண கங்கண
மிங்கங் காப்பிலெ னுஞ்சுந் தரகாகளம்
எனதறு துறவினு முயர்கொடை யவிரத சங்குல
கெங்குங் கேட்டுவ முங்கும் பொறைமாமுர
சிமையவர் கணமுனி கணமுட னினிதுப்ர பஞ்சமி
றைஞ்சுங் கீர்த்திது ரங்கந் திறல்வாரணம்
இருவினை கெடவொரு நிரமய பரமவு னந்தரு
மின்பந் தேகிய வன்பின் சிவலோகமே.

சுடர் தரும் தகவல்

அமரர் கந்தையா அருள்லிங்கம் கீரிமலையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த போதும், 2000 ஆண்டளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவர் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட காலப்பகுதியில் அவர் சங்கானையில் வசித்து வந்தார்.



வெள்ளிக்கிழமைகளில் சந்நிதியானைத் தரிசிக்க வரும் போதெல்லாம் தவறாது சந்நிதியான் ஆச்சிரமம் வந்து இங்குள்ள வழமையான நடைமுறைகளை அவதானித்தார். ஆச்சிரமத்தின் நேர்த்தியான நடைமுறைகளால் உண்டான அபிமானம், அவரை ஆச்சிரமத்தின் பிரதம தொண்டர் களில் ஒருவராக மாற்றியதுடன் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் செயற்குழு உறுப்பினராகவும் மாற்றியது. குறிப்பாக, ஒவ்வொரு ஆண்டும் தை மாதத்தின் "ஞானச்சுடர்" சஞ்சிகை வெளியீட்டு நாளன்று சிறப்புப்பிரதி பெறுவோர் பட்டியலில் குடா நாட்டின் மக்கள் வங்கிக் கிளைகளை ஈடு படுத்தும் முகமாக திரு சி. பத்மநாதன் அவர் களோடு தொடர்பினை ஏற்படுத்தி அந்த நிகழ் வினைக் காத்திரமாக்கிய பெருமை அமரர் அருள்லிங்கம் அவர்களையே சாரும்.

பேரவையின் தலைவராக அவர் செயற்பட்ட காலத்தில், கட்டுரையாளர் கௌரவிப்பு - சமுதாயப் பணிகளில் முன்னின்று உழைத்த பெருமக்களுக்கான கௌரவிப்பு - மாணவர்களுக்கிடையேயான "திருவாசகப் போட்டி" வெற்றியாளர்களின் கௌரவிப்பு எனப் பல்வேறு விசேட நிகழ்வுகள் ஆச்சிரமத்தில் நடந்தேறின. அத்தகைய சந்தர்ப்பங்களில் தலைமையேற்று அவர் ஆற்றிய தலைமையுரைகள் அனைவராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சந்நிதியான் ஆச்சிரமத்தின்மீது அவர் கொண் டிருந்த விசுவாசமும் - ஈடுபாடும் அன்னாரை சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவராக உயர்த்தியது.

சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆரம்ப காலந்தொட்டு பேரவைத் தலைவர்களாக இருந்த பேராசிரியர் துரைராசா, தபாலதிபர் திரு சு. திருப்பரங்கிரி நாதன், தொழிலதிபர் சி. நாகலிங்கம் ஆகியோரின் சேவையினைப் பாராட்டி 2015இல் வழங்கப்பட்ட கௌரவிப்பின்போது, அன்றைய விழாவின் தலைவராக இருந்த அமரர் அருள்லிங்கம் அவர்களும் சேர்த்து நால்வரும் கௌரவிக்கப்பட்டமை மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும்.

பின்னாளில் அவரது உடல்நிலையில் ஏற்பட்ட தளர்வு காரணமாக, படிப்படியாக ஆச்சிரமத்துடனான தொடர்புகள் குறைவடைந்த போதிலும், ஆச்சிரம முக்கிய நிகழ்வுகளில்

தொடர்ந்தும் பங்குபற்றி வந்தார். அன்னாரது பெறுமதிமிக்க ஆலோசனைகளும், அவர் ஆற்றிய சேவைகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் என்றும் நினைவு கூரப்படும். அமரர் அருள்லிங்கம் அவர்களின் மறைவு சந்நிதியான் ஆச்சிரமத்திற்குப் பேரிழப்பாகும்.



அமரர் கந்தையா அருள்லிங்கம் அவர்கள் மறைவினால் துயருற்றிருக்கும் உற்றார்- உறவினர் - நண்பர்கள் அனைவருக்கும் சந்நிதியான் ஆச்சிரமமும்- பேரவையும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரின் ஆத்மா செல்வச்சந்நிதி வேலவனின் திருப்பாதங்களில் இளைப் பாறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. பரமநாதன்

(அளவெட்டி மத்தி)

Dr க. சிவநேசன்

(நல்லூர், யாழ்ப்பாணம்)

பொ. வியாகேஸ்

(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

ம. ஸ்ரீகாந்தன்

(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி

(விதானையார் வளவு, காங்கேசந்துறை)

கந்தையா ஏகாம்பரம்

(புறூடிலேன், அரியாலை)

சி. நடேசமூர்த்தி J.P

(வங்கி ஊழியர், அச்சுவேலி)

சி. கதிரவேலு

(தொண்டைமானாறு)

ஐ. சிவநாதன்

(மருதம், நெல்லியடி)

திருமதி ஜடா

(புலோலி தெற்கு, புலோலி)

க. இராசதுரை

(நீர்வேலி)

வ.சி. கணபதிப்பிள்ளை

(ஆவரங்கால், புத்தூர்)

உரிமையாளர்

(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Dr V. கணேசவேல்

(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

தலைவர் / செயலாளர்

(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

ஐ. கணேசலிங்கம்

(யாழ்ப்பாணம்)

ஆ. ஜெயக்குமாரன்

(கப்பூது, கரவெட்டி)

உரிமையாளர்

(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

கு. சோதிராசா

(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

ஆனந்தராசா மணிமாறன்

(அராலி மத்தி, அராலி)

உரிமையாளர்

(பேபி போட்டோ, கந்தர்மடம்)

T. மணிவண்ணன்

(மிருசுவில்)

மு. வைகுந்தநாதன்

(இலங்கை வங்கி, அச்சுவேலி)

S. விக்னேஸ்வரராசா

(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

K. சுப்பிரமணியம்

(கல்லூரி வீதி, இளவாலை)

மு. இராசேந்திரா

(தும்பளை, பருத்தித்துறை)

பொ. வெங்கடேஸ்வரன்

(வல்வெட்டித்துறை)

ம. ஸ்ரீஸ்கந்தராசா

(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)

இ. சரவணபவன்

(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

சு. சிவனேசன்

(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

செல்லத்துரை தங்கராசா

(அன்னை இல்லம், உரும்பராய்)

பரமேஸ்வரன் தயாரூபன்

(கல்வியங்காடு)

ச. வடிவேலு

(ஊரெழு, சுண்ணாகம்)

திருமதி அகிலன் அருந்ததி

(போதராமடம், துன்னாலை)

க. பூலோகரட்ணம்

(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)

சு. கிருபானந்தன்

(கே.கே.எஸ் றோட், இணுவில்)

ச.சிவனேசன்

(கேணியடி, திருநெல்வேலி)

திருமதி அ. வினிதா

(நல்லூர், யாழ்ப்பாணம்)

கு. நித்தியானந்தன்

(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)

உரிமையாளர்

(அம்பிகாபதி பான்ஸிகுட்ஸ், யாழ்ப்பாணம்)

கோ. யோகலிங்கம்

(கிளை. முகாமையாளர், புத்தூர்)

சி. நவரெத்தினம்

(துவாரகை, கரணவாய்)

திருமதி அ. குணநாயகம்

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

ப. சிவராசா

(தூதாவளை, கரணவாய்)

திருமதி தங்கராசா ஈஸ்வரி

(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)

கு. லோகேந்திரன்

(மில் ஒழுங்கை, மல்லாகம்)

சோ. கருணாகரன்

(சுண்ணாகம்)

உ. செந்தூரன்

(பிரதான வீதி, அச்சுவேலி)

வை. கமலநாதன்

(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)

கு. சிவபாலராஜா

(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)

இ. கதிர்காமநாதன்

(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)

க. ஆனந்தராசா

(நெல்லியடி, கரவெட்டி)

இரா. அருட்செல்வம்

(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)

சி. துரைராசா

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

செ. முருகதாஸ்

(சாந்தை, பண்டத்தரிப்பு)

திருமதி ப. பூமாவதி

(முருகன் கோவில்வீதி, நெல்லியடி)

வசந்தன் சிவஞானம்

(அல்வாய் மேற்கு, திக்கம்)

திருமதி திருத்தேவி ஏகாந்தன்

(வல்வெட்டித்துறை)

T. நாகராசா

(நல்லூர் யாழ்ப்பாணம்)

கா. தெட்சணாமூர்த்தி

(பண்டத்தரிப்பு)

திருமதி ப. இராஜேஸ்வரன்

(கோண்டாவில்)

பா. துவாரகன்

(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)

ம. பேரின்பநாயகி

(நீர்வேலி)

ஐந்தொழிலின் அற்புதம்

–திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள்–

ஐம்பூதங்களையும் அன்பால் ஈர்த்து
ஐந்தொழிலை ஆற்றும் ஐயனின் லீலையை
ஐயமின்றி எடுத்தியம்ப அருள்வாய்
ஐங்கரனே ஐயங்கள் தீர்க்கும் குருபரனே

இறைவனின் ஐந்தொழில் என்பது படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்பதை யாவரும் அறிவர். இதுவே உலக இயக்கமாகும். ஒவ்வொரு தோற்றத்தையும் வெளிக்கொணர்தல் படைத்தல் எனவும், அவற்றை நல்ல பயனுள்ள வகையில் வளர்த்தெடுப்பது காத்தல் எனவும், தீயவை புகுந்து இலக்கை அடையவிடாது தாக்கும்போதும் மற்றும் பயன் கருதியும் செய்வது அழித்தல் எனவும் இந்த உண்மையை உணர வைத்தல் அருளல் எனவும் மீண்டும் தன்னை மறைத்துக் கொண்டு தேடிக் கண்டுபிடிக்க வைப்பது மறைத்தல் எனவும் ஆகின்றது.

படைத்தல்: உதாரணமாக நாம் நெல் உற்பத்தி செய்கின்றோம். அதற்காக நெல்லை நிலத்தில் விதைக்கின்றோம் பசளையிட்டு நீர் பாய்ச்சி களை பிடுங்கிக் காக்கின்றோம். விளைந்ததும் அறுவடை செய்கின்றோம். இந்த விதை நெல்லாகிய மூலப்பொருள் எங்கிருந்து முதலில் வந்தது என்பதை யாரும் அறியார். அது முளைத்துப் பயிராக நிலம் தேவை. விதை முளைப்பதற்கு காற்று, நீர், வெப்பம் இவை அத்தியாவசியமாகின்றன. இவையெல்லாம் அளவோடு உரிய காலத்தில் கிடைத்தால்தான் நாம் நெல்லை அறுவடை செய்து பயன்பெறலாம். நிலம், நீர், காற்று, தீ (வெப்பம்) இவை தோன்றுவதற்கு ஆதாரமாய் இருக்கும் ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் தன் கருணையினால் கவர்ந்து உரிய காலத்தில் அளவுடன் அவற்றைப் பயன்பட வைக்கும் கர்த்தாவே கண்ணுக்குப் புலப்படாத அந்த அன்பாகிய சிவம். இவரே எல்லாம் வல்ல இறைவன் ஆவார்.

இனி அறுவடை செய்த நெல் உணவுக்காகப் பயன்படுத்தப்படும்போது உமி நீக்கி அரிசியாக்கப்படுகின்றது. பின் அரிசி வெந்து சோறாகின்றது. சோறு உணவாகின்றது, உணவு சக்தியாகின்றது. இவ்வாறு இறைவனால் உருவாக்கப்பட்ட (படைக்கப்பட்ட) நெல்மணி விதையானது. விதை அழிந்து பயிரானது, பயிர் வளர்ந்து கதிரானது, கதிர் முற்றி நெல்லானது இவ்வாறு ஒன்று அழிந்து இன்னொன்றாக மாறுகின்றது. எதுவும் இங்கு இல்லாமல் போவதில்லை. இதே போல் உலகம் அழியப் போகின்றது என்ற விஞ்ஞானிகளின் கூற்றும் இவ்வாறானதே.

இன்று நாம் உலகில் காணும் காட்சிகள் பாவிக்கும் பொருட்கள் உடைகள் தொழில் முறைகள் என்பன அழிந்து வேறு விதமான சூழல் உருவாகலாம். அப்போது நாம் அதற்கு இயைபாக்கம் அடைந்து விடுகின்றோம். பிரம்மா படைக்கும் கடவுள், விஷ்ணு காத்தற் கடவுள், சிவன் அழிக்கும் கடவுள் என்று கூறுவதால் அனேகர் சிவன்

என்றதும் பயந்து நடுங்குவர் அவரைப் பேய் என்றும் கூறுவர். ஆனால் சிவன் என்றால் அன்பு; அவர் கருணை மயமானவர். அன்பில் லாத உலகிலே அவர் உருத்திர மூர்த்தி ஆகின்றார். அன்பின் வலிமையை உணர்த்தித் தன்னை வெளிப்படுத்தவே இவர் கோபாவேசங் கொள்வதால் இயற்கை சீற்றம் கொள்கின்றது. இதனால் வெள்ளம், புயல், மண்சரிவு, எரி மலை வெடித்தல் என்பவற்றால் அழிவுகள் ஏற்படுகின்றன. இதைவிட புதிய நோய்கள் உண்டாகின்றன. இவையெல்லாம் தாம், தனது, தனக்கு என்று கூத்தாடுவதால் ஏற்படும் அழிவுகளேயன்றி வேறொன்றும் இல்லை. இறைவன் சாந்த மூர்த்தியாக கருணாநிதியாக வீற்றிருக்கின்றார். மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் ஆசைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அவாவினால் காமம், குரோதம், மதம், மாச்சரியங்களினால் மனிதன் கவரப்பட்டு அறிவு மயங்கி தன்னுள்ளே கருணாமூர்த்தியாக இருக்கும் இறைவனை மறந்து ஆடுகின்றான். மனிதனின் ஆசை வெறி யாகும்போது உண்டாகும் பகை உணர்வே சீற்றமாக மாறுகின்றது. பிரபஞ்சத்தில் இத் தகைய உணர்வுகள் அதிகமாகும்போது இயற்கை நிலையின் சீரான தன்மை (ஒழுங்கு விதி) தடுமாறுகின்றது.

ஆகவே அழிவிற்குக் காரணம் ஆசை யினால் உண்டாகும் அறிவு மயக்கத்தினால் இறைவன் வகுத்த விதியை மறந்து தாம்தாம் பெரியவர் என அகங்காரம் கொள்வதே ஆகும். பிரம்மம் என்றும் உள்ளது. இறை சக்தியினால் தோற்றத்திற்கு வருகின்றது. இது எங்கும் நிறைந்த பொருளாய் இருக்கின்றது. இது எல்லாவற்றையும் நியதிப்படி இயங்க வைத்து கண்காணிப்பதே விஷ்ணு தத்துவம் எனப்படுகின்றது. தோன்றியவற்றை ஒன்றை அழித்து இன்னொன்றாக மாற்றி உலகை இயக்கிக் கொண்டிருக்கும் காந்த சக்தியே சிவம் எனப்படுகின்றது. இந்த விதியை உணவு நிவேதிக்கும்போது கூறும் மந்திர மாகப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். அதா வது அன்னம்- பிரம்மா, ரஸோ- விஷ்ணு, போக்தா- மஹேஸ்வரஹ.

அன்னம் (உணவு) படைக்கப்படும் போது பிரம்மம் ஆகின்றது. அந்த உணவின் சாரம் அதில் வியாபித்திருப்பதால் ரஸோ விஷ்ணு என்றாகின்றது. அந்த உணவை ரசித்து உண்ணும்போது உணவின் சாரம் சக்தியாக மாறுகின்றது. இப்போது உணவு என்ற பொருள் அழிந்து சக்தியாகின்றது. இந்த உணவை உண்பவர் உணவை உண் பதன்மூலம் அதனை அழித்து சக்தியாக மாற்றுவதால் சிவம் ஆகின்றார். இவ்வாறு இறைவனது லீலா வினோதங்களை உணர்ந்து அனுபவிப்பதே பேரின்பமாகும். உலக இன்பங் களை அனுபவிக்க பணம், பொருள், மக்கட் கூட்டம் தேவையாக இருக்கின்றது. ஆனால் பேரின்பமாகிய இறையின்பத்தை அனுபவிக்க எதுவுமே தேவையில்லை அந்த இறைவனிடம் மனத்தைக் கொடுத்தால் போதும். என்றும் மாறாதது இறைவனின் சக்தி. எப்போதும் மாறிக்கொண்டே இருப்பது உலகத் தோற்றம். இங்கு அழிவது ஒன்றுமில்லை மாற்றமே நிகழ்கின்றது. விதை ஒன்று முளைக்கும் போது தன்னை இழக்கின்றது. இப்போது விதை இல்லை மரமே உள்ளது. மரம் பல தளபாடங்களாக வீட்டு உபகரணங்களாக அலங்காரப் பொருட்களாக மாறும்போது தன்னை இழக்கின்றது. இப்போது மரம் அழி கின்றது. அதனின்றும் உருவான பொருட்கள் உள்ளன. மரம் பூக்கின்றது. பூ காயாகின்றது, காய் கனியாகின்றது, கனி உணவாகின்றது, விதை உணவாகவும் மீண்டும் மரமாகவும் ஆகின்றது. இவற்றையெல்லாம் உணர்ந்து

அனுபவிக்கும்போது உலகம் வினோதமான விசித்திரமான ஆனந்தமான ஓர் அருங்காட்சியகமாக நம்மை மகிழ்விக்கின்றது. இவ்வாறே ஒரு மனிதன் தந்தையின் விந்தின் சாரமாக தாய் வயிற்றில் கருவாகி வளர்ந்து உரிய காலத்தில் குழந்தையாக உலகில் பிறக்கின்றான். இப்போது அவன் குழந்தை, ஐந்து வருடங்களில் குழந்தை பிள்ளையாகின்றது, பாடசாலை செல்லும்போது மாணவன் ஆகின்றான். பின் இளைஞன் ஆகி மனிதன் என்னும் நிலைக்கு மாறுகின்றான். மனிதனின் உடல் நிலையற்றது. ஆன்மா நிலையானது நித்திய மானது. உலகில் தோன்றிய மனித உடல் அழிகின்றது அதன் இறுதி நிலை சாம்பல். சாம்பலை இன்னொன்றாக மாற்ற முடியாது. நீரில் கரையும் பகுதி கரையும், மண்ணில் தங்கும் பகுதி மண்ணில் தங்கும், மூச்சு காற்றோடு கலக்கும் ஆன்மா பரமாத்மாவில் ஐக்கியமாகும் இங்கு எதுவும் இல்லாமற் போகவில்லை. நிலையற்றது மாறுகின்றது. நிலையான என்றுமுள்ள ஆத்ம சக்தியான இறை சக்தி என்றும் மாறாது தன் தொழிலைச் செய்துகொண்டே இருக்கின்றது.

இறைவனின் எண்ணக்கருவே காற்றில், நீரில், தானியங்களில், தாவரங்களில் கலந்து தாதுப்பொருளாக உயிர்க்குலத்தின் விந்திற் கலந்து தாயின் கருப்பையிற் சேர்ந்து மீண்டும் பிறப்பெடுக்கின்றது. உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப மீண்டும் மீண்டும் பிறந்து வளர்ந்து உருவழிந்து போகின்றது. இங்கு உருவம் அழிகின்றது. நாமம் அழிவதில்லை (மாறுவதில்லை). உதாரணமாக அம்மா உடல் அழிந்தாலும் அம்மா என்ற சொல் அழிவது இல்லை. இதேபோல் ஒவ்வொரு உருவத்தின் பொருளின் பெயர்கள் அழிவதில்லை. உருவங்கள் பொருட்கள் அழிவதில்லை ஆகவே சொல் நிலையானது, சொல்லாற் சுட்டும் பொருள் நிலையற்றது. அழியும் பொருள் "ஷரம்" (ட்ஷரம்) அழியாப் பொருள் "அட்ஷரம்" எனவும் வழங்கப்படுகின்றது. சொல்லை உருவாக்கும் எழுத்துக்கள் "அட்ஷரங்கள்" என வழங்கப்படுகின்றன.

அம்மா என்ற ஒரு சொல்லிற்கு எத்தனை எத்தனை அன்னையரின் உருவங்கள் உண்டாகின்றன, அழிகின்றன. இதேபோல இறைவன் என்ற ஒரு சொல்லிற்கு எத்தனை எத்தனையோ உருவங்கள் தோற்றத்தில் உள்ளன. ஒவ்வொருவரின் மனத்திரையிலும் பதிவான அந்த உருவத்தின்மீது நம்பிக்கை கொண்டு அன்புடன் ஆராதனை செய்யும் போது உண்டாகும் உணர்வலைகளின் காரணமாக நமக்கும் நாம் கற்பித்த உருவமான இறைவனுக்குமிடையே ஓர் உறவு ஏற்படுகின்றது. இவ் உறவு வலுக்கும்போது நமக்குள் ஏற்படும் உணர்வு நாம் என்றும் பிரியாதிருக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்றது. நாம் கண்ணை மூடும்போதும் வெளித்தோற்றம் மறைகின்றது. நாம் என்பதும் மறைகின்றது. இறைவன், நான் என்கின்ற எண்ணங்கள் மறைந்து ஒன்றான ஆனந்தமான உணர்வே மிஞ்சுகின்றது.

ஒரு குழந்தைக்கு தன் அம்மாவின் தோற்றமும் அன்பும், பேச்சும், செயலும் மனத்திற் பதிகின்றது. அம்மாவிடம் அன்பும் பிரியமும் நம்பிக்கையும் கொள்கின்றது. அம்மாவின் உடல் அழிந்த பின்பும் அன்பான பேச்சும் செயலும் உள்ளத்திற் பதிந்திருப்பதால் அப் பிள்ளைக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது தாயின் உதவியைப் பெற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பமாக அமைவது தாயாரின் பேச்சுக்களும் செயல்களுக்குமான மனப்பதிவே ஆகும். இத்தொடர்பினை ஏற்படுத்துவது தூய்மையான அன்பும் நம்பிக்கையுமே ஆகும்.

உற்சாகமுள்ளவனுக்கு எந்த எதிர்ப்பும் தடையாக இருப்பதில்லை.

ஒரு பிள்ளைக்குத் தன் தாயின் உருவத்தை விட இன்னொரு தாயின் உருவத்திடம் அன்பும் நம்பிக்கையும் ஏற்படாதது போல் ஒவ்வொருவருக்கும் சிறு பராயத்தில் இதுதான் இறைவனின் தோற்றம் என்றும் அவ் இறைவன் மேல் அன்பும் நம்பிக்கையும் ஏற் படும்போது இன்னொரு உருவத்தை ஏற்க மறுப்பது உருவ வழிபாட்டோடு மட்டும் நிற் பவர்களுக்குப் பொருத்தமானது. இதைக் கடந்து மேலே போனால் தான் உண்மையை (சத்தியத்தை) நாம் அறிந்து கொள்ளலாம் இதற்கு ஒரே வழி நாம் எல்லோரும் ஒரே தாய் தந்தை யான இறைவனின் பிள்ளைகள் மனிதர் களாகிய எம்மால் அந்த ஒரே தாய் தந்தையர் களை மனித உருவில் பார்த்தால்த்தான் அன் பும் நம்பிக்கையும் உறவும் உண்டாகும். அப் போதுதான் அவரை அணுகிப் பேசி நம்மை வளர்த்துக்கொள்ள முடியும். இத்தகைய ஒரு அன்பும் ஆற்றலும் சக்தியும் கொண்ட இறை வனை சிவன் பார்வதி உருவில் கண்டு வழி பட்டு உயர்நிலையை அடைய வைப்பதே இந்து தர்மம் இது சனாதன தர்மம் என்றும் அழைக்கப்படுகின்றது. சன+ ஆதன+ தர்மம் என இதைப் பிரித்துப் பொருள் கண்டால் மக்களின் (சனங்களின்) ஆதனம் (சொத்து) ஆகவே இத் தர்மம் மக்களின் சொத்தாகும். இதை நாம் அனுபவத்தில் உணர்ந்தால்த்தான் நம்பிக்கையுண்டாகும். ஆகவே எல்லோருக்கும் அன்னையும் பிதாவாகவும் விளங்கும் அந்த சத்தியமான நித்தியமான இறைவனிடம் நாம் அணுகி உறவாட வேண்டும். இதற்கு அவரின் திருவிளையாடல்களையும் லீலைகளையும் ஐந்தொழிலின் மகிமை மூலம் அறிந்து அனு பவித்து உணர்ந்துகொள்ள வேண்டும். இவ் வாறு உணர்ந்துகொண்டால் ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்ற எண்ணம் வலுப் படும். ஊரில் உறவில் நாட்டில் உலகில் ஒற்றுமை நிலவும் இதுவே உலக சமாதானத் திற்கான ஒரே வழியாகும். பகையில்லாத குழப்பம் இல்லாத அமைதியான வாழ்வை வாழலாம். இதற்கு இறைவனின் அனுக்கிர கமே முக்கியமானது, எனவே இறைவனின் அனுக்கிரகம் வேண்டிப் பிரார்த்தித்து நாமும் நம்மைச் சூழ்ந்திருப்பவர்களும் அமைதியாக வாழ்வோமாக.

தியானம் என்பது மன ஒருமைப்பாட்டோடு கூடிய கடின உழைப்பு. அது நமக்கு நாமே அமைத்துக்கொள்ளும் ஒழுக்கநெறியே தவிர பிறருக்குக் கட்டுப்பட்டுச் செய்யும் ஒரு பயிற்சி அல்ல. அது ஒருவனை தனிமைப்படுத்திக்கொள்ளும் செயல் அல்ல. ஆனால் அன்றாட வாழ்க்கையின் உயர்ந்த பணியாகும். தியானத்தில் ஈடுபட்டிருக்கும் மனம் அன்பினாலும் ஒழுக்கத்தினாலும் நிறைந்திருக்கும். தியானப் பயிற்சி எந்த இடத்திலும் எப்பொழுது வேண்டுமானாலும் அமையலாம். ஈடுபாட்டுடன் செய்யப்படும் எந்தப் பணியும் தியானமாக அமைந்துவிடுகிறது. "கண்ணை மூடிக் கொண்டு தன்னையும் சுற்றுப் புறத்தையும், உலகத்தையும் மறைத்திருக்கும் நிலை தியானமாகாது. கண்ணைத் திறந்துகொண்டு விழிப்புணர்ச்சியுடன் உடல் உறுப்புக் களையும் மனத்தையும் ஒருமைப்படுத்திச் செயற்படும்போது ஒருவன் தியான நிலையை அடைகின்றான்.

சுறுசுறுப்பே மனிதனின் அரும்பொருள்.

(தொடர்ச்சி...

திருச்சதகம்

நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்–

(யாழ்ப்பாணம் – காரைநகர்)

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

109. செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதி கண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளார்மூ தூட்ட மறுத்தனனே.

ப-ரை:

வெறி வாய் அறுகால் உழுகின்ற பூமுடி- தேன் பொருந்திய வாயினையுடைய வண்டுகள் கிண்டுகின்ற கொன்றை மலர் மாலையை அணிந்த திருமுடியினையுடைய, உத்தர கோச மங்கைக்கு அரசே- திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசனே, வழி நின்று நின் அருள் ஆர் அமுது ஊட்ட- நான் செல்லும் வழியின் இடையில் நின்று நினது திருவருளாகிய அரிய அமிர்தத்தினை நீ வலிய வந்து உண்பிக்கவும், மறுத்தனன்- அதனை நுகர்ந்து உடனே கதி பெறுதற்குத் தடையாகிய பிராரத்த வினையையுடைய யான் மறுத்தனனாய் செழிகின்ற தீ புகு விட்டிலின்- சுவாலிக்கின்ற விளக்குச் சுடரில் வீழ்ந்திறக்கின்ற விட்டிற் பூச்சியைப்போல, சில் மொழியாரின் பல் நாள் விழுகின்ற என்னை- சிலவாகிய மொழியினையுடைய மகளிரிடத்து பல நாள் விழுந்து கிடந்து அழிகின்ற என்னை விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

திருவுத்தர கோசமங்கைக்கு அரசே, வழியின் இடையில் நின்று நின் திருவருளாகிய அரிய அமிழ்தத்தினை நீ வலிய வந்து உண்பிக்கவும், அதனை ஏற்றுக்கொள்ளாது, மறுத்தன னாய், விளக்குச் சுடரில் வீழ்ந்தழியும் விட்டிற் பூச்சியைப் போல சின் மொழியாரிற் பன்னாள் வீழ்ந்து அழிகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

செழிகின்ற தீ எனப் பொதுப்படக் கூறினும் ஈண்டுச் சுவாலித்து எரிகின்ற விளக்கின் சுடர் எனக் கொள்க; விட்டில் விழுவது அதன் கண்ணேயாதலின், தீயில் விழுந்து அழிகின்ற விட்டில் போலச் சின்மொழியாரின் விழுந்தழிகின்ற என்னை எனக் கொள்க. சின்மொழி-

சிலவாகிய மொழி. சின்மொழியாரென்றது சிலவாகிய மொழியினையுடைய மகளிரை. "தீவயின் மேனியன் சிற்றம்பலமன்ன சின்மொழியை" (343) எனத் திருக்கோவையாரில் வருதலுங் காண்க. சின்மொழியார் என்றார் எனினும் செந்துவர் வாய் முதலியவற்றையுடைய அழகிய மகளிர் எனக் கொள்க. "திறமலி சின்மொழிச் செந்துவர் வாயினை" (திருவாரூர் மும்மணிக் 24) எனப் பிறரும் கூறுதல் காண்க.

வெறி- கள். ஈண்டுத் தேனை உணர்த்தியது. வெறிவாய் பூ எனக் கூட்டி நறுமணம் பொருந்திய பூ எனினும் அமையும். அறுகால் என்பது சினையாகு பெயராய் ஆறுகால்களை யுடைய வண்டை உணர்த்தியது. "அறுகாணிறை மலர்" (126) எனத் திருக்கோவையாரினும், "அறுகால் வண்டாடு தண்பொழில்" (சுந் 71:0) எனத் தேவாரத்தும் வருவன காண்க.

பூ எனப் பொதுப்படக் கூறினும் கொன்றைப் பூமாலையே கொள்ளப்பட்டது. இறை வனுக்குரிய அடையாளப் பூமாலை அதுவாகலின். "கண்ணி கார்நறுங் கொன்றை காமர் வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா. கடவுள்) எனப் பிறரும் கூறுதல் காண்க. பூ முடி- கொன்றைப் பூ மாலையை யணிந்த முடி.

"வண்டணை கொன்றையும்..... முடியுடையான்"

நாவு 85:2

"வெறிக் கொன்றை மாலை முடியீர்"

நாவு 95:10

"நாறுபூங்கொன்றை முடியார் தாமே"

நாவு 291:4

"குலையேறு நறுங் கொன்றை முடிமேல் வைத்து"

நாவு 303:2

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

வழி நின்று என்றது அடிகள் குதிரை கொள்ளச் சென்ற வழிக்கண் இடைஇன்று என்றவாறு. அருளாரமுது- அருளாகிய அரிய அமுது, "அருளாரமுதப் பெருங்கடல் வாய்" (பிரார்த்தனைப் 3) என வருதல் காண்க. அமுதூட்ட மறுத்தனன் என்றது இறைவன் திருவருள் பெற்றபின் இறைவனைப் பிரிதற்கேதுவாகிய பிராரத்த வினையைத் தம்மேலேற்றிக் கூறினார்.

"வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னன்வினை யேனென் விதியின்மை யால்"

(அடை 10)

என்பது ஈண்டு அறியற்பாலது. "மறுத்தனன்" என்ற முற்று எச்சப் பொருளில் வந்தது. மறுத்தனனாய் விழுகின்ற என்னை என இயையும்.

இதன் கண், சின்மொழியாரிற் பன்னாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய் என்றதனால் பிரபஞ்ச வைராக்கியமும், கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்டவாறு காண்க.

110. மறுத்தனன் யானுன் அருளறி யாமையின் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள் தம் பொய்யினையே.

ப-ரை:

என் மணியே- என் மாணிக்கமே, உத்தர கோசமங்கைக்கு அரசே- திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினை பொறுப்பர் அன்றே- பெரியவராயுள்ளவர்கள் இழிந்த நாய் போன்றவர்களது பொய்ச் செயல் களைத் தம் பெருமையால் பொறுத்துக்கொள்ளுவார்கள் அல்லவா? யான் உன் அருள் அறியாமையில் மறுத்தனன்- அடியேன் நினது திருவருளின் அருமையை அறியாமைக்கேதுவாகிய பிரார்த்தவினையுடைமையால் அதனை மறுத்து விட்டேன், நீ எனை வெறுத்து விட்டிடுதி கண்டாய்- அதனால் நீ அடியேனை வெறுத்துக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும், வினையின் தொகுதி ஒறுத்து எனை ஆண்டுகொள்- எனது பிராரத்தவினையின் தொகுதி முழுவதையும் கடிந்து அடியேனை ஆண்டு கொண்டருளுக.

என் மணியே, உத்தரகோசமங்கைக்கு அரசே, பெரியோர் சிறு நாய் போன்றவர்களது பொய்யினைப் பொறுத்துக் கொள்வார்களல்லவா? அடியேன் நினது திருவருளின் அருமையை அறியாமைக்கேதுவாகிய பிரார்த்தவினையுடைமையால் அதனை மறுத்துவிட்டேன்; நீ எனை வெறுத்துக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். எனது பிரார்த்தவினையின் தொகுதியை வெறுத்து ஆண்டு கொண்டருளுக என்பதாம்.

யான் உன் அருளறியாமையின் மறுத்தனன் எனக் கூட்டிப் பொருள் கொள்க. அருள் என்றது அருளாரமுதத்தினை; "நின் னருளாரமு தூட்ட மறுத்தனன்" (நீத் 5) என வந்தமை காண்க. அருளை மறுத்தமைக்குப் பிரார்த்தவினையின் தொகுதியே ஏதுவாதல் "வினையின் தொகுதியொறுத்து" என மேல் வருதலானும் அறியப்படும். வினை என்றது பிரார்த்த வினையை, ஒறுத்து- கெடுத்து எனினுமாம். நாய்கள்- நாய் போன்றவர்கள், பொய்- பொய்ச் செயல்.

இதன் கண், மறுத்தனன் யானுன் அருளறியாமையாயின் எனவும் வெறுத்தெனை விட்டிடுதி கண்டாய் எனவும் வினையின் தொகுதி யொறுத்தெனை யாண்டு கொள் எனவும் வருவனவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் பெறப்பட்ட வாறு காண்க.

(தொடரும்...

இன்பங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனம் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு சமயம் காட்டும் வழி.

"எல்லாம் அவன் செயல் அவனன்றி ஓர் அணுவும் அசையாது" இது ஏகாந்த நிலை.

"நன்றே வரினும் தீதே விளைகினும் நானறிவது ஒன்றுமில்லை" இது யதார்த்த நிலை.

"உனக்கே பாரம் எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனது என்று அளித்துவிட்டேன்" இது சரணாகதி நிலை.

இந்த மூன்று நிலைகளிலும் மனதைப் பக்குவப்படுத்தினால் இன்ப துன்பங்கள் ஒருவனைப் பாதிப்பதில்லை.

கடுமையான போராட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றிகளே மதிப்புடையவை.

இன்பம் எங்கே?

–திரு மு. செல்லத்தம்பி அவர்கள்–

"இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு
அது எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு"

உலகம் இயற்கை ஆனது. இந்த இயற்கையான உலகமானது தன்னகத்தே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற அமைப்புக்களை உருவாக்கி பரந்து பட்ட அளவில் தன் விஸ்வரூபத்தை நிலை நாட்டி உள்ளது. இப்படியாக உதயம் கொண்ட அமைப்புக்கள் யாவும் இன்பத்தின் எழுச்சியையே வியாபித்து இருந்தது.

இக் காலப்போக்கானது பரிணாம வளர்ச்சியின் பங்களிப்பினால் ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற எண்ணிலடங்காத உயிர்களை தோற்றுவித்திருந்தது. இப்படி தோற்றுவிற்றிருந்தபோதும் இவை யாவும் உலகின் இயக்கத்திற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் பகுப்பாய்வு கொண்ட மனித வர்க்கத்தை ஆண்டவன் சிருஷ்டித்தான்.

உயிர்கள் யாவும் இன்பத்தை உவப்பது இயற்கையே. இந்த இயற்கையானது எல்லா உயிரினங்களினாலும் தேடற்பாடான நிதியங்களாகவே என்றும் திகழ்ந்து வருகின்றது. வித்தாகி முளையாகி விளைவதாகி விளைவிற்கும் பொருளாகி மேலுமாகி என்ற கோட்பாட்டிற்கிணங்க உலகம் செழுமையும், வழமையும், திறமையும் பெற்று இனிமைக் களஞ்சியமாக ஏறுநடைபோட்டு எழுந்து நின்றது. இந்த உற்பத்திக் காலத்தில் பகுத்தறிவைக் கொண்ட மனிதன் படைக்கப்பட்ட போதும் அவன் விலங்குகளோடு, விலங்குகள் ஆகவே வாழ்ந்து வந்தான். விலங்குகளிற்கும் அவனிற்கும் வித்தியாசம் ஏதும் தோன்ற வில்லை. இருந்தபோதும் இயற்கையின் உயிரப்பினாலும் இறைமையின் தாபத்தினாலும் படிப்படியாக முன்னேறி வந்த மனிதன் காட்டிலுள்ள தானியங்கள், காய், கனி, கிழங்கு வகைகளையும் கரடு முரடான ஆயுதங்களால் மிருகங்களை வேட்டையாடி அவற்றின் இறைச்சியையும் உணவாகக் கொண்டான். வேட்டையாடிய மிருகங்களின் தோலையும், மரவுரிகளையும் ஆடையாகப் போர்த்திவரத் தலைப்பட்டான். இயற்கையாகவே காட்டில் தோன்றிய தீயில் வெந்த மிருகங்களின் இறைச்சியை உணவாகக் கொண்டான். நெருப்பின் உபயோகத்தைக் கண்டறிந்து அதில் உணவு வகைகளை வேக வைத்து உண்ண உண்ண உய்த்துணர்வும் புரிந்துணர்வும் சிந்தனைகளும் மேலோங்கத் தொடங்கின. ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாகத் தோன்றிய மனிதன் நாளடைவில் சமூகமாக, ஊர்களாக, நாடுகளாக பல்கிப் பெருகி விரிவடைந்து உலகம் என்ற போர்வையில் தலைதூக்கி நின்றான்.

ஆண்டவன் மனிதனைப் படைத்தான். அவன் மனிதனாக வாழ மகத்தான சாதுரியங்கள் வேண்டுமல்லவா? கல்வி, கலாசாரம், பழக்க வழக்கம், பண்பாடு, பொருளாதாரம் என்பன வெல்லாம் வேண்டுமல்லவா அவற்றை அவன் யாரிடம் எங்கே எப்படி பெற்றுக்கொள்வது

என்ற கட்டாயம், தேவையான காலமது. இவ் வேளையில்த்தான் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற வளமான வாக்கியத்தை உலக மேடை மத்தியிலே மத்திம அறிவைப்பெற்ற மாந்தரின் மனங்களிலே அறியாமை நிறைந்த அற்பர் களின் அத்திவாரப் பாதையிலே அணி அணி யாய் எடுத்துக்காட்டி அன்னவரை வாழவைக்க தணியாத தாகத்துடன் தரணியில் உதித்தன பல தார்மீக சக்திகள்.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்றும், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றும், மனித வாழ்விற்கு தேவையான அனைத்து விழுமியங்களையும் ஈர் அடி குறள்மூலம் வான் புகழ் கொட்டி நிற்கும் தமிழ் நாட்டிற்கும், மற்றும் பல்வேறு மொழிகளைக் கொண்ட உலகினருக்கும், நலம்பெறவே எடுத்து விரித்துக்கூறி நல்வாழ்விற்கு வித்திட்ட வள்ளுவப் பெருமானும், அறநெறிகளையும் நீதி நூல்களையும் கவிச் சிறப்பால் வாரி வழங்கி நெல்லிக்கனியைத் தின்று நீடு வாழ்ந்த தமிழ் மூதாட்டி ஔவையாரும், ஆலைகள் செய்வோம் கல்விச் சாலைகள் செய்வோம், காசினிகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சி யில் கேட்பதற்கோர் கருவி செய்வோம், சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம். சந்தி தெருப் பெருக்கம் சாத்திரம் கற்போம், என்றும் கனவை நனவாக்கிச் சென்ற மகாகவி பாரதி போன்ற மாபெரும் புலவர்களும் மற்றும் திரு மூலர், ஆழ்வார்கள், சித்தர்கள், ஞானிகள் போன்ற ஆன்மீக தத்துவர்களும் உலகின் முன்னேற்றத்திற்காக கிடைத்த ஏணிப்படி களாகத் தோன்றினர்.

இத்தகைய சாதனையாளர்களின் சாதுரியங்களால் உலக மக்கள் பல வழிகளி லும் முன்னேற்றம் கொண்டு விளங்கியது உண்மைதான். ஆனால் இன்றைய உலகிலே நாடளாவிய ரீதியிலே ஆங்காங்கே நடப்பது தான் என்ன? மனிதனாகப் பிறந்தவன் மனிதாபிமானத்துடன் வாழ்கின்றானா? நீதியை வெற்றிகொண்டு அதன் நெடுந்தூர வழிகளை பிளவு செய்து நேர்மையற்ற முறையில் வாழ் பவர் எத்தனைபேர் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் போலி உத்தமர்கள் எத்தனைபேர் கொலை, களவு, கள், காமம், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது என்ற பஞ்சமா பாதகங்களைப் புரிவோர் எத்தனை பேர். இவர்கள் யார்? இவர்கள் எங்கே போகி றார்கள்? எதைத் தேடிப் போகிறார்கள்? இம்மைக்கும் மறுமைக்கும் இரை தேடவா புறப்படுகின்றார்கள்? நாட்டின் நலன்களைப் பல்மடங்காகப் பெருக்கி அதை நற்பாதையில் நடாத்திச் செல்லும் நல்லவர்களா இவர்கள், நிலையற்ற வேசம் தாங்கி நாட்டையே பாழ் படுத்தும் நீசர்கள் அல்லவா இவர்கள். இவர் களும் மனிதர்கள்தானா? இவர்கள் யாவரும் ஆறறிவில் ஓர் அறிவு இல்லாதவர்களேயன்றி வேறு யார்? யாரும் இல்லை.

மனிதன் மனிதனாக வாழ மாண்பு மிகு எண்ணங்கள் அவன் மனதில் குடியேற வேண்டும். ஒழுக்கமும் தூய சம வாழ்வும் கொண்டவனாக அவன் திகழ வேண்டும். இல் லறம் தன்னில் நல்லறம் பெருக்கி இன்புற்று அவன் வாழ வேண்டும். இரு வகை இன்பங் களிலே சிற்றின்ப வாழ்வின் சிறப்புத் தன்னை அவன் சீராக வென்றெடுக்க வேண்டும். அதற் காக இல்லறம் துறந்து துறவறம் பூணவேண் டும் என்று யாரும் கூறுவதற்கில்லை. ஆனால் சிற்றின்ப வாழ்வோடு மட்டும் அவன் வாழ்வு முடிந்துவிடுவதென்று யாரும் கொள்ள முடி யாது. மண்ணில் உதித்த உயிர் மண்ணில் மடிவதன்றே. மானிலம் விடையேற்று நிற்கிறது. இந்நிலையில் பிறந்த மனிதன் மடிவதற்குள் எவ்வகையில் வாழ வேண்டும்? மனிதன் என்ற சொல் மனிதாபிமானம் என்ற அர்த்தத்தையே

பொதிந்து நிற்கின்றது. எனவே மனிதன் ஏன் பிறக்கின்றான் பிறர்க்கு நன்மை செய்வதற்கே அவன் பிறக்கின்றான். அதாவது தான் வாழ்வதோடு பிறர்க்கும் நன்மை பயக்கும் வகையில் அவன் வாழவேண்டும். யான் பெற்ற இன்பம் இவ் வையகமும் பெறுக என்றும், தன்னுயிர்போல் மன்னுயிரையும் காக்கும் மாட்சிமையும் அவன் வாழ்வில் பொலிய வேண்டும். தான் கெட்டாலும் தக்கார் கெடாது இருக்க அவன் பார்த்துக்கொள்ள வேண்டும். உண்மையே பேச வேண்டும். நன்மையே செய்ய வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் கருணையும் கொள்ள வேண்டும்.

தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று சகல சிறப்புக்களோடும், சீர்வரிசையோடும் ஒருவன் வாழலாம். அவன் அப்படி செல்வச்சிறப்போடு வாழ்ந்தபோதும் சமுதாயமோ ஊரோ நாடோ அவனைப்பற்றி அலட்டிக்கொள்வதில்லை. ஆனால் சமுதாயத்திற்கோ ஊர் உலகத்திற்கோ தன்நலம் அற்ற நன்மைகளையோ தேவைகளையோ, சேவைகளையோ தியாக உணர்வோடு செய்பவனேயாகில் அவன்தான் மனிதன் என்று முத்திரை குத்தப்பட்டவனாக எல்லோராலும் போற்றப்படுகின்றான். மதிக்கப்படுகின்றான். தன் பிறப்பை உணர்ந்து உண்மையான இன்பத்தையும் மனத்தூய்மையையும் அடைந்து விடுகின்றான். இம்மைக்கும் மறுமைக்கும் உயர்வினை தேடிக்கொள்கிறான். பிறவிப் பயனை அடைந்து விடுகின்றான். இதுவே பேரின்ப நிலையென்றால் மிகையாகாது.

"நாட்டுக்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார். பொதுநலத்தில் தானே நாள் முழுதும் கண்ணாய் இருந்தார். ஏற்றுக் கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார். தம் இனிய குடும்பம் ஒன்றுக்குத்தான் வறுமையைத் தந்தார்" இது முன்னாள் தமிழக முதல்வர் சி.என். அண்ணாத்துரை அவர்களை மேற்கோள்காட்டி கவிஞர் கண்ண தாசன் வரைந்த பாடல் வரிகள்.

இன்பத்தின் பேறுகள் சிந்திக்க முடியாத அளவுக்கு விந்தையிலும் விந்தையாக இன்று இம் மண்ணுலகில் வேரூன்றி வளர்ந்து கிளைவிட்டு ஒளிவீசிக்கொண்டிருப்பதை உற்று நோக்குவோமானால் ஆதிகாலத்தில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதனின் நிலை இன்று என்னவாயிற்று. தங்கள் சுயநலங்களை, சுக போகங்களை, உடல் பொருள் ஆவி அனைத்தையும், துச்சமாக மதித்து வாழ்நாள் முழுவதும் இறுதி மூச்சுவரை உலக வாழ் மக்கள் எல்லா வளங்களுடனும் சுபீட்சமாக வாழ்வதையே இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்த விஞ்ஞானிகளின் சாதனைகள் எத்தனை.... எத்தனை.... உண்மையான பேர் இன்பம் உண்டாகும் போது அது இயற்கையாகவே தியாகமாக மாறி விடுகிறது. இதனால் அன்றோ தாம் வாழும் சூழலைத் தவிர வேறு எவற்றையும் அறிந்துகொள்ளாத மனிதன் இன்று அகில உலகம் முழுவதையுமே தன் உள்ளங்கையிலே வைத்து உற்றுநோக்குகிறான்.

தங்கள் ஒப்பற்ற சாதனைகளால் உலக ஓட்டம், எழுச்சிகொள்ள வேண்டும் என்பதையே பேரின்பமாகக் கொண்டு மறைந்தும் மறையாது வாழ்பவர்கள் மனிதர்களே. அவர்களே மாமனிதர்கள்.

மனித இதயங்கள் எப்போதெல்லாம் அதர்மத்தாலும், அன்பின்மையினாலும் வறண்டு போகின்றதோ, அப்போதெல்லாம் அன்பின் விதைகளை ஆழமாக ஊன்றி, அன்புத் தத்துவத்தை செழித்துப் பரவச் செய்யவே இறைவன் அவதரிக்கின்றான்.

அகங்காரம் வரும்போது அதன்பின்னே அவமானமும் வந்து சேரும்.

திருவிளையாடற் புராண வசனம்

(பதின்மூன்றாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

கடல் சுவற வேல் விட்ட படலம்

உக்கிர பாண்டியர் பூமியெங்கும் வெண்குடை நிழற்ற வீற்றிருக்கு நாளிலே, வேத விதிப்படி எண்ணில்லாத யாகங்கள் செய்தார். அசுவமேதந் தொண்ணூற்றாறு செய்தபொழுது, சதமகனாகிய இந்திரன் அவர்மேற் பொறாமைகொண்டு, "நாடெல்லாம் வளஞ்சுரந்து பொன்னுலகம் போலப் பொலித லாலன்றோ இப்பாண்டியன் யாகஞ் செய்கின் றான்" என்று நினைந்து, ஒரு சூழ்ச்சிசெய்து, வருணனை அழைத்து, "கேளாய், வருணனே! நீ ஊழிக்காலத்திலே ஏழுலகங்களையும் ஒருங் கழிக்கும் கடலாய் உருத்துச்சென்று, வளைந்து, மதுரையை அழிப்பாயாக" என்றான்.

அது கேட்ட வருணன், தனக்கு மேல் விளைவதை அறியாமையால், அவ்வாறே செய்யத் துணிந்தான். அர்த்த ராத்திரியில் சமுத்திரம் அண்ட கூடத்தை எட்டி முட்டிப் பெருக்கெடுத்தது. மதுரையின் கீழ்த்திசையை நணுகும்பொழுது, சோமசுந்தரக் கடவுள் உக்கிர பாண்டியருக்குச் சொப்பனத்திலே சித்தராய்த் தோன்றி, "பாண்டியனே! சமுத் திரம் உன் மதுரை நகரத்தை அழிக்கும் பொருட்டுப் பெருகி வருகின்றது; நீ விரைந்து எழுந்து போய், உன் வேற்படையை எறிந்து, வெற்றி பெறுவாயாக" என்று அருளிச் செய் தார். உடனே உக்கிர பாண்டியர், கைகளிரண் டுஞ் சிரசின்மேல் குவிய, நாத் துதிக்க, விழித் தெழுந்து, சயனத்தினின்று நீங்கி, வாயில்கள் பல கடந்து; மந்திரிகளோடு விரைந்து போய், பேரொலியோடு வாரா நின்ற சமுத்திரத்தைக் கண்டு, எண்ணிறந்த அதிசயத்தராய் நின்றார். அப்பொழுது கனவில் வந்த சித்தர் நனவில் வந்து, "அப்பனே! நீ காலந்தாழ்ப்ப நிற்ப தென்ன? சமுத்திரம்போல வந்த இப் பகை வனை வலி கெடும் வண்ணம் வேற்படையை எறிந்து, பூமியைக் காப்பாயாக" என்றார். உடனே உக்கிரபாண்டியர் வேற்படையை வலமாகச் சுழற்றி எறிந்தார். அவ் வேற்படை மடுத்தவுடனே சமுத்திரம் சு.ரென வறந்து, முன்னை வலிகெட்ட பகைவர் காலில் வணங்குமாறு போலப் பாண்டியருடைய காலின் மட்டதாயிற்று. அப்பொழுது பூமியின் கண்ணே நின்ற சித்தர் மறைந்து, ஆகாயத் திலே உமாதேவியோடும் இடபாரூடராய் விளங்கி நின்றார். உக்கிர பாண்டியர் சிவ பெருமானைத் தரிசித்து, அடியற்ற மரம்போலப் பூமியில் விழுந்து, நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலி செய்து, துதித்துக்கொண்டு, பூமியின் மேலே நடந்து போவாராயினார். சிவபெருமான் பஞ்ச துந்துபிகள் ஒலிக்க, பூதங்கள் வணங்க, வேத கீதத்தினாலே திக்குக்களெல்லாம் செவிடுபட, தேவர்கள் துதிக்க, ஆகாய மார்க்க மாக வந்து, தமது திருக்கோயிலினுள்ளே புகுந்தருளினார். அஞ்சலி செய்து சேவித்துக் கொண்டு அருகுற வந்த உக்கிர பாண்டியர் திருக்கோயிலிற் சென்று, சிவபெருமானை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, மீண்டு மகளிர்கள் அட்டமங்கலம் ஏந்த நோக்கி,

தமது திருமாளிகையினுள்ளே புகுந்தார். மதுரைக்கும் சமுத்திரத்துக்கும் நடுவிலுள்ள வயல்கள் நகரங்களெல்லாம் சோமசுந்தரக் கடவுளுக்கே சேர்த்து, உலகுக்கெல்லாம் களை கண்ணாய் வீற்றிருந்தார்.

பதினான்காவது
இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

உக்கிர பாண்டியர் அரசு செய்து கொண்டிருக்கும் நாளிலே, கிரகநிலை பிழைத்தமையால் மழையில்லாதொழிய, தமிழ் நாடுகண் மூன்றும் பஞ்சத்தினால் வருத்த முற்றன. அது கண்ட சேர சோழ பாண்டிய ரென்னுந் தமிழ் வேந்தர் மூவரும் அது தீருமாறு நோக்கி, பொதிய மலையிற் சென்று, அகத்திய முனிவரை அடைந்து, தங்கள் நாட்டிலே மழை வறந்தமையைச் சொன்னார் கள். அதுகேட்ட அகத்திய முனிவர் கிரக நிலையை ஆராய்ந்து, அம் மூவரையும் நோக்கி, "அரசர்களே! சூரியன் செவ்வாய்க்கு முன் செல்லச் சுக்கிரன் பின் செல்லுதலி னாலே இவ்வுலகத்தின்கண்ணே பன்னிரண்டு வருடம் மழை பெய்யாது. நீங்களும் மழை பெய்விப்போனாகிய இந்திரனிடத்தே சென்று கேளுங்கள்" என்றார். தமிழ் வேந்தர் மூவரும் அகத்திய முனிவரை நோக்கி, "நாம் இந்திர னிடத்தே செல்வது எங்ஙனம்? என்றார்கள். அகத்திய முனிவர் அவர்களை நோக்கி, "நீங்கள் சோமவார விரதத்தை நோற்று, சிவ பெருமானுடைய திருவருளைப் பெற்று, ஆகாய மார்க்கமாகச் செல்லக் கடவீர்கள்" என்று சோமவார விரதம் நோற்கும் முறைமை யைச் சொல்லலுற்றார்.

"உத்தம தேவர்களுள்ளே உத்தமர் சிவபெருமான், உத்தம சக்திகளுள்ளே உத் தமி சிவசக்தி, உத்தம விரதங்களுள்ளே உத்தமம் சோமவார விரதம் என்று உத்தம மாகிய வேதம் முதலிய நூல்களெல்லாம் சொல்லும். இத் துணைப் பெருஞ் சிறப்பின தாகிய சோமவார விரதத்தை மேரு மந்தரம், காசி முதலிய ஸ்தலங்களில் இருந்து நோற்ற லால் வரும் பயனினும் மதுரையிலிருந்து நோற்றலால் வரும் பயன் கோடி மடங்கு அதிகமாகும். சிவபெருமான் உமையோடு கூடு தலாற் சோமரெனப் பெயர் பெறுவர். சோம ருக்கு உரிய வாரமாதலால் சோமவாரம் எனப் படும். இது பற்றியே மதுரையினிருந்து நோற் றல் விசேடமெனப்பட்டது. இன்னும் அமாவாசி யோடு கூடிய சோமவாரம் மிக விசேடமாகும். பாவத்துக்கு அஞ்சி நீதி வழியே ஈட்டிய பொருள் கொண்டு நோற்கும் இவ் விரதப்பேறு ஒன்று அநந்தமாய் வளரும்.

இனி, விரத விதானஞ் சொல்வோம்:-

கார்த்திகை மாதத்திலேனும் மார்கழி மாதத்திலேனும் மல மாசம் ஒழிந்த மற்றை மாசங்களிலேனும் முதற் சோமவாரந் தொடங்கி நோற்றல் வேண்டும். பானுவாரத்தில் இரவிலே உணவின்றி நிலத்திலே நித்திரை செய்து, வைகறையிலே எழுந்து, மீனாட்சியம்மை யோடு கூடிய சோமசுந்தரக் கடவுளைத் திரு வாலவாய்த் தானமாகிய துவாத சாந்தத்திலே தியானஞ் செய்து, சௌசம் தந்த சுத்தி முதலிய நித்திய கருமங்களெல்லாவற்றையும் முடித்து, காமம் முதலிய குற்றங்களை முற் றக் கடிந்து, பொற்றாமரை வாவியை அடைந்து, விபூதி, வில்வத்தடி மண், குசை, கோமயம், திலகம் என்பவற்றைச் சிரசிலே

வைத்து, கையிலே பவித்திரஞ் சேர்த்து, மனம் வாக்குக் காயமென்னும் மூன்றும் ஒருப்பாடு பொருந்தச் சங்கற்பஞ் சொல்லி, சோமசுந்தரக் கடவுளைத் தியானித்து, "சுந்தரேசுரரே! இப் பூமியிலுள்ள தீர்த்தமெல்லாம் ஆடிய பயனை இங்கே தந்தருளும்" என்று ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலே ஈரந் துவட்டி, தோய்த் துலர்ந்தனவாய், வெண் ணிறத்தனவாய் உள்ள சுத்த வஸ்திரம் இரண்டு தரித்து, விபூதி உருத்திராட்சம் என்னும் சிவசின்னங்கள் இரண்டையும் விதிப் படி தரித்துக்கொண்டு, சோமசுந்தரக் கட வுளை வெள்ளை மந்தாரம், முல்லை, மல் லிகை, இருவாட்சி, வெள்ளெருக்கு, வெண்டா மரை முதலிய வெண் பூக்களினாலும் வில் வத்தினாலும் அறுகினாலும் அட்சதையினா லும் திலகத்தினாலும் பஞ்சாட்சரங்கொண்டு பூசை பண்ணுக.

மந்திரங்களெல்லாவற்றுள்ளும் உயர்ந் தது பஞ்சாட்சரம். பத்திர புஷ்பங்களெல்லா வற்றுள்ளும் உயர்ந்தது வில்வம். ஆதலால், இவ்விரண்டினாலும் சோமசுந்தரக் கடவுளைப் பூசை பண்ணுக. வில்வம் சிவபிரானுடைய இச்சா ஞானக் கிரியை வடிவாய் உள்ளது. புழுக்கடி, எச்சம், சிலந்தி, நூல், மயிர் என் னும் இவற்றோடு கூடியதும், இதழ் சுருங்கின தும் நெரிந்ததும் தானே விழுந்ததும் காற் றினால் விழுந்ததும் ஆகிய வில்வம் சாத்த லாகாது. வில்வ மரத்தைத் தரிசித்து வலஞ் செய்து வணங்கின், இரவினும் பகலினுஞ் செய்த பாவம் போம். வில்வ மூலத்தை அடைந்து மூன்று நாள் ஊணும் உறக்கமும் இன்றி அரகர முழக்கஞ் செய்பவர் பஞ்ச மகா பாதகங்களினின்றும் நீங்குவர். அந்திய காலத்திலே வில்வத்தடி மண்ணை உடம்பிலே பூசிக்கொண்டவர் சிவகதியை அடைவர்.

பூசை செய்வோர் கை கால் சுத்தி செய்து, விபூதி உருத்திராட்சந் தரித்து, பிராணாயாமம் செய்து, சங்கற்பஞ் சொல்லி, புண்ணியாகம் பண்ணி, இடையூறு வாராமைப் பொருட்டு முன்னர் விநாயகரைப் பூசிக்க. அதன் பின் "சோமசுந்தரேசரே! உமது அநுஞ்ஞையினாலே சோமவார விரதத்தை அநுட்டிக்கின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்து, சத்திய ஞானானந்த வடிவாகிய சோமசுந்தரக் கடவுளை, கோடி சூரியர் போலும் ஒளியையும், கோடி சந்திரர் போலும் குளிர்மையையும், பளிங்கு நிறத்தினதாய் வட கிழக்கு நோக்கிய ஈசான முகமும், பொன் நிறத்தினதாய்க் கிழக்கு நோக்கிய தற்புருட முகமும், கரு நிறத்தினதாய்த் தெற்கு நோக் கிய அகோர முகமும், செந்நிறத்தினதாய் வடக்கு நோக்கிய வாமதேவ முகமும், பால் நிறத்தினதாய் மேற்கு நோக்கிய சத்தியோ சாத முகமும் ஆகிய ஐந்து திருமுகங்களை யும், முகந்தோறும் மும்மூன்றாகப் பதினைந்து கண்களையும், பளிங்கு நிறத்தையுடைய திருமேனியையும், பால சந்திரனை முடித்த சடையினையும், பத்துத் திருக்கரங்களையும், அவற்றுள் வலக்கரங்களிலே சக்தி அபயம் சூலம் கட்டுவாங்கம் தமருகம் என்பவற்றையும், இடக்கரங்களிலே வரதம் மாதுளம் பழம் சர்ப் பம் செபமாலை நீலோற்பலம் என்பவற்றையும், இரண்டு திருவடிகளையும், முப்பத்திரண்டு இலக்கணங்களையும், பதினாறு பிராயத்தை யும் உடையவராகத் துவாத சாந்தத்திலே தியானித்து, சிவலிங்கப் பெருமானை ஆசன மூர்த்தி மூலத்தினாலே பூசித்து எண்ணெய்க் காப்பு, மாக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, நாரத்தம் பழச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தமரத்தம்

பழச்சாறு, குளஞ்சிப் பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, வாழைப்பழம், மாம்பழம், பலாப் பழம், தேங்காய்த் துருவல், இளநீர், சந்தனக் குழம்பு, நவகடம் என்பவைகளாலே அபிஷேகஞ் செய்து, திருவொற்றாடை சாத்தி, சந்தனம் கஸ்தூரி புனுகு, பச்சைக் கர்ப்பூரம் குங்குமப்பூ, அட்சதை, அறுகு, வில்வம் வெண் பூக்கள், வெண்பட்டாடை, இரத்தினாபரணங் கள் என்னும் இவைகளைச் சாத்துக. பஞ்சாட் சரத்தைப் பெண்பாலுக்கு இயைய உச்சரித்து, மீனாட்சியம்மையையும் இவ்வாறே பூசை பண்ணுக பின்பு அன்ன வகைகளும் கறி வகைகளும் பண்ணியங்களும் பானீயமும் நிவேதித்து, தாம்பூலமும் முகவாசமுங் கொடுத்து, தூபமும் தீபமுஞ் சுற்றி, கண் ணாடி, குடை, சாமரம், வெண்புடவை, ஆல வட்டம் என்பவற்றைக் காட்டி, சகத்திர நாமஞ் சொல்லி, வில்வத்தினாலே அருச்சனை பண் ணுக. அருச்சனை செய்தபின், "அடியேன் செய்யுங் குற்றங்களெல்லாவற்றையும் பொறுத் தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து, மும் முறை வலஞ் செய்து, வணங்கித் துதித்து, விரும்பிய வரங்களை வேண்டுக.

இப்படி நோற்பவர் விவாகப்பேறு, மக்கட்பேறு, நல்வாக்கு, கல்வி, பொன், போகம் பகைவரை வெல்லுதல், நோய் நீக்கம், அகால மரணமின்மை, அரசு முதலிய பயன்களை வேண்டிய வேண்டியபடியே பெறுவார்கள்.

பரார்த்த லிங்கத்தைத் தீண்டுதற்கு உரியரல்லாத வைதிகப் பிராமணர் முதலி யோர் இட்ட லிங்கத்தை இவ் விதிப்படி பூசித்து விரத நோற்கக் கடவர். பூசைக்குரியரல்லாத சாதியார் பொருள் கொடுத்துச் சிவப் பிராமண ரைக் கொண்டு சோமசுந்தரக் கடவுளை இவ் விதிப்படி பூசை செய்வித்து விரத நோற்கக் கடவர்.

சோமவாரத்திலே சோமசுந்தரக் கட வுளுடைய சந்நிதியிலே திருவலகிடுதல், திரு மெழுக்கிடுதல், சித்திர வஸ்திரங்களினாலே அலங்காரம் பண்ணுதல், சுகந்த தூபமிடுதல், நெய் விளக்கேற்றல், மாவிளக்கிடுதல் முத லிய சிவ புண்ணியங்களைச் செய்வோர் சகல பாவங்களினின்றும் நீங்கிப் போக மோட் சங்களைப் பெறுவர். சோமசுந்தரக் கட வுளுக்கு நிவேதித்த பஞ்ச கவ்வியத்தையும் தீர்த்தத்தையும் உட்கொள்ளின் பாவங்களெல் லாம், நீங்கும்; ஆகார தோஷங்கள் அற்று விடும்.

இச் சோமவார விரதம் ஐந்து வகைப் படும். அவைகளாவன: உச்சிப் பொழுதிலே உண்ணுதல், இரவிலே உண்ணுதல், உண்ணா தொழிதல், நித்திரை செய்யாதிருத்தல், நான்கு யாமமும் சிவபூசை செய்தல் என்பவை களாம். இவ்வைந்தும் ஒன்றுக்கொன்றதிக மாகும். இவற்றுள், முதல் வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் பிராதக்கால சந்தியும் மத்தி யான சந்தியும் முடித்துக் கொண்டு, சிவ பூசையும் சிவ தரிசனமுஞ் செய்து, பகலிலே பதினைந்து நாழிகையின் பின் மாகேசுர பூசை செய்து, சுற்றத்தாரோடும் புசிக்கக்கடவர். இரண்டாம் வகைப்படி நோற்கச் சங்கற்பித் தோர், பிராதக்கால சந்தி மத்தியான சந்தி சாயங்கால சந்தி என்னும் மூன்றும் முடித்துக் கொண்டு, சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து இரவிலே மாகேசுரபூசை செய்து, சுற்றத் தாரோடும் புசிக்கக் கடவர். மூன்றாம் வகைப் படி நோற்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்தியும் முடித்துக்கொண்டு சிவபூசையும் சிவ தரிசன முஞ் செய்து, உபவாசமாகத் துயின்று, மற்றை நாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்துக் கொண்டு சிவபூசையும் சிவ தரிசனமுஞ்செய்து, மாகேசுர பூசை பண்ணி, சுற்றத்தாரோடு பார ணம் பண்ணக் கடவர். நான்காம் வகைப்படி

நோற்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவ தரிசன முஞ் செய்து, ஊனும் உறக்கமும் இன்றி, யாமந்தோறும் அந்தரியாகஞ் செய்து, மற்றை நாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்துக் கொண்டு, சிவபூசையும் சிவ தரிசனமுஞ் செய்து, மகேசுர பூசைபண்ணி சுற்றத்தாரோடு பாரணம் பண்ணக் கடவர். ஐந்தாம் வகைப்படி நோற்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்தியும் முடித்துக்கொண்டு, சிவபூசையும் சிவ தரிசன மும் செய்து, ஊனும் உறக்கமுமின்றி, யாமந் தோறும் சிவபூசை செய்து, மற்றை நாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்துக் கொண்டு சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து மாகேசுர பூசைபண்ணி, சுற்றத்தாரோடு பாரணம் பண்ணக் கடவர். பாரணம் பண்ணிய பின், பகலிலே நித்திரை செய்யாது, சிவ புராணங்களைச் சிரத்தையோடு கேட்டுக் கொண்டிருக்கக் கடவர். நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர். இந்த ஐந்து வகையுள் எந்த வகைப்படி நோற்கச் சங்கற்பித்தாரோ அந்த வகைப்படி வழுவாமல் நோற்றல் வேண்டும்.

இவ்விரத நோற்குங் காலம் ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், பன்னிரண்டு வருடம், வாழ்நாளெல்லை என்பனவாகும். விரதந் தொடங்கும்போது இக் காலவெல்லைக்குள் தாம் விரும்பிய கால வெல்லையைச் சுட்டிச் சங்கற்பித்துக்கொண்டு, மேற் சொல்லிய நியமம் வழுவாமல் அனுட் டிக்க வேண்டும். சங்கற்பித்துக் கொண்ட எல்லை முடிவிலே விதிப்படி உத்தியாபனம் பண்ணல் வேண்டும். வாழ்நாளெல்லையளவும் சங்கற்பித்து நோற்பவருக்கு உத்தியாபனம் இல்லை. இடையே விடுவோரும் உத்தியா பனஞ் செய்யாதவரும் விரத பலத்தை அடை யார். ஆதலால், இடையே விடாது அனுட் டித்து, முடிவிலே உத்தியாபனம் பண்ணுக.

உத்தியாபன விதானஞ் சொல்வாம். வெள்ளியினாலேனும் செம்பினாலேனும் சிவப் பிரதிமையும் தேவிப் பிரதிமையும் சிற்பியைக் கொண்டு செய்விக்க. பிரதிமைக்கு முப்பது கழஞ்சு உத்தமம்; இருபது கழஞ்சு மத்திமம், பத்துக் கழஞ்சு அதமம், சிவப் பிரதிமை ஒரு முகமும் மூன்று கண்களும், நான்கு புயங்களும், நான்கு கைகளினும் மான் மழு அபய வரதங்களும், முடியிலே பால சந்திர னும் உடையதாகச் செய்விக்க. தேவிப் பிரதிமை ஒரு முகமும் இரண்டு தோள்களும் உடையதாகவும், வலக்கை செங்கழுநீர் பிடித்ததாகவும், இடக்கை கீழே நீட்டினதாக வும் செய்விக்க, யாக மண்டபமும், அதிலே குண்டமண்டல வேதிகைகளும் விதிப்படி செய்விக்க, பானு வாரத்திலே ஒருபொழுது உண்டு, இரவிலே உணவின்றித் தரையிலே துயின்று, சோமவாரத்திலே பிராதக் காலத் திலே நித்திய கருமத்தை முடித்து, மத்தி யானந் தொடங்கிச் சாயங்காலம் வரையும் சிவபுராணங் கேட்டு, சாயங்காலந் தொடங்கி நான்கு யாமமும் மண்டலத்திலும், கும்பத் திலும், சிவலிங்கத்திலும் சிவபெருமானைப் பூசை பண்ணுக. சந்நிதியிலே பிரதிமைகளை யும் வைத்துப் பூசை பண்ணுக. அவ்வப் பூசை முடிவிலே சிவ மூல மந்திரத்தினாலே நூற்றெட்டாகுதி யாமந்தோறும் பண்ணுக. ஆயிரம் நாமஞ் சொல்லி ஆயிரம் வில்வஞ் சாத்துக. பஞ்சாட்சரத்தினாலே அருக்கியங் கொடுக்க. மூல மந்திரத்தினாலும் மற்றை மந்திரங்களினாலும் அக்கினியை வளர்த்துப் பூரணாகுதி செய்து, வேள்வியை முடிக்க. விடிந்த பின், நித்திய கருமங்களை முடித்து. பதின்மூன்று வாழையிலையின் மேலே அரிசி யும் காய்கறிகளும் பரப்பி, பசுவின் பால்

நிறைந்த வெள்ளை வஸ்திரத்தினால் அலங்கரிக்கப்பட்ட பதின்மூன்று குடங்களை அரிசிமேல் வைத்து சிவார்ச்சனைக்குரிய சிவப் பிராமணர்களை வரித்து, காதணியும் மோதிர மும் கொடுத்து, சிவனாக மதித்துப், பூசித்து, தக்கிணையோடும் வெள்ளைப்பசு, பாதகுறடு, விசிறி, குடை, வஸ்திரம் முதலியவற்றைத் தானஞ் செய்க. பின்பு குருவை அவர் பத்தினியோடும் ஆசனத்திருத்தி, சிவபெரு மானும் உமாதேவியுமாக மதித்து, அவர் களைப் பீதாம்பரம் காதணி மோதிரம் முதலியவற்றால் அலங்கரித்து, மலரினாலே பூசித்து, சிவபெருமானையும் உமாதேவியை யும் ஆவாகித்துப் பூசை செய்த வெள்ளிப் பிரதிமைகளோடும், பொன், பூமி, பசு முதலிய வற்றைத் தானஞ் செய்து, இவ்வாறே உத்தியா பனம் முடித்து, குருவினுடைய ஏவலினாலே சிவனடியார்களோடும் சுற்றத்தார்களோடும் அமுது கொள்க.

இச் சோமவார விரதத்தை விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பிற கணர்களும் அனுட்டித்தார் கள். மனிதரும் அனுட்டித்துப் போகத்தையும் மோட்சத்தையும் பெற்றார்கள். இவ்விரதத்தை அனுட்டிப்பவர் பகையும் மனத்துயரமும் நீங்கி, ஆயிரம் பிறவியிற் செய்த பாவங்கள் ஒழியப்பெற்று, எடுத்த சரீரத்திற்றானே சிவ கதியை அடைவார்கள். இவ் விரதத்தை ஓதினவர்களும் கேட்டவர்களும் மனைவிய ரோடும் மக்களோடும் சுற்றத்தோடும் இனிது வாழ்ந்து, சுவர்க்கத்திலே பதினான்கு இந்திர பதத்தில் வீற்றிருப்பார்கள்".

இவ்வாறே அகத்திய முனிவர் சொல் லக்கேட்ட தமிழ் வேந்தர் மூவரும் விடை கொண்டு, மதுரையை அடைந்து, பொற் றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சோம சுந்தரக் கடவுளை வழிபட்டு, சோமவார விரதம் அனுட்டித்தார்கள். அவ்வனுட்டானத்திலே வரம் பெற்று, ஆகாயமார்க்கமாகச் சென்றார் கள். இந்திரன் அதனை அறிந்து, அம் மூவரும் இருக்கும் பொருட்டுத் தன்னாசனத்திற்றாழ மூன்று சிங்காசனம் இடுவித்தான். ஆகாய மார்க்கமாகச் சென்ற அரசர் மூவரும் தேவருல கத்தை அடைந்து, இந்திரன் பக்கத்திற் சென்றார்கள். அவர்களுள் சேரனும் சோழனும் இந்திரன் காட்டிய ஆசனங்களில் இருந்தார்கள். உக்கிர பாண்டியர் இந்திரனுடைய சிங்காசனத் தில் ஏறி ஒக்க வீற்றிருந்தார். இந்திரன் அவர் மேல் அழுக்காறடைந்து, பக்கத்திருந்த மற்றையரசரிருவரையும் பார்த்து, முகமன் கூறி, "நீங்கள் வந்த காரணம் யாது?" என்று வினவினான். அதற்கு அவர்கள், "எங்கள் நாட்டிலே மழை மறுத்தமையால் வந்தோம்" என்றார்கள். இந்திரன் அவர்கள் நாடுகளில் மாத்திரம் மழை சுரக்கும் வண்ணம் வரங் கொடுத்து, இரத்தினாபரணங்களையும் பீதாம் பரங்களையும் கொடுத்து, "நீங்கள் போங்கள்" என்றான்.

அவர்கள் மீண்ட பின்பு, இந்திரன் உக்கிர பாண்டியர் தன்னாசனத்தின் மேலே தருக்கினோடு ஒக்க வீற்றிருத்தலையும் பின்னும் மழை வேண்டாத பெருமிதத்தையும் நோக்கி ஒரு சூழ்ச்சிசெய்து, அவருக்கு மிக உயர் வாகிய வரிசை செய்வான்போல, அளவில்லாத வர்கள் தாங்கி மிக மெலிந்து வருந்தும் ஒரு ஆரத்தை அவருக்குக் கொடுத்தான். உடனே அவர் அதனை வாங்கி, பூமாலை போலத் தமது கழுத்திலே தரித்துக் கொண் டார். இந்திரன் அதுகண்டு, அதிசயங்கொண்டு, "பாண்டியனே! இன்று தொட்டு உன்னை ஆரந் தாங்கு பாண்டியன் என்று உலகமெல்லாம் நன்கு மதிக்கக் கடவது" என்றான். உக்கிர பாண்டியர் அதனைச் சிறிதும் எண்ணாது, அங்கு நின்றும் இறங்கித் தமது மதுரை

நகரை அடைந்தார். இப்பால் இந்திரனுடைய ஆணையினாலே சேர நாட்டிலும் சோழ நாட்டிலும் மழை பெய்தது. பாண்டி நாடு மாத்திரம் முன்போல மழையில்லாதிருந்தது. ஒருநாள் உக்கிர பாண்டியர் தாம் பொதிய மலையிற் சென்று வேட்டையாடும்பொழுது, புட்கலாவர்த்தம் முதலிய மேகங்கள் நான்கும் அம்மலை மேல் விழுந்து மேயக்கண்டு, அவைகளைப் பிடித்து விலங்கிட்டுக் கொண்டுபோய் சிறைச் சாலையில் இடுவித்தார். இந்திரன் அதுகேட்டு, மிகக் கோபங்கொண்டு, சமுத்திரம் வறக்கும் வண்ணம் வேல் விடுத்தமையையும் மிக வலிய ஆரத்தைத் தாங்கினமையையும், மேகத்தை விலங்கிட்டமையையும் நினைந்து நினைந்து, "ஒரு மனிதனுக்கு இத்துணை வலி யாது?" என்று மானஞ் செலுத்த, உக்கிர பாண்டியரோடு மதுரையை வளைந்தான். அதுகண்ட ஒற்றர்கள் ஓடிப்போய், உக்கிர பாண்டியருடைய திருவடிகளை வணங்கி, ஆடையொதுக்கித் தலை பணிந்து, வாய் புதைத்து நின்று, "மகாராசாவே! தேவசேனை நம்முடைய நகர்ப்புறத்தைச் சூழ்ந்தது" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

உடனே உக்கிர பாண்டியர் கோபமும் மானமும் மிகவுடையவராய், சிங்காசனத்தினின்றும் இறங்கி, நால்வகைச் சேனைகளுஞ் சூழ, யானைமேற் கொண்டு சென்றார். அவருடைய சேனைகள் நகர வாயிலை நீங்குமுன், தேவர்கள் நெருங்கி ஆர்த்து, பல படைக்கலங்களை விடுத்தார்கள். பாண்டியருடைய சேனைகள் படைக்கலங்களை விடுத்துத் தேவர்களைக் கொன்றார்கள். இந்திரன் அதுகண்டு, அக்கினி சொரியுங் கண்ணையுடையனாகிப் பதைபதைத்து, சூரியாஸ்திரத்தை விடுப்ப, உக்கிர பாண்டியர், சந்திராஸ்திரத்தை விடுத்துத் தடுத்தார். இந்திரன் சிங்காஸ்திரத்தை விடுப்ப, பாண்டியர் சரபாஸ்திரத்தை விடுத்து அதனைத் தடுத்தார். இந்திரன் மோகஸ்திரத்தை விடுப்ப, பாண்டியர் ஞானரஸ்திரத்தை விடுத்து அதனைத் தடுத்தார். பின்பு இருவரும் மற்போர் செய்தார்கள். இந்திரன் பாண்டியர் மேலே குலிசத்தை வீச, பாண்டியர் தமது கையிலிருந்த வளையைச் சுழற்றி வீசினார். அவ்வளை குலிசத்தை வீழ்த்தி இந்திரனுடைய மகுடத்தைத் தள்ளிச் சிதைத்தது. உடனே இந்திரன் அஞ்சி ஓட்டம் எடுத்தான். "முருகக்கடவுள்போல வலிய உக்கிர பாண்டியன் வீசிய வளை, என் சிரசைச் சிதையாது என் முடியைச் சிதைத்தமை யான் சோம சுந்தரக் கடவுளைப் பூசித்தமையாலன்றோ" என்று சிவபிரானுடைய திருவருளைப் பாராட்டினான்.

போருக் காற்றாது ஓட்டமெடுத்த இந்திரன், பின்பு உக்கிர பாண்டியருக்கு, "தங்கள் நாட்டுக்கெல்லாம் மழை தருவேன். விலங்கை நீக்கி என்னுடைய மேகங்களைத் தருக" என்று ஓலை விடுத்தான். ஓலை கொண்டுசென்ற தூதன் பாண்டியருடைய திருவடிகளை வணங்கி, ஒதுங்கி, வாய் புதைத்து நின்று ஓலையை நீட்ட, அங்குள்ளான் ஒருவன் வாங்கி, பாண்டியர் முன்னே வாசித்துக் காட்டினான். பாண்டியர் அதுகேட்டு, இந்திரனுடைய வார்த்தையை நம்பாமையால், சிறை நீக்கி மேகங்களை விடாது மறுத்தார். அப்பொழுது இந்திரனுக்கு நண்பனாகிய ஒரு வேளாளன், "மகாராசாவே! தான் பிணை" என்று வணங்கினான். இடுக்கண் வந்து உயிருக்கு நாசம் விளையினும் வாய்மையைக் காத்துக் குற்றமற ஒழுகும் வேளாள மரபிற் பிறந்த அவனுடைய வார்த்தையை ஆப்த வாக்கியமாகிய வேதத்தைப் போல நம்பி, உக்கிர பாண்டியர் மேகங்களைச் சிறை நீக்கி விடுத்தார். பின்பு இந்திரனுடைய ஏவலினாலே பாண்டிநாடு மாசம் மும்மாரி பெய்யப் பெற்று மிகச் செழித்தோங்கியது.

தவயோகி சரவணமுத்துச் சுவாமிகள்

–திரு முருகவே பரமநாதன் அவர்கள்–

தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழே செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே.

திருப்படையெழுச்சி. 2 (திருவாசகம்)

சில தசாப்தங்களின் முன் எளியேன் பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் சென்றிருந்தேன். இந்த மஹா ஷேத்திரம் முச்சிறப்பும் பொருந்திய சிவபூமி. இலங்கையைச் சிவபூமி எனக் கூறியவர் மூலர். இந்த மூலன் வழிவந்த பெரியார்களைப் பாடாதவர் இல்லை. சிவபூமியிலே சித்தருக்கு, முத்தருக்குப் பஞ்சமே இல்லை. எனவே பாலாவியில் நீராடி, கௌரீசரைத் தரிசனை செய்வதற்காகப் போகையில், என் குரு தேவர் திருவாசக சுவாமி களுடன் கூட இருந்தும் பேசி, ஏச்சும் கேட்டு என்னைத் திருத்துவது இன்னொன்று. திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையொடு நாளும் பொழுதும் பேசிப்பேசி நாத்தழும்பேறியவர் அவர்.

என்னப்பன் எம்பிரான்
எல்லார்க்கும் தானீசன்
என்றப்பன் எழில்வாதவூ
ரரென்றோ இசைத்ததனை
இன்றப்பன் இவனேதா
னென்னிறைவ னென்றென்றே
குன்றொப்ப நின்றானைக்
குருவாகக் கொண்டேனே.

(குருவணக்கம் ஊரெழு மீனாட்சி பதிகம்)

இது அறுபதுகளின் கடைசியில் நடந்தது என நினைவு. குருநாதனைக் காணப் போனவேளை சரவணமுத்து சுவாமிகளை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்; நாம் அப்பு என அன்போடழைக்கும் சபாரத்தினவிரதி. என் பயணம் தொடரும்போது இடைக்கிடை சரவணமுத்தரையும் பார்ப்பதில் எனக்கோர் ஆத்ம திருப்தி. ஓர் தினம் அப்பு எழுதிய திருமுகத்துள் ஒரு கடிதம் இருந்தது. அது சரவணமுத்துச் சுவாமிகளது என்னோடு கூடிய பரீச்சியம் இல்லா நிலையிலும், என்னை மதித்து, எனக்கோர் ஆத்மீக அந்தஸ்துக் கொடுத்து, என்னைத் திருக்கேதீஸ்வரத்துக்கு அடிக்கடி வரும்படியும் எழுதியிருந்தார்கள். அக் கடிதத்திலே

சுவாமிகளின் ஆளுமைகள் பளிச்சிட்டன. நான் போம்போதெல்லாம் அவர்களைக் காண முயல்வேன். சற்று வேளை சம்பாஷிப்போம். எவ்வளவு ஆழ, அகல, நிகளமான ஞானம்; இந்நிலைமை நாட்டு நடப்பாற் சீரகுலைந்தது. கேதீஸ்வரக் கதவுகள் மூடப்பட்டன; இது காலத்தின் கட்டாயம் போலும். சுவாமிகள் இடம்பெயர்ந்து கொழும்பு மாநகரில் வதித்தார்.

திருவாசக சுவாமிகளின் குருபூஜை கொழும்பில் துரைராஜா ஐயா வீட்டில் தொடர்ந்து நடந்தது சரவணமுத்துச் சுவாமிகள் தலைமையில். அவர்கள் திருவாசக சுவாமிகளைப் பற்றி அரிய, பெரிய கருத்துக்களைக் குறிப்பிடுவார். இருவரையும் ஒப்பிடும்போது குரு நமச்சிவாயர் குகைநமச்சிவாயர் நினைவு வரும். என்னையும் பேசச் சொல்வார். என் குருதேவர் பற்றி அடியேன் எழுதிய இரு நூல்கள் தவத்திரு சரவணமுத்துச் சுவாமிகளின் தலைமையிலே தான் வெளியீட்டு விழா நடந்தது. கொழும்பு இராமகிருஸ்ண மிஷின் மண்டபத்தில் நிகழ்ந்த "ஞானத்தந்தை" வெளியீட்டுவிழா நிறைவெய்தியவேளை, என் இரு தோள்களைத் தன் அருட் கரங்களாற் பிடித்து "இந்த உடம்புக்குள்ளேதானே இதெல்லாம் வைத்திருக்கிறாய்" எனக் கேட்டு வாழ்த்தின காட்சிகள் எல்லாம் பசுமையான நினைவுகளே. அதன் பின்பும் ஒரு நூல் எழுதி வெளியிட சரவணமுத்துச் சுவாமிகளின் ஆசியும், குருவருளும், திருவருளும் துணையாயின. (திருவாசகப் பேரூற்று) மனிதப் பிறவி பெரிதென்கிறார்கள்; பிறவியே வேண்டா மெனப் பேசுகிறார்கள். உண்மையில் மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அப்பிறவி மேலானதுதான். இவற்றுள்ளும் பெரிய மனிதர்களை, அதிமானுடர்களை, மகாத்மாக்களை, தபோதனர்களை, புத்திஜீவிகளைப் பார்க்கையில் இப்பிறவி பொருத்தமானதுதான் ஆத்ம விடுதலைக்கு. இதை வைத்தும் பலர் பாடினர். தாயுமானவர் இப்படிக் கூறுகின்றார்.

எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ? அறிகிலேன்
கண்அகல் நிலத்து நான் உள்ளபொழுதே அருள்
ககனவட் டத்தில்நின்று
கால்ஊன்றி நின்றுபொழி ஆனந்தமுகிலொடு
கலந்து, மதி, அவசம் உறவே
பண்ணுவது நன்மை, இந்நிலை பதியுமட்டுமே
பதியாய் இருந்த தேகப்
பவுரிகுலையாமலேளூ கௌரிகுண்டலி ஆயி
பணணவிதன், அருளினாலே
விண்ணிலவும் மதிஅமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமது அடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

-சித்தர் கணம் 4.

ஒருவனின் அறிவு ஆற்றல் சிறந்து விளங்குமானால் அவன் வாழ்வு சிறக்கும்.

மதிஅவசம் உறவே- என்னுடைய ஆன்ம நிலை பரம்பொருளோடு ஒன்றுபடச் செய்யவே, பவுரி- உலகவாழ்வு என்னும் கூத்தாட்டத்துக் குரிய அமைப்பு, கௌரி- உமாதேவி, குண்டலினி- யோகியின் உடலுள் அமைந்துள்ள அருள்சக்தி, ஆயி- தேவி, பண்ணவி- அம்பிகை, விண்ணிலவும்- ஏழாவது யோக சக்கரமாகிய சகஸ்ராரத்தில் இருக்கும், மதிஅமுதம்- சந்திரமண்டலத்துக்குரிய அமிர்த தாரை.

இவ்வண்ணம் பிறவிகளில் மிக மேன்மைகொள் பிறவி மனிதம். மேன்மை கொள் சமயம் சைவம். இந்நெறியிலே இன்று ஓர் சைவப்பழமாக, சிவப்பழமாக விளங்குகிறார் சரவணமுத்து அடிகளார். அளவான ஐந்தடிக்கு மேற்படாத உயரம், தோரைப் பனம்பழம் போன்ற நிறம், நரைத்த கேசங்கள் தோற்றம் முதுமையின் வடிவம். இடுப்பிலே வெள்ளை நான்குமுழமடி, தோளிலே துண்டு; கூர்த்த பார்வையோடு கொளுகொளு என்ற காட்சி, நேத்திரங்களை அழகு செய்யும் மூக்குக்கண்ணாடி, உண்ணாடிப் பார்க்கும் அக நோக்கு; தேவை வேண்டி பாதணிகள் சூடிய பாதங்கள், சிவசிவ சிவா என்ற இடை இடையே சிவநாம ஓசை. தளர்ந்தும் தளரா நடை, ஆனந்தமயமான வாழ்வு, கையிலோர் ஊன்றுகோல்- கோலங்கள் காட்டாத எளிய தோற்றம், நீறணிந்த நெற்றி, ஆயிரம் பிறை கண்ட நெற்றி வரைகள், சற்று உள் வளைந்த நடை, திருமுகப்பொலிவு, தொண்ணூற்று மூன்று வயதை எட்டி தாண்டிய சுத்தப் பிரமச்சரியம், ஐம்புலனையும் வென்ற கற்பும், திடமும் இப்படியான ஒரு மகானாய்ச் சித்தர் மரபு பேணும் செல்வராய்க், கொழும்பிற் தவ வாழ்வு மேற்கொள்ளும் சுவாமிகள் நாளது 10.10.1906இல் புங்குடுதீவிற் தோன்றினார்கள். தந்தையார் சின்னட்டியார். பெற்றோர் முருக சிந்தை நிறைந்தவர்களாதலின் முத்தான பெயர் இட்டனர் சரவணமுத்து என. சித்திர முத்து அடிகள்போலக் காலத்தையும் வென்று, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க சிவநாம சிந்தனையோடு காட்சி தருகிறார்கள்.

இவர்கள் துவக்கக் கல்வியைத் தான் பிறந்த மண்ணிலமைந்த கணேச வித்தியாசாலையில் மேற்கொண்டார்கள். காலத்தின் கட்டாயப்படி யாழ் கில்னர் கல்லூரியில் ஆங்கிலங் கற்று வெளியேறி, ஆசிரியராகவும், அரசாங்க ஊழியராகவும் சிலகாலம் கடமை ஆற்றியபின், இவற்றைத் துறந்து வணிகத்தில் ஈடுபட்டார்கள். 1928 முதல் 1958 வரை வர்த்தகராகக் கொழும்பில் வாழ்ந்தார்கள். அக்காலம் அவரின் பொற்காலம் எனலாம். வாழ்வுக்கு வணிகம், சாவுக்குமட்பாலமைந்த உயிர் வாழ்வுக்கு ஆத்மீகம் எனத் தேறித் தெளிந்து அத் துறையிலும் பூரண ஞானம் பெற்று சீவன் முத்தராக நடமாடுகின்றார். ஜனகர், பட்டினத்தார், பத்திரகிரியார் போன்றோர் ராஜரிஷிகள் ஆயினர். ஆனால் அரசராயும், வர்த்தகராயும் வாழ்ந்தனர். சகத்தொடும் கூடி வாழும் இவர்கள் தாமரை இலையிற் தண்ணீர்போலப் பற்றின்றி நிற்பர். இதையே மூத்த தமிழ்த்தாய் ஔவைப் பாட்டி "ஆங்கமலநீர போற் பிளிந் திருப்பர் பேசார் பிறர்க்கு" எனப் பேசினார். இவர்களே வீரர் எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

முப்பதாமாண்டளவில் மூன்றற்று ஒரு பொழுதைத் தப்பாமற் சார்வான் வேண்டித் தொழிலை வெறுத்து, உளவெறுக்கையுடன் பாடல் சான்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் வாழத்துவங்கினார்கள். சைவசித்தாந்தம், சைவத் திருமுறைகள் பன்னிரண்டு, சித்தர் பாடல்கள், வள்ளலார், தாயுமானார், அருணகிரியார், பட்டினத்தார் பாடல்கள், முப்பெரும் புராணங்களில் ஆழங்காற்பட்ட சுவாமிகள், திருக்கேதீஸ்வரம், திருவாசகமடத்திற் தங்கி மக்கள் சேவை, மகேஸ்வரன் சேவை, ஆத்ம

சேவை செய்தார். திருவாசக மடத்தை உரு வாக்கிய ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் அறிமுகம் கிடைத்துத் திருவாசகத் தொண் டில் ஈடுபட்டார். கந்தையா வைத்தியநாத னோடு இணைந்து புனருத்தாரண வேலை கட்குக் கைகொடுத்தார். திருவாசகமடம், நூலகம், மகேஸ்வரபூசை, சமய பிரசங்கங் கள், புராணபடனம், திருவாசகவிழா, முற்றோ தல் போன்ற கைங்கரியங்களுடன் 1944இல் ஈழத்துச் சிவனடியார் கூட்டம் என்ற ஸ்தாப னத்தின் தலைமைப் பதவியை ஏற்றும் பெருந்தொண்டு மேற்கொண்டார்கள். இப்படிப் புனிதமான மனித வாழ்வில், திருக்கேதீஸ்வரம் யுத்தக் கெடுபிடியால் மூடப்படப் பழையபடி கொழும்பில் தன் வாழ்வை மேற்கொள்கிறார். சிவத்தியானம், சிவபூஜை செய்து உணவருந் தும் இன்றைய தவவாழ்விலும், அன்னாரின் கருத்துக்கள் கனடா சைவநீதியில் வெளிவரு கின்றன. 1994இல் கனடாவில் நடந்த சைவ சமய மகாநாட்டிற் கலந்துகொண்டமை அவ ரது சமய ஈடுபாட்டிற்கோர் நற் சான்றாகும். ஈழமணித் திருநாட்டிற் கடையிற் சுவாமிகளில் இருந்து திருவாசக சுவாமிகள் வரை பலர் வாழ்ந்த வரலாறுகள் எழுதப்பட்டு ஆவண மாய்ப் பேணப்பட வேண்டும் என்பதைச் சமய எழுத்தாளர்கள் கருத்திற் கொள்வார்களாக.

"அறந்தா னியற்று மவனிலுங் கோடியதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே"

பட்டினத்தார்.

தவத்தார் சரவணமுத்துச் சுவாமிகள் உடலம் விட்டாலும் கடலலைபோல் அவர் ஆத்மீக வீச்சு வீசிக்கொண்டே இருக்கும் திருக்கேதீஸ்வரத்தில்.

பேரொளி காட்டி நிற்பாய்!

பல்லவி

நீயே என் வாழ்வுக்கு என்றும் கதி! - நீ
நிலையாக உறைந்த இடம் எம் சந்நிதி! (நீயே)

அநுபல்லவி

தூய மனத்தோடு தொழ வந்தேன்!
துணை, நீயே என்று கருதி நின்றேன்! (நீயே)

சரணம்

பூவரச மரம் உந்தன் புகழ் கூறும்!
பூங்காற்றும் அங்கு உந்தன் புகழ் பாடும்!
தேவர்கள் குறை தீர்த்த திருக் குமரா!
தேடி உனை சரண் அடைந்தேன் அருள் முருகா!
(நீயே)

"அன்னதானக் கந்தன்" என்றே உனை அழைப்பார்!
அன்புடன், உன் தாள் பணிந்து அகம் குளிர்வார்!
இன்னருள் தந்தெம்மை ஆதரிப்பாய்!
இருள் நீக்கி, பேர் ஒளியைக் காட்டி நிற்பாய்! (நீயே)

~கி. குலசேகரன்~

சத்தியம் என்பது மன வலிமை, சாந்தம் என்பது மன அடக்கம்.

வழித்துணை 36

–ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வாழைகுட்டி போடுவது அதுவும்குட்டி போடவன்று
இறுதியிலே தன்னையது தாங்கியும் நிற்பதற்காம்
அதுபோல்தான் பெற்றோரும் பிள்ளைகளைப் பெற்றெடுத்தல்
அவர்கள் பெறமட்டுமன்று தம்மையும்தான் தாங்குதற்காம்.

02 பெற்றோர் பிள்ளையினால் ஏதும்பலன் இல்லையென்று
உற்றதோர் பெற்றவர்கள் உளம்நோக நேர்ந்திட்டால்
மற்றவைகள் எல்லாமே மலைபோல்தான் இருந்தாலும்
குற்ற உணர்வொன்றவரை குழிதோண்டிப் புதைத்துவிடும்.

03 வெட்டுகின்ற பல்லிடையே வெறுந்தசையால் நாக்குண்டு
கொட்டுகின்ற முள்ளிடையே றோசாவில் மலர்களுண்டு
பட்டதெல்லாம் போதுமென் பக்கத்துணை கொடிதென்று
எட்டியோட முயற்சியாதீர் ஒட்டிநில்லும் சிறப்பெமெக்கே.

04 சீருடைகள் இல்லாமல் செல்லலாம் கோயிலென்று
பேருடைகள் தரித்தங்கு பெருமைகாட்டச் செல்லாதீர்
ஓர்குடையுள் எல்லோரும் நிற்குமிடம் கோயிலதால்
யாருடைய மனமுமங்கு நோகாமல் நடந்திடுவீர்.

05 அதிகாரம் செய்வதுவும் அடுத்தவரை வருத்துவதும்
அதிகாரி என்பதற்கு அர்த்தமென்று கொள்ளாதீர்
அதிக கருமம் ஆற்றுவதும் அடுத்தவற்காய் உழைத்தலுமே
அதிகாரி என்பதற்கு அர்த்தமென்று அறிந்திடுவீர்.

06 வேண்டுவோரின் வேண்டுதற்காய் தடைதாண்டி ஓடுபவர்
ஆண்டியென்று கண்டிட்டால் நொண்டியாக மாறிடுவர்
தீண்டியவர் கொள்கையினை தோண்டிநாம் பார்த்தால்தான்
மாண்டபின்பு புதைத்தவர் மனிதாபிமானத்தை என்றறிவீர்.

சேமித்து வைப்பதே தலைசிறந்த வருமானம்.

07 வைரமும் மணிகளும் இரத்தினக் கற்களும்
பொன்னோடு பொருட்களும் புதைந்திருக்கும் என்பதால்
மகிழ்ந்தோடிச் சென்றுநாம் நிலம்தோண்டிப் பலனில்லை
மறைந்திருக்கும் திறமைகளைத் தோண்டிடுவீர் பலனுண்டாம்.

08 சிற்றின்பம் வாழ்க்கையிலோர் சிறுஇன்பம் மட்டும்தான்
அதற்காகப் பேரின்பம் பலவற்றை இழக்காதீர்
சிலஇன்பம் சிலகாலம் சென்றதுமே சலித்துவிடும்
பேரின்பம் பெருவாழ்வு இறுதிவரை நிலைத்திருக்கும்.

09 சந்திர மண்டலத்தில் இறங்கியேதான் நடந்தென்ன
செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ந்து அறிந்தென்ன
பூமியில் மானிடர் மனங்களை அறியாமல்
விண்வெளி ஆய்வதனால் விடிவுண்டோ சொல்வீர்நீர்.

10 தருமதியும் வருமதியும் அதிகமுண்டு என்பதற்காய்
வெகுமதிகள் வாங்குவதற்காய் திருமதிகள் தேடாதீர்
ஏற்றுமதி இறக்குமதிப் பிழைப்பல்ல வாழ்க்கை
கொடுக்குமதி நல்வாழ்க்கை வாங்குமதி நிம்மதியாம்.

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்
மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்
பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்
கீழே உள்ள முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

காசோலை
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

பஞ்சமா பாதகங்களின் விளைவே கொரோனா கொள்ளை நோய்

–திரு பு. கதிரித்தம்பி அவர்கள்–

உலகில் தற்பொழுது பஞ்சமா பாதகங்கள் தலைவிரித்தாடுகின்றன. கொலை, கொள்ளை, மதுபானம் அருந்துதல் எங்கும் மலிந்துவிட்டது. விஞ்ஞானக் கண்டுபிடிப் பினால் எதையும் சாதிக்கலாம் என்ற இறு மாப்பு மக்களிடம் ஏற்பட்டுவிட்டது. நேர்மை, உண்மை ஒழிந்துவிட்டது. புலால் உண்ணல் மலிந்துவிட்டது. இதனால் மதுபானம் அருந் துதல் சகலரிடமும் தோன்றிவிட்டது. மக்களின் எல்லாக் கொண்டாட்டங்களிலும் புலால் உண் ணுதல், மதுபானம் அருந்துதல் முக்கிய நிகழ் வாக அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவையின்றி கொண்டாட்டங்கள் செய்யமுடியாத மனநிலை பெரும்பாலான மக்களிடம் அமைந்துவிட்டது. இவற்றைப் பொறுக்காத எம்பெருமான் மக்களின் இறு மாப்பை அடக்க "கொரோனா" கொள்ளை நோயைக் கொடுத்துள்ளார்.

விஞ்ஞானிகளும், விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களும் நாளாந்தம் பல்கிப் பெருகிப் போகின்றன. ஆனால் விஞ்ஞானிகள் கொரோனா நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடு கின்றனர். விஞ்ஞானிகளும் அரும்பெருஞ் சேவை செய்யும் வைத்தியர்களும் இந் நோய்க்கு மருந்துகள் கண்டுபிடிக்க முடி யாமல் கலங்குகின்றனர். "மெய்ஞானத்தைக் கைவிட்டு விஞ்ஞானத்தை நம்பியிருக்கும் மக்களுக்கு கண் திறக்குமா? இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழிலை செய்து வருகின்றான். உலகில் தர்மம் குலைந்து, அதர்மம் தலைவிரித் தாடும்போது, செருக்கடக்க எம்பெருமான் அழித் தல் தொழிலைச் செய்கின்றான். அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகள் பொருளாதாரத் திலும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிலும் போட்டி போட்டுக்கொண்டு உலகத்தை கலக் கிக் கொண்டிருந்தன. பொருளாதாரம் குறைந்த நாடுகள் வல்லரசுகளுக்கு அடங்கி என்ன செய்வதென்று அறியாமல் ஏங்கிக்கொண்டிருந் தன. சிறிய நாடுகள் வல்லரசுகளிடம் கையேந் தும் நாடுகளாக இருந்தன. இப்போதுள்ள நிலையில் வல்லரசுகள் என இறுமாப்படைந்த நாடுகள் நோயின் கொடுமையினால் அல்லல் உற்று கலங்கிக்கொண்டிருக்கின்றன. விஞ் ஞானிகளும் கலங்கிக் கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் என்னவென்பதை உணர்வார்களா? கடவுள் என்ற ஒரு பொருள் உண்டென்பதை உணர்வார்களா? அறிவார் களா? சிறப்பாகச் சைவசமயத்தவர்கள் இச் செயலைக் கடவுள் செயலென்று எண்ணுவர். இறைவன் செருக்குடையவர்களின் செருக்கை அடக்கி நல்லறிவை ஊட்டி அவர்களை ஆட் கொள்வார். இந்த உண்மைகளை சைவசமய நூல்களைப் படித்தவர்கள் நன்கு அறிவார் கள். அவிப்பாகம் கொடாது யாகஞ் செய்த தக்கனின் யாகசாலையை அழித்து, தக் கனைக் கொன்று, ஆட்டுத் தலையை தக் கனுக்கு அளித்து உணர வைத்ததை புரா ணங்கள்மூலம் மக்கள் அறிகின்றனர். சைவ சமய நூல்கள் இறைவனின் செயலை

புராணங்கள் ஊடாக அறிய வைக்கின்றன. இந்தியாவில் ஒருகால் சமணசமயம் மேலோங்கி சைவ சமயத்தை அழித்தபொழுது எம் பெருமான் திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் தோற்றுவித்து அனல்வாதம், புனல் வாதஞ் செய்து செய்ய வைத்து சமணர்களின் செருக்கை அடக்கி வைத்தார். அது போல் அண்ட உலகங்களை அடக்கி ஆட்சி செய்த சூரனை, அடக்க முருகப்பெருமானைத் தோற்றுவித்தார். சூரனும் முருகனைப் பாலன் என எண்ணிப் போரிட்டான். போரில் தோல்வியுற்ற சூரனை சேவலும் மயிலுமாக ஏற்றுக் கொண்டார். திருவாதவூரர் அடிகள் புராணத்தில் தில்லைச் சிவன் ஆலயத்தை புத்த விகாரையாக்குவோமென்ற செருக்கில் சென்ற புத்த பிக்குகளும், அரசனும் அவன் மகள் ஊமைப் பெண்ணும் தில்லைசென்று தில்லை வாழ் அந்தணர்களை வாதஞ் செய்ய அழைத்தனர். தில்லைவாழ் அந்தணர்கள் மாணிக்க வாசகரை அழைத்து வாதிடும்படி வேண்டினர். மாணிக்கவாசகர் "நான் இவர்கள் (புத்த பிக்குகள்) முகங்களைப் பார்க்கக்கூடாது, திரையிடுங்கள், திரையின் ஒரு பக்கம் பிக்குகள் இருக்க மறுபக்கம் மாணிக்கவாசகர் இருந்து கேள்விகள் கேட்டார். அப்பொழுது புத்தபிக்குகள் பேசமுடியாது ஊமைகளாகப் போக அரசன் மகள் (ஊமைப் பெண்ணை) பதில் கூறக் கேட்டுக் கொண்டார். ஊமைப் பெண் ஊமை நீங்கிப் பதில் அளித்தாள். இச் செயலைக்கண்ட அரசன், தானும் மகளும் சைவ சமயத்தில் இணைந்து கொண்டனர். சபதம் கூறி வந்த புத்த பிக்குகள் கழு மரத்தில் ஏற்றப்பட்டனர் என்பதைப் புராணம் கூறுகின்றது. இவற்றை இப்போதுள்ள புத்த பிக்குகள் அறியாரோ? சைவ சமயத்தின் உண்மைகளை மறு சமயத்தவர்கள் அறியாமையினால் சில இடர்களைச் செய்கின்றனர்.

செருக்குற்றவர்களின் செருக்கை அடக்குகின்ற இறைவன், அவர்களைக் காப்பதும், அவன் கடமையாகும். அந்தவகையில் இறைவன் காப்பான் என்பது திண்ணம். ஊழிக் காலத்தில் இறைவன் கடல்களை பெருக்கெடுக்கச் செய்து அழிக்கவேண்டியவெல்லாம் அழித்து, அழியாது காக்கவேண்டியதை திருத்தோணிபுரம் சான்று பகர்கின்றது. ஊழிக் காலத்தில் தோணிபுர ஆலயம் தெப்பமாக மிதந்து, அழியாதிருந்ததை யாவரும் அறிவர். இந்த வகையில் வேதாரணியத்தில் வைக்கப் பட்ட திருமுறைகள் பன்னிரண்டில் தேவையற்ற திருமுறைப் பாடல்கள் கறையான் அரித்து சேதமாக்கிவிட்டன. இக்கால நிலைக்கு ஏற்ற திருமுறைப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பி எடுத்து, தொகுத்துள்ளார். எனவே இறைவன் எமைக் காக்க தேவையானவற்றை விட்டு மற்றையவற்றை அழித்துள்ளார்.

இறைவன் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என்று ஐந்தாம் குரவர் ஆறுமுக நாவலர் அருளியுள்ளார். அப்பர் சுவாமிகள் எம்பெருமானை கைலாயத் திருத்தாண்டகத்தில் "மூவாய் பிறவாய், இறவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" என அருளியுள்ளார். திருமூலநாயனார் இறைவனை,

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனசடைமுடி தாமரை யானே"

என அருளுகின்றார்.

நம்பிக்கையைக்கொண்டு மனிதனின் வீரத்தை நிர்ணயித்து விடலாம்.

கொரோனா நோயையும் அடக்க வல்லான் இறைவன். அந்த இறைவன் கடற்கரையான் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான், நோய்களை அழித்து, மக்களைக் காக்க வேலுடன் நிற்கின்றான். அவனை நம்பி வரும் அடியார்களுக்கு நோய் நீக்கி நல்லருள் புரிகின்றான. அந்த நம்பிக்கை மக்களிடம் இருப்பதில்லை. தினந்தோறும், சிறப்பாக வெள்ளிக்கிழமைகளில் ஆலயம் வந்து வழிபடுகின்றனர். அதுபோல் பூசகர்களும் காலம் தவறாது பூசை செய்து கொண்டிருக்கின்றனர். அவன் அருள் இருக்க பயம் ஏன்?

மோதகமும் கொழுக்கட்டையும்

மோதகமும் கொழுக்கட்டையும் தமிழருடைய சமய கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு உணவுப் பொருள். விநாயகருடைய கையில் மோதகம் வைத்திருப்பதால் விநாயகரின் உருவம் தோன்றிய காலத்திலேயே மோதகம் இந்து மக்களிடையே பிரபல்யமாக இருந்திருக்க வேண்டும்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை" என்று தொடங்கும் பாடலில் "கூழும் கொழுக்கட்டையும் தின்னலாம் தோழர்களே" என்று ஒரு வரி வருகிறது. ஆகவே ஆடி மாதப்பிறப்பு அன்று கொழுக்கட்டை அவித்துப் படைத்து பிரார்த்தனை செய்வது வழக்கம் எனத் தெரிகிறது. இன்றளவும் தைப்பொங்கலுக்கு மோதகமும் ஆடிப்பிறப்பிற்கு கொழுக்கட்டையும் பிரசாதமாக படைக்கப்பட்டு வருகிறது.

இவற்றை ஊன்றிக் கவனித்தால் இந்து மக்களின் புவியியல் அறிவும், ஆழ்ந்த சிந்தனையும் வெளிப்படுகின்றன.

பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. ஒருமுறை சுற்றிவர ஒருவருடமாகும். தை மாதம் முதல் திகதி, அதாவது தைப்பொங்கல் அன்று ஆரம்பமாகி அடுத்த தைப்பொங்கல் வரை 12 மாதம் ஆகிறது.

அதேபோல தைமாதம் ஆரம்பித்து ஆனிமாதம் முடிய 6 மாதங்களாகும். அதாவது அரை வட்டம் சூரியன் வந்துவிடும்.

ஆகவேதான் தைப்பொங்கல் அன்று சூரியனை பூமி முழுமையாக சுற்றி வருவதை வட்டவடிவமான மோதகம் அவித்துப் படைத்து பிரார்த்தனை செய்கிறோம். ஆனி மாதத்தில் அரைவட்டம் சுற்றிவந்ததைக் குறிக்கும் முகமாக ஆனி மாதத்திற்கு அடுத்தநாள் ஆடிப்பிறப்பன்று கொழுக்கட்டை அவித்துப் படைக்கிறோம்.

மோதகத்தின் நடுவே வைக்கப்படும் சுவையான பயறு, சர்க்கரை, தேங்காய் கலந்த கலவை பூரணம் என்று சொல்லப்படுவதையும் அவதானிக்கலாம். அத்துடன் உணவியல் வல்லுனர்கள் மோதகத்தை ஒரு நிறை உணவாகவும் கூறியுள்ளனர்.

ஆகவே தமிழ் மக்களின் கலாசாரத்துடன் இந்த புவியியல் அறிவும் கலந்து உணவு முறையிலேயே அடங்கியுள்ளதை வியக்காமல் இருக்க முடியாது.

-எஸ்.ஆர். சரவணபவன்-

நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...)

P. சதீஸ்	கச்சேரி	2000.	00
மகிந்தன் ரஜீவி	சுவிஸ்	5000.	00
திரு அகிலன் குடும்பம்	பிரான்ஸ்	1000.	00
திரு சீவரெட்ணம் குடும்பம், திரு விக்னேஸ்வரன் குடும்பம்	கனடா (இணுவில்)	5000.	00
திரு துஷிதரன்	சுன்னாகம்	1000.	00
பரராஜசிங்கம் நினைவாக	தொல்புரம்	2000.	00
தி. தினேஸ்குமார்	சுவிஸ்லாந்து	1000.	00
த. அச்சகன்	நியூஸ்லண்ட்	5000.	00
Dr த. கோணேஸ்வரன்	வவுனியா	5000.	00
ஈ. மகேந்திரநாதன்	கனடா	10000.	00
பு. பிறேமி	லண்டன்	மரக்கறி 2புட்டி அரிசி	
T. ஜிதுஜா	யாழ்ப்பாணம்	10000.	00
விஸ்வலிங்கம் பத்மநாதன்	சுவிஸ்	5000.	00
பிரதீபன் அனனியா	லண்டன்	8000.	00
திருஞானயோகநாதன் குடும்பம்	லண்டன்	1000.	00
திரு நிமலன் குடும்பம்	லண்டன்	3000.	00
திரு ஜனகன் குடும்பம்	கனடா	1000.	00
திரு சின்னராசா குடும்பம்	இணுவில்	5000.	00
த. சொக்கலிங்கம்	இணுவில்	1000.	00
வி. கஜிதரன்	சுன்னாகம்	2000.	00
திரு அருமைநாதன் குடும்பம்	அச்சுவேலி	1000.	00
திரு வினோத்	மானிப்பாய்	500.	00
பூவேந்தன் பகல் பராமரிப்பு நிலையம்	சாவகச்சேரி	15000.	00
ந. மணிவண்ணன் வதிரி	கரவெட்டி	24000.	00
இ. வேல்குமார்	மானிப்பாய்	2000.	00
திரு ஜெயபாஸ்கரன் குடும்பம்	மானிப்பாய்	10000.	00
சந்திரா நடராஜா	கனடா	1மூடை அரிசி	5000. 00
நி. ஜெகாஸ் நி. ஜெயசாந் } அந்திரான் நி. ஜெய்சனா	கரவெட்டி	20000.	00
நா. பகீரதன்	அவுஸ்திரேலியா	20000.	00

தன்மீது நம்பிக்கை வைப்பவன் எப்போதும் வெற்றி பெறுவான், மகிழ்ச்சியும் அடைவான்.

M. செந்தூரன்	யாழ்ப்பாணம்	1000. 00
S. அபியுகா	கிளிநொச்சி	1000. 00
செ. கந்தசத்தியதாஸ்	சிறுப்பிட்டி	4000. 00
K. துஷாரா	நீர்வேலி	1000. 00
சீ. விக்னேஸ்வரன்	இணுவில்	15000. 00
நா. அரவிந்தன்	இணுவில்	500. 00
ப. பாக்கியம் நினைவாக	பருத்தித்துறை	5000. 00
ம. ஜெயசோதி	உரும்பராய்	1000. 00
க. அரன்ஜா	மாதகல்	1000. 00
ப. கரிகரன்	புத்தூர்	500. 00
திரு சோமதேவக் குருக்கள்	நீர்வேலி	500. 00
திரு இராசேந்திரக் குருக்கள்	நீர்வேலி	3000. 00
சி. கோபி	சுன்னாகம்	5000. 00
கு. விதுஷன்	கல்வியங்காடு	5000. 00
T. கேஷிக்	சுதுமலை	1000. 00
N. நவராஜசிங்கம்	கொக்குவில்	1000. 00
திருமதி சிவபாதசுந்தரம்	கோப்பாய்	10000. 00
ரேவதி லிங்கம் குடும்பம்	கோண்டாவில்	1000. 00
P. சூரியகுமாரன்	கனடா	2000. 00
சி. சுரபி	நீர்வேலி	1மூடை அரிசி
வைத்திலிங்கம் குடும்பம்	மாவிட்டபுரம்	2புட்டி அரிசி 2000. 00
ரவீந்திரன் சுப்பிரமணியம்	கனடா	1மூடை அரிசி 10000. 00
வி. தயாநிதி	கிளிநொச்சி	500. 00
க. நவரத்தினம்	நீர்வேலி	1000. 00
திரு சதீகரன்	புன்னாலைக்கட்டுவன் தெற்கு	5000. 00
N. திருக்குமரன்	கொக்குவில்	1000. 00
கா. தயாபரன்	கொழும்பு	3மூடை அரிசி
த. ஜெயந்தினி	அச்சுவேலி	5000. 00
இ. கார்த்திக், இ. கற்பகன்	இன்பருட்டி	5000. 00
ப. ஆனந்தமூர்த்தி	யாழ்ப்பாணம்	1000. 00
ஆ. சத்தியபாமா	இடைக்காடு	2000. 00
வே. புவனேஸ்வரி	நல்லூர்	1500. 00
சூரியகுமார் மஞ்சுளா	நல்லூர்	5000. 00
J. சந்திரப்பிரகாசம் குடும்பம்	பருத்தித்துறை	5000. 00
க. சபாபதிப்பிள்ளை	அவுஸ்திரேலியா	6000. 00
திருமதி க. அகல்யா	நெல்லியடி	500. 00
S. பிரகாஸ்	கொக்குவில்	5000. 00

(தொடரும்...

திருவாசகம் என்னும் தேனில் சில துளிகள்

– திரு ஆ. விநாயகமூர்த்தி அவர்கள் –

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ!
இன்றோர் இடையூ றெனக்குண்டோ!
எண்டோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

இப்பாடல் யாரால்? எப்போது? எதற் காகப் பாடப்பட்டது? இதன் உட்கருத்து என்ன? என்பதை நோக்குவோமாயின், மாணிக்க வாசக சுவாமிகள் என்றும், திருவாதவூரடிகள் என்றும் போற்றப்படும் பிராமணகுல உத்தம ரால், திருவாசகத்தில் குழைத்தபத்து என்னும் ஆத்தும நிவேதனபதிகத்தில் திருப்பெருந் துறைத் திருத்தலத்திற் பாடப்பட்டதாக அறி கிறோம். திருவாதவூர் அடிகள் மதுரையம் பதியில் பாண்டிய மன்னனின் முதல் மந்திரி யாக அரசபணி ஆற்றிய பெருமகனார் ஆவர். பாண்டிய மன்னன் தனது படைபலத்தைப் பெருக்குவதற்காகக் குதிரைப் படைக்கான குதிரைகளை வாங்கும்பொருட்டு வாதவூரரிடம் அதிக நிதி வழங்கி, சேவகர்கள், சேனாதி பதிகள் சகிதம், குதிரை வாங்குவதற்கு செல்லும்படி பணித்தனன். குதிரை வாங்கு வதற்கு வாதவூரர் செல்லும் வழியில் எம் பெருமானாகிய சிவன் பிராமணகுரு வேடத் தில் குருந்தமர நீழலில் சீடர்களுக்கு அறம் உரைத்தபடி அமர்ந்திருந்தார். இதைக் கண் ணுற்ற வாதவூரடிகளுக்கு பிறவி ஒழிக்கும் ஞானம் உதயமாகியது. எம்பெருமானின் நயனதீட்சையும் திருவடி காணும் பேறும் கிட்டியது.

இதன் பயனாக சித்தரானார், பித்தர் ஆனார், சீவன் முத்தரானார். தனது நிலை மறந்தார். பணி மறந்தார். இதன் விளைவு கொண்டுசென்ற நிதி யாவும் ஆலய அறப் பணிக்குச் செலவாயிற்று. உடன் வந்த சேனாதிபதிகள் சேவகர்கள், இவரின் நிலை கண்டு திகைத்தார்கள். மன்னனிடம் சென்று முறையிட்டார்கள். மன்னன் இதனைக் கேள்வி யுற்று, வாதவூரரை அழைத்து, குதிரைகள் எங்கே எனக் கேட்டனன். வாதவூரர் இறை வனிடம் முறையிட்டார். இறைவன் வாதவூரர் கனவிற் தோன்றி ஆவணி மூலத்தன்று குதிரை கள் வரும் என்று கூறும்படி வாதவூரரிடம் கூறி, காட்டு நரிகளைக் குதிரைகளாக்கி, எம்பெருமான் தானே ஓட்டுனராக வந்து, குதிரைகளைக் கொடுத்துவிட்டு மறைந்தருளி னார். அன்றிரவு குதிரைகள் நரிகளாக மாறி,

அங்கு நின்ற குதிரைகளைக் கடித்துவிட்டு காட்டுக்குள் சென்றுவிட்டன. இச் செய்கை யைக் கண்ணுற்ற மன்னன், வாதவூரரைத் தண்டித்தான். அதன்பின் இறைவன் வைகை நதியைப் பெருகச் செய்ததும், தனது அடிய வருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்ததும் சுவை யான புராணச் செய்தியாகும்.

இதில் மேற்கூறிய பாடல் எப்போது பாடப்பட்டது என்று நோக்குவோமாயின் மன்னனின் தண்டனையில் வேதனைப்பட்டுப் பாடி இருக்கலாம் என்று எண்ணுவதும் பொருத்த மானதே. அதற்கு விளக்கம் வேண்டியதில்லை. இப்பாடலில் புகுந்துள்ள வேறோர் கருத் தையே இங்கு முன்வைக்க விரும்புகிறேன்.

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் - அன்று குருந்தமர நீழலில் தேவரீர் என்னை ஆட்கொண்டு, நயனதீட்சை வைத்தபோதே, எனது உடல் பொருள் ஆவி அத்தனையும் என்னிடம் இல்லை. எல்லாவற்றையும் தேவரீர் இடத்தே ஒப்படைத்து விட்டேன். முத்திநெறி அறியாத மூர்க்கர் களுடன் இருந்த என்னைப் பக்திநெறி அறி வித்து, ஆட்கொண்டாய். இப்போது நீ வேறு நான் வேறல்ல. உன்னைத் தந்தாய், என்னை ஆட்கொண்டாய். அதனாலே நான் முடிவில் லாத ஆனந்தம் பெற்றேன். நீ என்னிடம் எதுவும் பெறவில்லை. என்னால் உன்னைப் பணிவதன்றி வேறு கைமாறு செய்ய முடிய வில்லை ஐயனே. இந்த நிலையில் எனக்குத் துன்பமா? யார் சொன்னார்கள். அன்றே என்னை ஆட்கொண்டாய். அன்றுமுதல் இன்றுவரை இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதிருக் கின்றாய். பின்னர் நீ வேறு நான் வேறா? இல்லை. இல்லை. நீ நல்லதைச் செய்தாலும், தீமையைச் செய்தாலும் அது உனது விருப் பம். நான் யார் இதற்கு. நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் அடங்க வைத்து என்னை ஆட்கொண்ட எம் பெருமானே. உனது லீலையை யாரறிவார். எல்லாம் நீயே. என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை. இனித் தெய்வமே உன் செயலே என்று உணரப்பெற்றேன். அதனால் யான் பிறவாத - இறவாத பேரின்ப முத்தி அருளும் பெருமானே இதை யார் உணருவார் கள் உனது அருள்பெற்ற ஞானிகளே இதை உணருவார்கள்.

சாதாரண மனிதர்களான எமது மனோ நிலையில் பாண்டிய மன்னனின் தண்டனை யால் வேதனையுற்று மனம் நொந்து, இப் பாடலைப் பாடியிருக்கலாம் என்று நினைப் பதில் தவறில்லை. ஆனால் பூலோகத் தேவர் கள் எனப் போற்றப்படும் பிராமணோத்தம குலத்திற் பிறந்து, எம்பெருமானால் ஆட்கொள் ளப்பட்டு, நயன தீட்சை பெற்றுப் பிறவா முத்திநிலை பெற்ற, நம் சமய குரவருள் ஒருவராகிய திருவாதவூரடிகள், வேதனைப்பட்டு இப்பாடலைப் பாடினார் என்பதை அப் பெருமகனாரின் மனோநிலையில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இன்பத்தையும் துன்பத்தையும் சம மாகக் கருதும் பெண் ஆசை, பொன்னாசை, மண்ணாசையற்ற வாதவூரரும் திருநாவுக்கரசு சுவாமிகளும் உலகியல் இன்பங்களுக்கு உட்பட்டவர்கள் அல்ல. அவர்களின் சிந்தனை முற்றுந்துறந்த முனிபுங்கவர் நிலையில், கண் இமைக்கும் நேரமாயினும், இறைசிந்தை மற வாத துறவற நிலையினர். இல்வாழ்வோரல்லர். இதனால் அவர்களுக்கு விருப்பு வெறுப்பும் இல்லை. இன்ப துன்பங்களும் இல்லை. யாவற்றையும் கடந்த மெஞ்ஞானிகள் அவர் கள் என்பதால் துன்பமுற்று இப்பாடலைப் பாடியதாக ஒப்புக்கொள்ள முடியவில்லை.

அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா யென்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா!
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்துவேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ!

இப்பாடல்மூலம் திருவாதவூரர் கூற நினைப்பது யாது? யான் இறக்கக்கூடாது. சாகா வரந்தா எனக் கூற முற்படுகின்றாரா? சிந்தியுங்கள். அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாம் உன்னிடத்தே தந்தேன். என்னை ஆட்கொண்டாய் என்று கூறுபவர்; தனக்கு இறைவன் அருளாவிட்டால் தான் செத்து விடுவேன் என்கிறாரா? புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி, பல்விருகமாகி, பறவையாய்ப் பாம்பாகி, கல்லாய், மனிதராய்ப், பேயாய்க் கணங்களாய், எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுபேறு அடைந்துவிட்டேன் என்று வீடுபேறு பெறும் நம்பிக்கை இழந்து விடாதவர். செத்தே போனாற் சிரியாரோ? என்று கூறுவது எதற்காக? "இறவாமற் பிறவாமல் எனைஆள் சற்குருவாகி" என்று முருகப்பெருமானை வியந்து போற்றுகிறார் அருணகிரிநாதர் சுவாமிகள். காரைக்கால் அம்மையாரின் சரிதத்தில் சேக்கிழார் பெருமான்

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும்..." என்று தொடர்கின்றார்.

இவ்வாறு இறவாத, பிறவாத நிலையைப் பெரு ஞானிகள் வேண்டுவதற்கும், திருவாதவூரடிகள் "செத்தேபோனாற் சிரியாரோ? என்று வினவுவதற்கும் ஒரு ஒற்றுமை இருப்பதைக் காண முடிகிறது. இவ்வகையில் அன்று எம்பெருமானின் ஸ்பரிச தீட்சைப்பேறு பெற்றபோது பிறவாத, இறவாத முத்திநிலைப்பேறு பெற்ற திருவாதவூரந்தணர்; ஏனைய சைவ சமய மானுடர்களுக்காகவே "செத்தேபோனாற் சிரியாரோ" என்று பாடி வைத்துள்ளார்.

நாம் மனிதப் பிறவி எடுத்ததன் பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என நல்லைநகர் நாவலர் பெருமானார் கூறி வைத்தமைபோல; மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து இறக்கும் நிலை நம்மவருக்கு ஏற்படக்கூடாது. இறைபணி செய்து, எம்முளக் கோயிலிலே இறைவனைக் குடியிருக்க வைத்து, ஆராதித்துப் போற்றி, இறையருளாள ராக நாம் வாழவேண்டும்; அவ்வாறு வாழும்போது, இறையருள் பூரணமாக நமக்குக் கிட்டும் என்பது திண்ணம்.

இறந்தவரை அமரர் என்கிறார்கள். சிவபதம் அடைந்துவிட்டார் என்கிறார்கள். நாம் அமரர்கள் (தேவர்கள்) ஆவதற்கும், சிவபதம் அடைவதற்கும் தகுதி வேண்டாவோ? அத்தகுதிதான் என்னே! அதுவே இறை நம்பிக்கை. இறை வணக்கம். இறை சிந்தனை. இவையின்றி நாம்

வாழ முற்பட்டால் செத்தேபோனாற் சிரியாரோ? சிந்தியுங்கள். இக்கருத்திலேயே வாதவூரர் செத்தே போனாற் சிரியாரோ எனப் பாடி வைத்தார். இப் பெருமகனார் பாடிய திருவாசகத்தை எமது பரம்பொருளே எழுதிக் கையொப்பமிட்ட வரலாறு நாமறிந்ததே.

முடிவில் அருணகிரிநாதர் பாடிய "இறவாமற் பிறவாமல்" திருப்புகழைப் போல "இறவாத இன்ப அன்பு வேண்டி" சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம்போல செத்தே போனாற் சிரியாரோ? என்னும் வாதவூரடிகளின் திருவாசகம்போல அடியேனின் விநாயக விண்ணப்பப் பாடல் ஒன்று.

வேண்டுவ தெதுவுமில்லை வேழமா முகவ நின்றாள்
தீண்டுவ தல்லால்வேறு தெய்வமே யெதுவுமெண்ணேன்
வேண்டுவ தருள்வாயைந்து கரத்திறை யருளாளாயான்
மீண்டுமிவ் வையந்தன்னில் வந்துதித் திடாதவாறே.

பிழையைத் தேடிக் கண்டால்

மராட்டிய நாட்டில் பிறந்த ஞானி ஏகநாதர். பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே அவருடைய உள்ளம் இறையன்பை நாடியது. மற்ற சிறுவர்களைப்போல் அல்லாமல் எப்பொழுதும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராகவே இருந்தார்.

"ஏகநாதா! நீ தேவகிரிக்குச் சென்று ஜனார்த்தன பந்த் என்பவரைப் பார். அவர் உனக்குக் குருவாக இருந்து வழிகாட்டுவார்" என்ற குரல் அவருக்குக் கேட்டது.

தேவகிரிக்கு விரைந்து சென்ற அவர் ஜனார்த்தன பந்த் அவர்களின் திருவடிகளில் விழுந்து பணிவாக வணங்கினார். "என்னைச் சீடனாக ஏற்று இறையருள் எனக்குக் கிட்டுமாறு அருளவேண்டும்" என்று வேண்டினார்.

தேவகிரி மகாணத்தின் திவானாக இருந்த ஜனார்த்தன பந்த் தம் சீடராக ஏகநாதரை ஏற்றுக் கொண்டார்.

உள்ளன்புடன் குருவிற்கு எட்டு ஆண்டுகள் பணிவிடை செய்து வந்தார் ஏகநாதர். ஒருநாள் மாலை நேரம் ஏகநாதரிடம் கணக்குப் பேரேட்டைத் தந்த ஜனார்த்தன பந்த் "இந்தப் பேரேட்டுக் கணக்கில் ஒரு காசு குறைகிறது. எங்கே அந்தத் தவறு என்று கண்டுபிடி" என்றார்.

ஏகநாதர் இரவு முழுவதும் விழித்துக் கணக்குகளைச் சரிபார்த்தார். பொழுது விடிய சிறிது நேரத்திற்கு முன் அந்தத் தவறைக் கண்டுபிடித்தார். அவருக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. பிழையைத் தாம் கண்டுபிடித்துவிட்டதைப் பற்றி மகிழ்ச்சியுடன் குருவிடம் தெரிவித்தார்.

அதற்கு ஜனார்த்தன பந்த் "கணக்கில் உள்ள சிறு பிழையைக் கண்டுபிடிக்கவே நீ எவ்வளவு மன ஒருமையைப் பயன்படுத்தவேண்டி வந்தது. அப்படியானால் பரம்பொருளான இறைவனைக் கண்டு பிடிக்க எவ்வளவு மன ஒருமைப்பாட்டுடன் செயற்படவேண்டியிருக்கும். கணக்கில் சிறு பிழையைக் கண்டு பிடித்தற்கு இவ்வளவு மகிழ்ச்சி அடைகிறாய். வாழ்க்கை என்னும் கணக்கில் உள்ள பிழைகளைக் கண்டுபிடித்துத் திருத்திக்கொண்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாய்" என்று கேட்டார்.

தன்னை உணர்ந்த ஏகநாதர் அதன்பிறகு தன்னைச் சோதனை செய்வதிலும் ஆழ்ந்த தியானத்திலும் ஈடுபட்டார்.

நேர்மைக் குணமிருந்தால் நல்ல எண்ணங்களைச் செயற்படுத்த முடியும்.

யாமிருக்கப் பயம் ஏன்?

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இந்த இனிய புனிதமான காலைப் பொழுதினிலே, பயபக்தி பற்றிச் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

பயமும் பக்தியும் ஒன்றிணைந்தது தான் பயபக்தி. இங்கேயும் ஒரு கூட்டணி உண்டு. கூட்டணி அரசியலுக்கு மாத்திரம் உரியதல்ல, ஆத்மீகத்துக்கும் உரியதே. ஆத்மீகத்தில் பயம், பக்தியோடு கூட்டணி சேர்ந்தால்தான் பக்தி பலன் தரும்.

எம்மை, எமது உடம்பை எடுத்துக் கொள்ளுங்கள். இங்கேயும் ஒரு கூட்டணி உண்டு. எலும்பு, நரம்பு, இரத்தம், சதை, மனம் இவை யாவும் உயிர் என்னும் தனிக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்த அணியைப் பிரித்தால் அங்கு மரணம் சம்பவிக்கின்றது. ஒத்துழையாமை பிறக்கின்றது.

குழந்தை பிறந்த உடன் அதற்கு பெயர் சூட்டுகின்றோம். முன்பெல்லாம் எமது மூதாதையர்கள், இறைவனின் பல்வேறு நாமங்களைத் தம் குழந்தைகளுக்குச் சூட்டினார்கள். குழந்தைகளை அழைக்கும் சாக்கில் தினமும் இறை நாமத்தைப் பற்பல தடவை அவர்களால் உச்சரிக்க முடிந்தது. எத்தனை நல்ல பயன் உள்ள வாய்ப்பு அன்று! ஆனால், இன்று எல்லாமே தலைகீழாக மாறி வருகின்றது. இன்றைய குழந்தைகளுக்கு சூட்டும் பெயர்கள் எல்லாம் வளர்ப்புப் பிராணிகளுக்குச் சூட்டும் பெயர்போல் அமைந்துள்ளன. இங்கேதான் பயபக்தி அருகிக் காணப்படுகின்றது. இதற்கு விதிவிலக்குகளும் இல்லாமல் இல்லை. ஒருவேளை இந்த நவீன நாமங்கள் எண் சோதிடத்திற்குப் பொருத்தமாயிருக்குமோ?

பாட்டன், பாட்டி, தாத்தா முதலியவர்களது பெயர்களைத் தம் வாரிசுகளுக்குச் சூட்டும் வழக்கமும் முன்பு எம்மவரிடையே இருந்து வந்தது. இங்கே பயபக்தி தமது மூதாதையர்கள் மேல் காட்டப்பட்டது, செலுத்தப்பட்டது. ஆனால், இன்று?

"முருகன்" என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இதில் எத்தனை பொருள்! அழகு, இளமை, வனப்பு எல்லாமே அடங்கி உள்ளது.

முன்பு ஒரு குழந்தைக்குப் பெயர் சூட்டும் உரிமை யாருக்கு உண்டு என்ற சம்பிரதாயம் எம் மூதாதையர்களிடையே காணப்பட்டதுண்டு. பெற்றோரின் பெற்றோரைத் தவிர, குரு, குலகுரு இவர்கட்கே அந்த உரிமை வழங்கப்பட்டது.

குரு, உயிர், ஆத்மா இதனைப்பற்றி எமக்குப் புரியவைப்பவனே குருதான், ஆசான் தான். இவனே ஞான குரு. இவனுக்கு இல்லாத உரிமையா? இத்தகைய குருமாரிடமும் யாம் பயபக்தியுடன் பழகியாக வேண்டும். இதிகாசங்களை நோக்குவோம். இராமாயணத்தில், இராமனுக்குப் பெயர் வைத்தவர் யார்? சாட்சாத் வசிஷ்ட முனிவர். இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் இவை எல்லாம் வசிஷ்டமா முனிவர் சூட்டிய பெயர்களே.

இராமன் எனப் பெயர் ஈந்தான்
பரதன் எனப் பன்னினான்
இலக்குவன் என்று இசைத்தனன்
சத்துருக்கன் என்று சாற்றினான்

என்கிறது கம்பராமாயணம். எமது சமயம் மாதா, பிதா, குரு, தெய்வம் என

நால்வரைப் போற்றி வருதல் கண்கூடு. இதுவும் ஒரு கூட்டணியே. இராமாயணத்தை எடுத்துக் கொண்டால் இராமனைப் பெற்றெடுத்த பெரிய அன்னை - மாதா கோசலைதான். தான் கொடுத்த வாக்குக்காக உயிரைத் தியாகம் செய்த மேன்மை பொருந்திய தந்தை தச ரதன். குரு - ஞானம், தவம், சீலம், நிறை, நலம் நிரம்பப் பெற்ற வசிஷ்டர்.

எனவே, நாம், பழையவைதானே என்று எமது விழுமியங்களை, பழக்கவழக்கங் களை, எக்காரணம் கொண்டும் ஒதுக்கி வைத்துவிட முடியாது. கூடாது. பயபக்தியை இறைவனிடம் காட்டுவதோடு நின்றுவிடாமல் எம் மூத்தோர், பெற்றோர், குருவானவர்கள் போன்றோரிடமும் காட்டுவோம். இறை நாமங் களை எம் வாரிசுகளுக்குச் சூட்டி, தினமும் இல்லங்களிலும் இறை நாமத்தை உச்சரிப் போம். அறிந்தோ, அறியாமலோ நல்லவற்றைச் சுலபமான வழியில் செய்வோம், முயல் வோமா?

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?

மேற்படி தலைப்புக்கொண்ட கீழ்வரும் பாடல் தனிப்பாடல் திரட்டிலே உள்ள ஒன்றாகும். இது சொக்கநாதப் புலவர் அவர்களால் பாடப்பெற்ற ஒரு சிலேடைப் பாடலாகும்.

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை மங்காத சீரகத்தை தந்தீரேல்
தேடேன் பெருங்காயம் ஏரகத்துச் செட்டியாரே!

இ.ந்து மேலெழுந்த வாரியாக, மளிகைக் கடையிலே விற்பனையாளராகிய செட்டியாரிடம் பலசரக்குப் பொருட்களைத் தரும்படி கொள்வனவாளர் கேட்கின்றார்.

இதனுள் ஆழ்ந்து பொதிந்துள்ள தத்துவார்த்தமான பொருள் யாதெனில், எமது கொடிய உடம்பானது உலர்ந்துவிட்டால் உடலைப் பாதிக்கக்கூடிய கொடிய வினைக்கு அங்கே வேலையில்லை. அதன் பின்பு இந்த உடலைச் சுமந்திருக்கத் தேவையில்லை. நிலையான முத்தியாகிய மோட்சத்தைத் திருவேரகத்து செட்டியா ராகிய முருகப் பெருமானே நீர் எனக்குத் தந்துவிட்டால் பிறகு நான் இப்பிறவியைத் தேடமாட்டேன் என்பதாகும்.

வெங்காயம் - கொடிய உடம்பு
வெந்தயம் - கொடு வினை
சரக்கு - உடல்
மங்காத சீரகம் - நிலைபேறான முத்தி ஆகிய மோட்சம்
பெருங்காயம் - லௌகீக வாழ்வில் உழலும் உடம்பு.

-இராஜா தர்மலிங்கம்-

நாம் ரசித்துப் படிக்காத புத்தகங்களால் நமக்கு நல்ல பலன் கிடைப்பதில்லை.

சிவஞானபோதம் முதல் நூலா? மொழி பெயர்ப்பா?

– திருமதி சக்திவேல் மனோரஞ்ஜனி அவர்கள் –

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் மணிமுடியாய் விளங்குவது சிவஞானபோதம் ஆகும். "வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர்" எனத் தொடங்கும் பாடலில் இந் நூலின் சிறப்பினை அறிந்துகொள்ள முடியும்.

இந்நூல் இருபத்தெட்டு சிவாகமங் களில் ஒன்றான இரௌரவத்தின் 73ஆவது படலமான பாபவிமோசன படலத்தின் 13ஆம் அத்தியாயமான துவாதச சூத்திரத்தின் மொழி பெயர்ப்பே என டாஸ்குப்தா போன்ற சிலர் குறிப்பிடுவர். ஆனால் இது தொடர்பாக அறி ஞர்கள் இடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை முதலானோர் இதனைத் தனித்தமிழ் மூல நூலென ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். இதன் வழிநின்று திரு ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி சிவஞானபோதம் தனித்தமிழ் மூல நூலென நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூல் தனித் தமிழ் முதல் நூலே எனக் குறிப்பிடும் சான்றோர்கள் பல எடுத்துக் காட்டுக்களை முன்வைத்துள்ளனர். தாம் அருளியது முதல் நூல் அல்ல, மொழிபெயர்ப்பே என்று மெய்கண்டார் எங்கும் கூறவேயில்லை. அவ்வாறு அவர் மொழி பெயர்த்தது உண்மை யானால் அந்தச் செய்தியை, அவசியமாகக் கூறவேண்டிய இடங்கள், மிகுந்த பொருத்தத் தோடு கூறக்கூடிய இடங்கள் பலவற்றுள் ஓரிடத்திலேனும் அவர் தவறாமல் கூறியிருப் பார். உண்மையை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் மெய்கண்டாருக்கு ஒருபோதும் இருந்திருக்க மாட்டாது. உதாரணமாக கடவுள் வாழ்த்தில் வடமொழி சூத்திரங்கள் வந்த வரலாற்றைக் "கல்லால் நிழல் மலைவில்லார் அருளிய" என்பதன் பின் "சொல்லா றிரு தொடர் வல்லார் அடிதொழ" என்று குறித்து விட்டுப் பின்பு "பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே" என்று முடித்திருக்கலாம். இங்கு அல்லாவிடினும் அவையடக்கப் பகுதி யிலாவது தாம் வடமொழி மூலத்தினையே மொழிபெயர்த்திருப்பதாகவும் சிற்சில குறை பாடுகள் இருப்பினும் அறிஞர்கள் பொறுத் தருள வேண்டும் என்றும் கூறியிருப்பார். அவ் வாறு இல்லாமல் முதல் செய்கிற ஆசிரியர் ஒருவர் எப்படி அவையடக்கம் கூறுவாரோ அப்படியே தாமும் கூறியிருக்கிறார்.

சிவஞானபோதத்தை மெய்கண்டார் மொழி பெயர்த்தது உண்மையாயிருந்தால் வடமொழியில் முதல் சூத்திரத்தில் இல்லாத "என்மனார் புலவர்" என்ற சொற்களைச் சேர்த் திருப்பது மிகப்பெரிய குற்றமாக அமைந்து விடும்.

வடமொழியிலுள்ள பன்னிரண்டாவது சூத்திரத்தில் "ஏவம் வித்யாத் சிவஜ்ஞான போததே சைவார்த்த நிர்ணயம்" என்ற பகுதியை மெய்கண்டார் தமது பன்னிரண்டாம் சூத்திரத்தில் அடியோடு விட்டிருக்கிறார். மொழி பெயர்த்தது உண்மையானால் இதனைச் சேர்க்க அவசியமும் பொறுப்பும் மெய்கண் டாருக்கு உண்டு என்பர். இவருடைய மாணவர் களும் இவரை ஒரு மொழிபெயர்ப்பாளராகக்

கூறவில்லை என்பதும் கவனிக்கவேண்டிய விடயமாகும். உதாரணமாக மெய்கண்டாருடைய தலைமை மாணவராகிய அருணந்தி சிவாச்சாரியார் சித்தியார் சுபக்கம் மூன்றாம் பாயிரத்தில் "மெய்கண்டானூல் சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" எனக் கூறினாரே தவிர இரௌரவ ஆகம சூத்திரங்களையோ அவற்றின் மொழி பெயர்ப்பையோ சென்னியிற் கொள்வதாகக் கூறவில்லை. மேலும் இந்நூலின் பரபக்கம் பத்தாம் பாயிரத்தில் குரு மரபு கூறும் இடத்திலும் வடமொழி சூத்திரங்களும் மொழி பெயர்ப்பு செய்தியும் கூறப்படவில்லை. "முன் நாள் இறைவன் அருள்நந்தி தனக்கியம்ப நந்திகோதில் அருட்சனற்குமாரற்குக், கூறக் குவலயத்தின் அவ்வழி எம் குருநாதன் கொண்டு தீதகல எமக்களித்த ஞானநூலைத் தேர்ந்து" என்ற சொற்றொடரை ஆராயுமிடத்து மெய்கண்டார் கொண்டது வழி நூல் என்றும் கொடுத்தது நூல் என்றும் தெளிவாகப் புலப்படும் அவர் வடமொழி சூத்திரங்களைப் பெற்றது உண்மையானால் அவ்வழி எனக் கூறாமல் அம்மொழி என்று கூறியிருப்பார் என்பார்கள்.

சிவப்பிரகாசத்தில் நூல்மரபு கூறும் செய்யுளில் உமாபதிசிவாச்சாரியார் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தை முதல் நூலாகக் கூறுகின்றாரே தவிர வடமொழி சூத்திரங்களை அவர் கூறவேயில்லை. அவர் கூறாமல் விட்டதற்கு அச்சூத்திரங்கள் அவர் காலத்திலும் இல்லை என்பதைத் தவிர வேறு தகுந்த காரணம் ஒன்றுமே இல்லை என்பது இவர்களுடைய கருத்தாக அமைகின்றது.

மெய்கண்டார் காலத்திற்கு ஏறக் குறைய இருநூறு ஆண்டுகள் முன்பிருந்த திரிலோசன சிவாச்சாரியார் சித்தாந்த சாராவளி என்ற தமது வடமொழி நூலில் இந்தப் பன்னிரண்டு சூத்திரங்களில் ஒன்றையேனும் இவற்றை ஸ்ரீகண்டருத்திரர் நந்தி தேவருக்கு அருளிய வரலாற்றையேனும் கூறவே இல்லை. தமது நூலில் சரியா பாதத்தில் மூன்றாவது நான்காவது சுலோகங்களில் ஆகமங்களின் வகை, பெயர், வரலாறு முதலியன கூறும் இடத்தில் இரௌரவ ஆகமத்தின் பெயர் கூறப்படுகின்றதே தவிர இந்த சூத்திரங்கள் பன்னிரண்டும் அதில் உள்ளன என்ற செய்தியோ அவைகளை நந்திதேவர் பெற்றார் என்ற வரலாறோ கூறப்படவில்லை. சகல ஆகமங்களின் சாரமாக நந்திதேவருடைய மலைவு தீரதற் பொருட்டு இச்சூத்திரங்கள் அருளப்பெற்றிருப்பின் இவர் இச்செய்திகளைக் கூறாமல் விடுதற்கு நியாயமில்லை என்பது இச்சான்றோர்களுடைய கருத்தாக அமைகின்றது.

எனவே மெய்கண்டார் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்து அவர் காலத்திற்குப் பின்பு சுமார் 200 ஆண்டுகள் வரையில் இவ்வடமொழி சூத்திரங்கள் பன்னிரண்டும் இவை வந்த வரலாறும் இவைகளை மெய்கண்டார் தமிழில் மொழிபெயர்த்தார் என்ற வரலாறும் எந்த நூலிலும் எந்த ஆசிரியர் குறிப்புக்களிலும் காணப்படவில்லை.

மெய்கண்டார் குறிப்பிடும் சில விடயங்கள் வடமொழி நூல்களில் கூறப்படவில்லை என்பதனையும் இவர்கள் தங்களுடைய வாதங்களில் எடுத்துரைப்பர். உதாரணமாக அவையாய், தானேயாய், அவையேதானாய் என்ற அந்வயத்துக்கு இடம் கொடுத்து கலப்பினால் ஒன்றாய் பொருள் தன்மையால் வேறாய் தொழிற்பட்டால் உடனுமாய் இறை நிற்கின்ற நுட்பம் மெய்கண்டார் திருவாக்கிலே காணப்படுகிறதே தவிர வடமொழியிலில்லை. வியாப்தியாயிருத்தலின் அநந்யன் என்று காரண காரிய முறையிருப்பதுபோல எக் காரணத்தால் அந்யன் என்பதை வடமொழி சூத்திரம் கூறவில்லை. சித்தும் சத்துமாக

விளங்குவதே சிவம் என்பதை வடமொழி சூத்திரம் விளக்கவில்லை. சித்துக்கும் அசித் துக்கும் உள்ள வேறுபாட்டை மெய்கண்டார் வாக்கிற் காணலாம். வடமொழி சூத்திரத்தில் காண இயலாது. இவ்வாறான பல உதாரணங் களை எடுத்துக்காட்டி தனி முதல் என குறிப் பிடுவார்கள்.

சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு என்ற கருத்தாடலை முதன் முதலில் ஆரம் பித்தவர் "மதுரை சிவப்பிரகாசரே. அவர் சிவப் பிரகாச நூலுக்கு எழுதிய உரையில் இம் மொழி பெயர்ப்புச் சார்ந்த உரையாடலை முதன் முதலில் தொடக்கி வைத்தார்". அவர் வழியிலேயே சிவஞான முனிவர், சிவாக்கிரக யோகிகள் ஊடாக இக் கதை பரவியது என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இதனை மொழி பெயர்ப்பு எனக் குறிப்பிடும் சிவஞான முனிவர் "காமிகம் முதலிய சைவாகமங்களுள் ஞான பாதப் பொருளின் இகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதத்திற்கு ரௌரவ ஆகமத்தினின்று எழுந்த சிவஞானபோத நூலினைத் தமிழுலகம் உய் தற் பொருட்டு மொழிபெயர்ப்புச் செய்து பொழிப் புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர்". இவ் வாறு தனது கருத்தினை முன்வைக்கின்றார்.

சிவஞானபோதம் தனி முதல் எனக் குறிப்பிடுபவர்கள் தக்க சான்றாதாரங்களை முன்வைத்துள்ளதைப் போன்று இது மொழி பெயர்ப்பு நூல் எனக் குறிப்பிடுபவர்கள் இவ் வாறான தக்க சான்றாதாரங்கள் எதனையும் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இத் தன்மைகளினால்தான் போலும் சிவலிங்கனார், இன்றைய ஆய்வாளர் மெய்கண்ட தேவரின் சிவஞானபோதம் முதல் நூலே என்றும் அதன் மொழிபெயர்ப்பே வட மொழிச் சிவஞானபோதம் என்றும் அறுதியிட்டு உரைக்கின்றமை அவதானிக்கத்தக்கதாகும்.

இந்நூல் தனி முதல் நூலா அல்லது மொழிபெயர்ப்பு நூலா என்ற ஆய்வு தனித்து செய்யப்படத்தக்க பெரும் ஆய்வாகும். அத னால்த்தான் இது தொடர்பான ஆய்வுகள் இன்றும் இடம்பெற்றவண்ணமே இருக்கின்றன எனலாம். எவ்வாறாயினும் சைவசித்தாந்த கருத்துக்களைத் திறம்படத் தர்க்க ரீதியில் எடுத்துரைக்கும் மெய்கண்ட சாஸ்திரங்களில் முதல் நூலாகப் போற்றப்படுகின்றது. எனவே சித்தாந்தக் கருத்துக்களை விளங்கிக்கொள் வதற்கு இந்நூல் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனால் மேற்குலக அறி ஞர்கள் கூட இந்நூலினைப் போற்றுகின்றனர். ஜோன் பயற் என்பர் "உலகில் தர்க்கமுறை யில் அமைந்த மிகச் சிறந்த தத்துவ நூல் இது" எனக் குறிப்பிடுகின்றார்.

முன்னேறும் மனிதன், துறுதுறுப்பு உள்ள மனிதனாக இருக்கிறான். ஏன்? எப்படி! என்று அவன் எல்லாவற்றைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறான். எப்படிச் செய்யப்பட்டிருக்கிறது, யார் செய்தது, எப்படி வேலை செய்கிறது என்று விசாரிக்கிறான். புதிய துறைகள், புதிய விசயங்களைப்பற்றித் தெரிந்து கொள்கிறான். புதிய திறமைகளைச் சம்பாதித்துக்கொள்வதிலும் புதிய மனிதர்களைச் சந்திப்பதிலும் புதிய இடங்களைப் பார்ப்பதிலும் ஆவல் உள்ளவனாக இருக்கிறான்.

நெஞ்சத்திலிருந்து வரும் சொல், வியப்புகளை விளைவிக்கிறது.

ஆற்றங்கரையான் நூல் வெளியீட்டு விழாவில் சந்நிதியானின் பேரற்புதம்

–திரு நா.வி.மு. நவரத்னம் அவர்கள்–

1988 அல்லது 1989ஆம் வருடம் என்று நினைவுண்டு. யாழ் பல்கலைக்கழகத் தில் இருந்து மேற்குறித்த நூல் வெளியீட்டிற்கு வந்து இசை விருந்து ஒன்று தரவேண்டும் என எனது பேரன்பு பெருமதிப்பிற்கினிய பேராசான் மேற்படி நூலின் ஆசிரியருமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களது விருப்பமும் இருந்தது. இவ்விழாவில் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், அன்பர் கணேச லிங்கம், பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரி யர் கோபாலகிருஷ்ணன், கலாநிதி மா. வேத நாதன் உட்பட இந்து நாகரிகத்துறை அறிஞர் கள் உள்ளூர் அறிஞர்கள் குறிப்பாக பேராசிரி யர் சிவத்தம்பி உட்பட பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து எனது நிகழ்ச்சி. எனது குடும்பம் அனைவரும் சென் றிருந்தோம். முருகப்பெருமானது பெருமைகள் நிறைந்த சந்நிதியான் நூலில் அமைந்த பாடல் களைச் சுமார் 3 மணிநேரம் பாடியபின் எனது நிகழ்வு நிறைவு செய்யப்பட்டது. "ஆற்றங் கரையான்" எடுத்து வந்த நூல்கள் யாவும் பக்தர்களிடம் சென்று விட்டது. இறுதியில் நூல் கிடைக்காமல் பலர் காணப்பட்டனர்.

தேர் அர்ச்சனைகளும் இறுதி நிலைக்கு வந்தன. மக்கள் வெள்ளம் எங்கும். நம்முடன் வந்த அன்பர்கள் அனைவரும் சென்று விட்டனர். நான் ஆலின் கீழ் நிழலில் சிறிது இளைப்பாறிடச் சென்றேன். பிள்ளைகள் உணவுக்காகத் தங்கள் வேலைகளைத் தொடங்கினர்.

ஓர் அன்பர் வந்து "ஐயா நீங்கள் தானே தேரடியிலிருந்து பாடியவர்". நான் "ஓம்" என்று கூறினேன். "உணவு குழந்தை கட்கும் உங்களுக்கும் தயாராக உள்ளது. சென்று உண்ணுங்கள்" என்று கிழக்குப் புற மாக நேரே செல்லும் வீதியில் சனக்கூட்டமாக உள்ள இடத்தைக் காட்டினார். குழந்தைகள் ஐஸ்கிறீம் தெரிந்த விடயம். நான் அதைத் தடுத்து பிள்ளைகளுடனும் எனது மனைவி யுடனும் கையில் வெள்ளிச் செம்பு பால் கொண்டு வந்தது. அர்ச்சனைப் பொருட் களுடன் சென்றோம்.

தேர்முட்டிக்குப் பக்கத்தில் 15,20 யார் நேர் றோட்டில் வலப்பக்கம் சென்றவேளை "ஒரு அம்மா வழிமறித்து எங்கள் வீட்டில்தான் உங்களுக்கு உணவு" என்று உள்ளே அன் புடன் அழைத்துச் சென்று புதிய பாயில் இருத்தி ஆலம் இலைகளில் அவிந்த மிக அருமையான கற்கண்டு, பால், தேன் கலந்த புக்கைத் தளிசைகளை தட்டத்தில் வைத்துக் கொடுத்தார். பிள்ளைகள், நான், மனைவி யாவரும் வயிறார உண்டோம். சுடச்சுடப் பாலும், சுவாமி பிரசாதம் பழமும் கொடுத்தார்.

"நாங்கள் சாப்பிடவில்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும் அம்மா" என்று அன்னையிடம் வினவினேன். "ஐயா சொன்னார் அவர்களுக்கு உணவு கொடு. குழந்தைகளுடன் வந்துள்ளார்" என்று பதில் தந்தார்.

"நான் இத்துணை வயதளவில் இப்படி ஒரு ருசியான பொங்கலை உண்ணவில்லை. மிக மிக அருமையாக உள்ளது. பாடிய களைப்பு எல்லாம் பறந்துவிட்டது" என்றேன். அவர் ஒரு புன்சிரிப்பு மாத்திரம்.

புறப்பட முன்பு ஐஸ்கிறீம் பிள்ளைகள் ஐஸ்கிறீம் கடைக்குச் சென்று அவர்களுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் புறப்படத் தயாரான நிலையில், அந்த அம்மாவுக்கு நன்றி கூறவேண்டும் என மனம் எண்ணியது. மீண்டும் அதே பாதையால் சென்றுதான் பஸ்வண்டி எடுக்க வேண்டும்.

குறித்த இடத்திற்கு வந்து குறித்த இடத்தைப் பார்த்தபோது இடிபட்டு அழிவு நிலையில் புதரும் குப்பைகளுமாகக் கிடந்த வீடாக அது காட்சியளித்தது. நம்பமுடியவில்லை- நம்பமுடியவில்லை. உடல் நடுங்கியது. உள்ளம் சிலிர்த்தது. கண்கள் நீர் தாரை தாரையாக அப்பன் சந்நிதியை நேரே பார்த்தபடி இதை யாரிடமும் கூறவில்லை. கடந்த 30 வருடங்கட்கு மேல் நடந்த பேரதிசயம். இதில் நான் உணர்ந்த பல உண்மைகளும் தெளிவுகளும் பலப்பல.

சீரிலங்கும் செல்வச் சந்நிதியான் திருமுன்றில்
பேரிலங்கும் ஆச்சிரமம் தன்னில் வைகும்
பாரிலங்கும் "அன்னபூரணி" அருளமுதை
வாரி வாரி வழங்குகின்றாள் வாழி வாழி!

அருள் மோகனதாசன் அன்பர் என்பார்
ஐயனின் பேரருளால் வந்த பிள்ளை
பொருள் வேண்டி யெங்கும் செல்லாப்பிள்ளை
மயிலேறும் பெருமாளும் வள்ளியுமவர்
வலமிடமாய் நின்றருள் சுரக்க
வழங்க நின்றார் அன்னமலை வாழி வாழி!

"அண்ணலார் அடியார்க்"கென்றும் அமுதமீந்து
அவனியில் தழைத்து நின்றார் வாழி வாழி!
அருள்நிதி யாம் வள்ளிமணாளன் என்றும்
அள்ளி அள்ளி அருள் சுரந்தே வாழி வாழி!

ஆசாபங்கத்தினால் அதிருப்தியடைந்து, வழியில் இவ்வளவு பெரிய முட்டுக் கட்டைகள் ஏன்? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கிறோம். சௌக்கியமாக எவ்வித சிரமமுமின்றிக் கப்பலை ஓட்டிச் செல்வதற்குப் பதிலாகப் பிரதிகூலக் காற்றையும் கொந்தளிக்கும் கடலையும் எப்பொழுதுமே எதிர்த்துப் போராட வேண்டுமா என்று நாம் ஆசைப்படலாம். துன்பமற்ற அமைதியான வாழ்வில் நற்குணங்களை வளர்க்க முடியாது என்பதே அதற்குக் காரணம். துயரத்தையும் இடுக்கண்களையும் அநுபவித்து ஆன்மா உறுதிபெறும்.

கோபம் வரும்போது அதனை அடக்கி ஆள்வதே வீரமாகும்.

(தொடர் -35)

சமய வாழ்வு

–திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்–

வாழ்க்கை ஒரு கனவு; அதை நனவாக்குங்கள் என்பது வாழ்வில் முக்கிய மானது. இந்த வாக்கியத்தில் வாழ்க்கையின் மிகப்பெரிய தத்துவம் அடங்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எத்தனையோ கனவுகளைக் காண்கின்றோம். அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்றெல் லாம் எண்ணுகிறோம். இந்த எண்ணங்கள் வெறும் கனவுகளாகவே நின்று விடுகின்றன. அவற்றை நனவாக்க வேண்டும் என்று நாம் எண்ணுவதே இல்லை.

எண்ணுவதே இல்லை என்றால் முயற்சி எங்கிருந்து வரப்போகிறது? சிலர் கனவு காண்பதிலேயே வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்து விடுகிறார்கள். கனவை நனவாக்க அவர்களுக்கு நேரமில்லாமல் போய்விடுகிறது. வாழ்க்கையில் கனவு காண் பதில் தவறு இல்லை. கனவுகள் கனவு களாகவே இருந்துவிடக்கூடாது. கனவை நிஜவாழ்க்கை ஆக்கிக் கொள்ளும் முயற்சி களில் நாம் ஈடுபடவேண்டும். அதற்கு முயற்சி தேவை. உழைப்புத் தேவை. மனஉறுதியும் அர்ப்பணிப்பும் தேவை.

வாழ்க்கை என்பது ஒரு தியாகம். அதை நாம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். "தியாகம்" என்றவுடன் பயம் கொள் ளத் தேவையில்லை. ஒவ்வொரு மனித னுடைய வாழ்க்கையும் சிறு சிறு தியாகங் களின்மீதுதான் உருவாகிறது. குழந்தைக்காக தாய் எத்தனையோ தியாகங்களைச் செய் கிறாள். கருவில் குழந்தை உருவான உடனே அவளுடைய தியாகமும் ஆரம்பமாகிறது. உணவு உண்ணமுடியாமல் தவிக்கிறாள். உடலில் ஏற்படுகின்ற எத்தனையோ உபாதை களைத் தாங்கிக்கொள்ளுகிறாள். தன் வயிற் றில் வளர்ந்துகொண்டிருக்கும் குழந்தைக்காக ஏற்கவேண்டிய தியாகங்கள் என அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறாள். குழந்தை பிறந்து ஆளாகும் வரை வளர்ப்பதற்கு அவள் செய்கின்ற தியாகங்களைப் பட்டியல் போட்டு விட முடியாது. கணவனுக்காக மனைவியும் மனைவிக்காக கணவனும் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அப் போதுதான் குடும்ப வாழ்க்கை நிறைவு பெறு கிறது; குடும்பத்தில் குதூகலம் ஏற்படுகிறது.

இப்படிக் குடும்பத்தில் உருவாகின்ற தியாகம் சமுதாய அளவில் பரவிப் படரும் போது அது ஒரு நல்ல சமுதாயத்தை உரு வாக்கி விடுகிறது. மற்றவர்களின் மகிழ்வுக்காக நாம் எதை விட்டுக்கொடுத்தாலும் அது தியாகம்தான். அது எப்போது ஏற்படும்? மற்ற வர்களின் மகிழ்ச்சியைப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடையும்போது ஏற்படும். மற்றவர்களிடம் அன்பு செலுத்தத் தொடங்கும்போது மற்றவர் களின் மகிழ்ச்சியே நம்முடைய மகிழ்ச்சியாக எண்ண ஆரம்பிக்கிறோம். இதைத்தான் நமது சமயம் "வாழ்க்கை என்பது அன்பு. அதை அனுபவியுங்கள்" எனச் சொல்கிறது.

அன்புதான் வாழ்க்கை. அன்பை வழங்கவும் வாங்கவும் தெரிந்துகொண்டால்

உண்மையான வீரம் பிறரைக் கீழே வீழ்த்துவதில் அல்ல.

அதைவிட சுகமான வாழ்க்கை அனுபவம் எதுவும் இருக்கமுடியாது. அன்பின் சக்தி மகத்தானது. அன்பினால் வெல்ல முடியாதது எதுவும் இல்லை. அன்பினால் குற்றவாளி களைத் திருத்தமுடியும். தீயவர்களை நல்ல வர்களாக்க முடியும். வாழ்க்கையை உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்ல முடியும். அதனால் தான் "அன்பே சிவம்" என்று சொன்னார்கள். ஒருவனிடம் அன்பு கூட ஆரம்பித்துவிட்டால் அடக்கம் தானாகவே தோன்றிவிடும். அன்பு அதிகரிக்கும்போது ஆணவம் தானாகவே அடங்கிப் போகிறது. நமக்கு வரும் துன்பத் தைப்போல மற்ற உயிர்களின் துன்பத்தை உணர ஆரம்பித்துவிட்டால் எல்லா உயிர் களும் ஒன்றே என்கிற உணர்வு தோன்றிவிடும். உயிர்களின் ஒருமைப்பாட்டுக்கு அன்பைவிடச் சிறந்த உபாயம் வேறில்லை. அனுபவங்களி லேயே உயர்ந்த அனுபவம் அன்பினால் ஏற்படுகின்ற அனுபவம்தான்.

இந்துமதம் வாழ்க்கையை நேசிக்கச் சொல்லவில்லை என்கிற தவறான கருத்து உடையவர்கள் பின்வரும் வாசகங்களின் உண்மையான பொருளை உணர்ந்துகொண் டால் கட்டாயம் தங்கள் கருத்தினை மாற்றிக் கொண்டு விடுவார்கள்.

வாழ்க்கை ஒரு சங்கீதம் - அதைப் பாடி மகிழ்ந்து விடுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதை மகிழ்ச்சியுடன் விளையாடுங்கள்.
வாழ்க்கை ஒரு சவால் - அதைச் சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு கனவு - அதை நனவாக்குங்கள்
வாழ்க்கை ஒரு தியாகம் - அதைச் செய்யத் தயாராகுங்கள்.
வாழ்க்கை என்பது அன்பு - அதை அனுபவியுங்கள்.

இந்துமதம் வாழ்க்கையை நேசித்து வாழச் சொல்லுகிறது. சுகத்தையும் துக்கத் தையும் சமமாகப் பார்க்கச் சொல்லுகிறது. பிரச்சனைகளைக் கண்டு ஓடி ஒளியாமல் தீர்வுகாணச் சொல்கிறது. எல்லா உயிர்களை யும் நேசித்து அன்புகாட்டச் சொல்லுகிறது. அப்போது வாழ்க்கை சுகமான அனுபவம் ஆகிவிடும் என்று எடுத்துக்காட்டுகிறது.

கடந்த முப்பத்திரண்டு மாதங்களாக சைவ சமயத்தின் பல்வேறு தத்துவங்களை யும் சில சமயப் பெரியோர்களின் கருத்தையும் எனது பாணியில் ஞானச்சுடர் வாசகர் களுக்கு சிற்றறிவுடன் எழுதியிருக்கிறேன். அடுத்து நமது சமயத்தில் விதியும் மதியும் பற்றி பரவலாகப் பேசப்பட்டுள்ளது. இது பற்றிய கருத்தைக் கூறலாம் என ஆரம் பிக்கிறேன்.

முற்பிறப்பின் கர்மவினைப் பயன்கள் இப்பிறவியில் தொடர்வதாக இந்து மதம் சொல்கிறது. கர்மவினைப் பயனை மனிதன் வெல்லவே முடியாதா? முடியாது என்று சொல்லிவிட்டால் மார்க்கண்டேயன் கதையும் சாவித்திரியின் கதையும் பொய்யாகி விடாதா?

மார்க்கண்டேயனின் காலம் முடிவுக்கு வரும்போதுதான் எமதர்மராஜன் அவன் உயி ரைப் பறித்துப்போக வருகிறான். எமதர்மராஜன் கணக்கில் தவறு இல்லை. அவன் தன் கடமை யைச் செய்யவே வருகிறான். மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு விடுகிறான். எமதர்மன் பாசக் கயிற்றை மார்க் கண்டேயர்மீது வீசும்போது, சிவலிங்கத்தை மார்க்கண்டேயர் கட்டிப்பிடித்து இருந்ததால், சிவலிங்கத்தையும் சேர்த்து இழுக்கவேண்டிய கட்டாயம் எமதர்மராஜனுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

மனஉறுதி இல்லாதபோதுதான் வாழ்க்கை வெறுமையாக இருக்கும்.

சிவன் கோபித்து சிவலிங்கத்தில் இருந்து வெளிப்பட்டு எமனைக் காலால் உதைத்து, என்றும் பதினாறு வயதுடன் வாழ் கின்ற வரத்தை மார்க்கண்டேயனுக்கு அருளு கிறார். இந்தக் கதை என்ன தத்துவத்தை உணர்த்துகிறது? கர்மவினைப் பயன்படி மார்க் கண்டேயனின் வயது பதினாறுதான். அதனால்த் தான் எமதர்மராஜனும் அவன் உயிரைப் பற்றிப்போக வருகிறான். ஆனால் மார்க்கண் டேயன் இறைவனைச் சரணாகதி அடைந்து விட்டதால் கர்மவினைப் பயனிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடிகிறது. அதாவது, கர்மவினைப்பயன் ஒருவனைத் தொடரும் என் றாலும், இறைவனின் அருள் ஒருவனுக்கு இருக்கும் என்றால் அவன் கர்மவினைப் பந் தங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியும்.

அடுத்து சாவித்திரியின் கதையைப் பார்ப்போம். சத்தியவானின் ஆயுள் முடிவுக்கு வரும்போதுதான் எமதர்மராஜன் சத்தியவானின் உயிரை எடுத்துக்கொண்டு போகிறான். கற்புக் கரசியான சாவித்திரி எமதர்மராஜனுடன் போராடி தன் கணவன் சத்தியவானின் உயிரை மீட்டுவந்து விடுகிறாள். அவளுடைய கற்பின் பலம் சத்தியவானின் கர்மவினைப் பயனை மாற்றி அமைத்துவிடுகிறது.

இந்த இரண்டு கதைகளும் இந்து புராணங்களில் காணப்படும் கதைகளே. இவை இரண்டிலும் சம்பவங்களும் மனிதர்களும் மாறுபட்டார்களே தவிர, முயற்சிகளும் விளைவு களும் ஏறத்தாழ ஒன்றுதான்.

ஒரு பிறப்பில் செய்கின்ற கர்மங்களின் பலன்கள் இன்னொரு பிறப்பில் தொடர்ந் தாலும், அடுத்த பிறவியில் தெய்வ பக்தியின் மூலமாகவும், ஒழுக்க நெறிகளின் மூலமாக வும் அந்தக் கர்ம பலன்களை வென்றுவிட முடியும் என்பதையே இந்தக் கதைகள் உணர்த்துகின்றன.

இந்து மதம் அறிவுபூர்வமான மதம். வாழ்க்கையின் இரகசியங்களை அறிந்து சொல்லுகின்ற மதம். ஆகவே கர்ம பலனைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லி உள்ள இந்து மதம் கர்ம பந்தத்திலிருந்து விடுபடுவதற்கான வழிகளையும் மார்க்கண் டேயன், சாவித்திரி ஆகியோரின் கதைகளின் மூலமாக சொல்லி இருப்பதாகவே கருத வேண்டும். (தொடரும்...

அன்பு என்றால் என்ன? எப்போதும் மாறாதது. பிரேமை உலகியல் சொந்தங்கள் எல்லாம் கணத்துக்குக் கணம் மாறுபாடு அடைபவை! திருமணத்திற்கு முன்பு கணவன் யார்? மனைவி யார்? அப்போது இந்த அன்பு (பிரேமை) எங்கே போயிற்று? யாருக்கும் தெரியாது? இது இடையில் வந்தது! தாய் - குழந்தை அன்பும் இடையில் ஏற்பட்ட அன்புதான்! ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை மாறாத அன்பு தெய்வத்துவம் மட்டுமே! இது கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையில் உள்ள சம்பந்தம்! இந்த அன்பு எக்காலத்திலும் மாறாதது! இந்த அன்பிலிருந்துதான் தெய்வீக உணர்வுகளை உணரமுடியும்.

சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில் இருபாலையூர் சேனாதிராய முதலியார் (1780 - 1840)

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

திருவும் கல்வியும் மேலோங்க ஏராண்ட பெருங்குடி மரபிற் தோன்றியவர் இருபாலையூர் சேனாதிராய முதலியார். சைவமும் தமிழும் ஊற்றெனப்பாயும் இருபாலையூர் தன்னகத்தே கொண்ட பல தொன்மையான வளங்களால் மேம்பட்டது. இதன் அயலூரான புனித நல்லூரின் இயற்கையான தெய்வீகம் சார்ந்த பல காலச் சரித்திரத்தொடரால் மேலும் பிரகாசித்தது. சேனாதிராய முதலியாரை என்றும் போற்றும் வகையில் சான்றோனாக்கிய பெருமைமிக்கவர் இவரின் தந்தையாரான நெல்லைநாத முதலியார் என அறிவோம்.

நெல்லைநாத முதலியார்

தொல்புகழ் தெல்லிப்பழையில் பாரம்பரிய கல்விக் குடும்பத்தில் பிறந்தவர் நெல்லைநாத முதலியார். சைவப் பண்பாட்டின் சின்னமாகச் செந்தமிழின் உறைவிடமாக மிளிரும் சிறப்பை இவரின் கர்ப்பூரவாசனையுடைய மதிநுட்பம் எடுத்துக்காட்டியது. செந்தமிழை ஆவலுடன் கற்றுத் தேறிய புலமைமிக்கவர். இப்பெரியார் ஏராண்டுவளம் சேர்த்த சிறப்பால் திருவும், அயராது தேடிக்கற்றகல்வியும், கல்வியாற் சேர்த்த புலமையும் மிக்கவர். வாலிபவயதில் பல சீரவரிசையையும் கொண்டவர். இல்லறம்நாடி இருபாலையிற் துணைதேடி நல்லறம் போற்றி வாழ்ந்தவர். இவர் தமது வாழ்வாதாரம் சிறக்கப் பெருநிலப்பரப்பில் ஏராண்டு பொன்னெனப் பெருகும் நெல்வளம் குவித்து நிதிவளம் சேர்த்தார். தமது கல்வியூற்றினால் நாவளத்தையும் நிலை நிறுத்தினார்.

புலமையின் சிறப்பு

அக்காலத்தில் யாழ்நகர் வண்ணார் பண்ணையில் வாழ்ந்த முத்துக்குளிப்பு வர்த்தகத்தில் சிறந்து பொருளீட்டியவர் வைத்திலிங்கம் செட்டியார். இவர் தமது நற்பொருளீட்டிய பயனாகச் சைவநெறிப் பக்திமேலிட வண்ணார்பண்ணையில் வைத்தீஸ்வரன் சிவாலயத்தை (செட்டியார் சிவன் கோயில்) நிறுவினார். ஆலயச் சூழலிலமைந்த பெரு மாளிகையில் வாழ்ந்தவர். இவர் சைவத்திலும் தமிழிலும் கொண்ட ஆர்வத்தினால் தம்மை நாடிவரும் புலவர்களின் தகமையுணர்ந்து பரிசிலாக முத்தை அளந்து வழங்கினார். இவரின் ஈகைப்பணியால் "முத்தளப்பன் செட்டி" எனப்போற்றப்பட்டார்.

செட்டியாரின் சைவத்தமிழ்ப் பற்றைத்தூண்டியவர் கூழங்கைத் தம்பிரான் என்னும் கனகசபாபதி யோகியாரே. இவர் இச்சிவாலயத்தின் ஆஸ்தான வித்துவானாகவும் தமிழ்ப் பற்றுள்ள செட்டியாரின் குலகுருவாகவும் அமைந்தவர். செட்டியாரின் சிறப்பினால் நட்பும்

செந்தமிழில் மேலும் கற்றுத் தேறவும் எண்ணிய பலர் தமிழ் கற்கும் பேறு பெற்றனர். தமிழ் கற்கும் கூட்டத்திலொருவராகவே நெல்லை நாதமுதலியாரும் அமைந்தார். இதனால் நெல்லைநாத முதலியாரின் தமிழ் அறிவு மேலும் பிரகாசித்தது. இவ்விடத்தில் தமிழ் விரிவுரையும் செட்டியாரிடம் பரிசில் பெறவந்தோரின் கவிஅரங்கும் சிறப்படைந்தன.

இவ்விடத்தில் தமிழறிந்த பல புலவர்கள் மத்தியில் செட்டியாரிடம் பரிசில் வாங்கும் நோக்கில் தமிழகத்திலிருந்து வந்த செந்திக்கவி என்னும் புலவரொருவர் தமது உதவியாட்களுடன் வந்து செட்டியாரை வணங்கினார். தாம் செட்டியார்மீது கவிதைநூல் எழுதி வந்ததாகவும் அதனை நோக்குமாறும் வேண்டினார். செட்டியாரின் விருப்பின் பேரில் இறுமாப்புடன் வந்த புலவர் பாடல்களைப் பாடி நிறைவு செய்தார். அச்சமயம் செட்டியார் அச்சபையிலிருந்த ஏனைய புலவர்களுள் நெல்லைநாத முதலியாரிடம் பாடலின் சிறப்பைக் கூறுமாறு கேட்டார்.

நெல்லைநாதர் செட்டியாரை நோக்கி ஐயா பாடல்கள் யாவும் இனிமையாகவும் நன்றாகவும் இருந்தன. ஆனால் இவை பழைய பாடல்களே என்றார். அச்சமயம் மனவேதனையுற்ற செந்திக்கவி நெல்லைநாதரைநோக்கிப் "புலவரே இப்பாடல்கள் பழைய பாடல்களாயின் ஒரு பாடலைப் பாடுங்கள்" என்றார். உடனே நெல்லைநாதர் முழுப் பாடலையும் மிக அழுத்தம் திருத்தமாகப் பாடிமுடித்தார். ஆரம்பத்தில் இறுமாப்புடன் பாடிய செந்திக்கவி நெல்லைநாதரின் பாடலைக் கேட்டதும் ஏங்கி நின்றார். நெல்லைநாதர் பாடியவரை நோக்கிப் புலவரே பாடல் உங்களுடையதுதான் என்று தொடங்கியதும் செந்திக்கவி தன்னை மன்னிக்குமாறு வேண்டினார்.

இரு புலவர்களின் உரையாடல்களையும் நோக்கிய செட்டியார் இரு தாம்பாளங்களில் நிறைவான பரிசில்களை எடுத்து வந்தார். முதலில் ஒன்றை நெல்லைநாதரிடம் வழங்கினார். நெல்லைநாதர் அதனை இருகைகளாலும் வாங்கிக் கண்ணில் ஒற்றியபடி செட்டியாருக்கு நன்றி கூறினார். தமக்குக் கிடைத்த பரிசிலைச் செந்திக்கவியிடம் கொடுத்தார். அடுத்த பரிசில் செந்திக்கவிக்குச் செட்டியாரால் வழங்கப்பெற்றது. இரு பரிசில்களையும் பெற்ற செந்திக்கவி தமிழ் வளர்க்கும் யாழ்ப்பாண மரபை வாழ்த்திச் சென்றார். இதனால் நெல்லை நாத முதலியாரின் தமிழ்ப் புலமையும் பரோபகார சிந்தனையும் நம்பிக்கை இழந்த புலவரை நம்பிக்கையுடன் வாழ்த்திச் செல்லவும் உந்தியது. நெல்லைநாத முதலியாரின் தமிழ்ப்பணியின் புகழ் ஓங்கியது. யாவராலும் போற்றப்பட்டார்.

சேனாதிராய முதலியாரின் வாழ்வும் வளமும்

காலத்துக்குக் காலம் தோன்றித் தமது வழிவந்த ஆதிமொழியாம் செந்தமிழை வளர்க்கவென அவதரித்த செம்மல்கள் பலர். அவர்களின் திறனை நன்கறிந்து வரிசைப் படுத்திய பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கவிராயர் வரிசையில் சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் அடுத்தவரான இருபாலை (இருவாலை) சேனாதிராய முதலியார் என இருவரும் போற்றப்பட்டனர். இவர்கள் இருவரும் பல சந்ததிகளின் புலவர் வரிசையில் வழிவந்த சமகாலத்து மாமேதைகள். இன்றுவரை தமிழ்கூறும் நல்லுலகெங்கும் போற்றப்படுகின்றனர். முத்துக்குமார கவிராயர் பற்றிப் பின்னர் வேறாக அறிவோம்.

சேனாதிராய முதலியார் சைவநெறியால் கல்விச் சிறப்பால் செல்வத்தால் பலசீரும் பெற்ற நெல்லை நாதமுதலியாரின் அருந்தவப்புதல்வராக 1780இல் அவதரித்தார். தந்தை வழி வந்த கல்வி மரபு இவரின் கருவிலேயே அமைந்ததால் ஆரம்பகாலம் முதல் கல்வி ஆர்வம் மிகுந்து காணப்பட்டார். தந்தை இவரின் விவேகத்தை வியந்து தென்கோவையில் வாழ்ந்த செந்தமிழ்ப் புலவர்களிடம் ஆரம்பக்கல்வியைக் கற்கவைத்தார். இவர் மாதகல் சிற்றம்பலப் புலவரிடம் சில நூல்களைக் கற்றார். அக்காலத்தில் சிறந்து விளங்கிய கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளிடம் தொடர்ந்து கற்றார். இவரின் கல்வி ஆர்வம் வெகு சிரத்தையுடன் கடினநூல்களையும் இலகுவாகக் கற்க வைத்தது. கூழங்கைத்தம்பிரானிடம் நன்னூலை நாற்பது நாட்களுள் ஐயந்திருபுறக்கற்றுத் தேறினார். தம்மைக் கல்வியால் உயர்த்திய குருவுக்கு பெருந்தொகையான பொன்னும் பொருளும் தந்து தமது நன்றிக் கடனை நிறைவேற்றினார். மாதகல் மயில்வாகனப் புலவர் சேனாதிராயரின் சக மாணவனும் ஆருயிர் நண்பனுமாவார்.

சேனாதிராய முதலியாரின் பன்மொழிப் புலமையும் உயர்பதவிகளும்

இவர் தமது விவேகத்தினால் வடமொழி, சிங்களம், பாளி, போர்த்துக்கேயம், டச்சுமொழி, ஆங்கிலம், லத்தீன் முதலிய மொழிகளையும் துறைபோகக் கற்றுப் புலமை பெற்றார். இப்புலமையால் நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளராகவும் பணி செய்தார். இதே காலத்தில் நீதிமன்றங்களின் தொடர்பால் சட்டக்கல்வியையும் கற்றுச் சட்டத்தரணி ஆனார். தமது கல்வித் திறமையால் சிலகாலம் யாழ் கச்சேரியில் மணியகாரராகவும் பணியாற்றினார். இச்சமகாலத்தில் இவரின் கல்வித் தகைமையறிந்தவரும் கச்சேரியில் ஆராய்ச்சி வேலை பார்த்தவருமான கந்தப்பிள்ளை (ஆறுமுகநாவலரின் தந்தை)யின் நட்பும் ஏற்பட்டது. இந்த நட்பின் பேறாகக் கந்தப்பிள்ளையின் இளையமகன் ஆறுமுக நாவலருக்குப் பாடம் கற்பிக்கும் பேறு பெற்றார். மாணவனான ஆறுமுகம் பிற்காலத்தில் சைவத்தமிழ் போற்றி உயர்வடைய கற்பித்து நல்வழிப்படுத்திய நல்லாசான் என்னும் பெயர் பெறவும் இறையருள் பாலித்தது.

சமயப்பணி

சட்டத்துறையில் பிரபலமான முதலியார் நீதிபதியாகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் இவர் தமது பணியின் நிமித்தம் செல்லும்போது தமது சைவசமயத்தின் ஆர்வத்தால் தினமும் நல்லூர்க் கந்தப் பெருமானை வணங்கிச் செல்லும் நியமம் பெற்றார். தமது பக்தியும், கல்விப் புலமையும் உந்தியதால் நல்லூர் முருகன் மீது பல பாடல்களைப் பாடினார். மேலும் இவரின் முருகபக்தி தூண்டியதால் மாலைவேளை நல்லூர்க்கந்தசுவாமி கோயிலில் கந்தபுராண பிரசங்கத்தை மேற்கொண்டார். இதனால் பலரை முருக பக்தர்களாகவும் சமயக்கல்வியில் முன்னேற்றவும் அரும்பணியாற்றினார். சேனாதிராய முதலியாரின் ஆரம்பகாலப் பிரசங்கப்பணி தொடர்ந்ததால் பிற்காலத்தில் நல்லூரில் பிரசங்க மரபு பிரகாசிக்கவும் வித்திட்டாரெனலாம்.

சேனாதிராய முதலியார் தமது குலதெய்வமான நல்லூர் கந்தப்பெருமான் மீது நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் கலிவெண்பா, நல்லைக்குறவஞ்சி முதலிய நூல்களைப் பாடினார். நல்லை வெண்பாநூல் சற்றுக் கடினமானது. சிலேடையாகவும் அருந்தொடரில் சொல் நயம், பொருள் நயம் மிகுந்த நூலாகவே அமைந்தது. புலவரின் பக்தியையும் கவிதை ஆக்கம், பிரசங்கம் நூல்நயம் யாவற்றையும் நன்கறிந்த வித்துவ சிரோன்மணி பொன்னம்பிள்ளை அப்புக்குட்டிக் குருக்கள், இருபாலை அமரசிங்கமுதலியார், சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோர் பாராட்டியுள்ளனர். நல்லை வெண்பாவிற்குப் புலோலி வித்துவான் முருகேசபிள்ளை, மும்மொழிப் புலவர் சதாசிவஐயர் வித்துவான் கணேசையர் வித்தகம் கந்தையா பிள்ளை ஆகியோரின் உரையுடன் 1942இல் செம்மொழிப் பதிப்பகத்தில் வெளியிட்டனர்.

நல்லூர் ஊஞ்சற் பதிகம்

சேனாதிராய முதலியார் நியாயவாதியாயிருந்த காலத்தில் தினமும் நல்லூர்க் கந்தனை வந்தனை செய்து தமது கல்வி விருத்திக்காக முருகன்மீது பாடுவதற்குமாக ஆலயச்சூழலில் தமது அலுவலகத்தையும் அமைத்தார். இதனால் ஆலயப் பணிகளிலும் இணைந்தார். அக்கால அறங்காவலருடன் நட்புறவு பூண்டு ஆலயம் சார்பான ஆலோசகராக வும் அருந்தொண்டாற்றினார். இச்சமகாலத்தில் நல்லைக்கந்தப் பெருமானுக்கென ஊஞ்சற் பதிகத்தையும் பாடினார். இப்பதிகத்தின் பத்துப்பாடலும் முருக பக்தியை மிகைப்படுத்துவ தாகும். முருகனின் புகழை வெகுவாகப் பாராட்டி அன்று பாடிய பாடல்கள் இன்றுவரை இக்கோயிலின் ஓதுவாரால் பாடப்பட்டு வருகின்றது.

சேனாதிராயரின் ஊஞ்சற்பதிகம் 200 வருடங்களாகச் சிறப்புடன் ஒலிப்பதை அறி வோம். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் வருடம் முழுவதும் நடைபெறும் அத்தனை விழாக்களிலும் தேர்த்திருவிழா மிகக் கூடுதலான மக்கள் பயபக்தியுடன் வழிபட்டு எம் பெருமானின் அருள் இன்பம் பெறும் அற்புதம் என்றும் கிடைக்கப்பெறாதவை. வருடாவருடம் தேர் பவனிவந்து இருப்பிடத்தை அடைந்ததும் தேரில் அமைந்த ஊஞ்சலில் பெருமான் ஊஞ்சலாடும் மரபு நல்லூரின் அற்புதங்களிலொன்றாகும். இதே சமயம் பல்லாயிரக் கணக்கானோர் எம்பெருமானின் காட்சியைக் காண்பதற்காகக் காத்திருக்கின்றனர். முருகப் பெருமானின் சிறப்பைக்கூறும் ஊஞ்சற் பதிகம் யாழ்மண்ணின் சிறப்பான இசையில் பாடி யாவரையும் பக்தியால் உறைய வைக்கிறது. பாடல் இசை இனிமையுடன் பாடலில் சொல்நயம் பொருள் நயம் கூறும் சிறப்பு மிக உயர்ந்தது. முதலியார் இன்றில்லாவிட்டாலும் பாடலின் புகழ் நல்லூரில் ஒலிப்பது அவரின் புலமைச்சிறப்பும் அவரே பாடி மகிழ்வதுபோல யாவரும் வியக்கின்றனர்.

முதலியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மட்டுமல்லாது நீராவியடிப் பிள்ளையார் மீதும் பாடியுள்ளார். இவரின் சமகாலத்தில் வாழ்ந்த முத்துக்குமார கவிராயரும் (அன்று திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சேர்ந்து பலகோயில்களில் பாடியதுபோல) மாவிட்ட புரம் கந்தசுவாமிகோயில், நல்லூர்க்கந்தசுவாமி கோயில் மற்றும் பல கோயில்களிலும் ஒருபாடலை பகுதி பகுதியாக இருவரும் பாடியுள்ளனர்.

முதலியாரின் தமிழ்ப்பணி

முதலியார் வழமையாகவே நிலபுலங்களில் கூடிய வருமானம் பெறுபவர். தம்மை நாடி வருபவர்களுக்குத் தாம் தேடிக்கற்ற செந்தமிழைக் கற்றுக் கொடுத்து அறிவால் உயர்த்தியவர். யாவருக்கும் உணவு கொடுத்து, உடைகளும் கொடுத்து அறிவுப் பசியையும் போக்கியவர். இதனால் நான்கிற்கும் முற்பட்ட புலவர் பரம்பரை இவரின் பிற்சந்ததியினரிடம் இன்றும் நிலைத்துள்ளது.

சேனாதிராயரின் புலமை, பண்பு, சைவம் தமிழ் வளர்க்கும் பாங்கு தம்மை நாடுவோருக்கு உடற்பசி, அறிவுப்பசி போக்கும் ஈகை, இறைபக்தியாவும் அன்று முதல் இன்று வரை பல சந்ததிகள் கடந்தும் நிலைத்திருப்பது முதலியார் செய்த முற்றவப் பயனாகும். முதலியார் சகல பணிகளுடன் நீதிபதியாக இருந்தபோதும் இறைபக்தியும் ஆலயப்பணியும் தொடர்ந்தது. இதுவே அவர் தமது வாழ்வில் ஏற்றிய தீபமாக இன்றுவரை பிரகாசிக்கிறது.

அகராதிப்பணி

முதன் முதல் வீரமாமுனிவர் வெளியிட்ட அகராதியின் பின் தெல்லிப்பழையைச் சேர்ந்த றைற் என்பவர் அகராதியைத் தொகுத்தார். இந்த அகராதிக்கு உதவிய பல கல்விமான்களில் சேனாதிராய முதலியார் முதன்மையானவர். இப்பணியில் முதலியாரின் பன்மொழிப் புலமைமேலோங்கியிருந்ததை யாவரும் புகழ்ந்தனர். இதனை இவ்வகராதியின் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்ட சிலவரிகளால் அறியலாம். "தெல்லியம்பதியில் வரு நெல்லி நாதக்குரிசில் செய்தவமெனவுதித்த சேனாதிராசகலை ஞானாதிராசனும்" எனத் தொடர்கிறது. எப்பணி நோக்கினும் சேனாதிராய முதலியாரின் சிறப்பு யாவும் இன்று வரை போற்றப் படுகிறது.

சேனாதிராய முதலியாரின் மகன் இராமலிங்கர் பிறப்புரிமைப் பொறியாள்கை நெறியால் முற்சந்ததியினரின் புலமை பெற்றதுடன் பெருமதிப்பும் பெற்றவர். முதலியாரின் உத்தமசீடரான ஆறுமுகநாவலர் முதன் முதல் யாழ் வண்ணார் பண்ணை சிவன்கோயிலில் 31.12.1847இல் சைவப்பிரசங்கம் ஆரம்பித்த போது இராமலிங்கரே தலைமைதாங்கிப் பிரசங்கத்தைச் சிறப்பித்தார். இதுபோலவே முதலியாரின் பிற்சந்ததிகளில் பல இலக்கண, இலக்கிய வல்லுநர்கள் தோன்றினர். யாவரும் முதலியாரின் சந்ததியை இன்றுவரை சிறப் பித்து வருகின்றனர்.

சேனாதிராய முதலியாரின் அன்பரான குமாரசுவாமி முதலியார் பக்தியுடன் கவிபாட வல்லவர். சேனாதிராய முதலியார் 1840இல் சிவபதமடைந்தவேளை மனமுருகிப் பாடிய பாடலை அறிவோம்.

"நானாதிராவிடமு நன்னிலக்க ணாறுறச்செய்
சேனாதி ராயனையோ செத்ததென்றீர் - வானாதி
பொன்னிலத்து முண்மை புகனூலுரைப்ப தற்காய்
இந்நிலத்தை விட்டெழுந்த தே"

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"

செல்வச்சந்நிதி உறையும் கந்தக் கடவுள் எமக்குச் செல்வம் தந்திடும் சொந்தக் கடவுள்!

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய முருகப் பெருமான், "தொண்டைமானாறு" எனப்படும் புனித நகரிலே "செல்வச்சந்நிதி" என அழைக் கப்படும் அற்புத ஆலயத்திலே கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக் கின்றான்.

அழகன் முருகன் ஆற்றங்கரையிலே அமைந்திருக்கும் அழகிய ஆலயத்திலே வீற்றிருந்து, தம்மை நாடித் தேடி ஓடிவரும் பக்தர்களின் குறைகளைப் போக்கித் துன்பங் களை நீக்கித் திருவருள் புரிகின்றான். இது தனித்துவமான ஒன்று.

இந்த ஆலயத்தின் அற்புதச் சிறப்புக் கள் சொல்லில் அடங்காது. உண்மையான பக்தியுடன் நம்பிவரும் அடியார்களை செல்வச் சந்நிதியான் ஒருபோதும் கைவிடமாட்டான். இங்கேயுள்ள முருகனுக்கு, "அன்னதானக் கந்தன்" என்று ஒரு பெயர். ஒவ்வொரு நாளும் இந்த ஆலயத்திலுள்ள முருகப் பெருமானைக் கும்பிட வருபவர்கள் பசியோடு திரும்பியது இல்லை. எப்படியாவது ஏதோ ஓரிடத்தில் பசிக்குப் புசிக்க அன்னம் கிடைத்துவிடும். இது இங்குள்ள முருகனின் அற்புதமாகும்; அவனுடைய திருவருட் செயலுமாகும்.

இக்கோயிலுக்கு அணித்தாக அமைந் திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அறப் பணிகளுள் முதன்மைவாய்ந்ததும் இந்த நித் திய அன்னப்பணிதான். இதை நல்ல முறை யிலே நடத்தி வருகின்ற மோகனதாஸ் சுவாமி களின் சேவையும் சொல்லி முடியாது. ஏழைப் பிள்ளைகளின் கல்விச்சேவை, நோயுற்றவர் களுக்கு வைத்தியசேவை, வறிய மாணவர் களுக்குத் துவிச்சக்கரவண்டி வழங்குதல், ஏழைக் குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் கொடுத்தல், வருமானமற்ற ஏழை மாணவர் களுக்கு கொப்பி, புத்தகம், பென்சில், பேனா மற்றும் துணிகள் வழங்குதல் என்று இன்னோ ரன்ன பணிகளும் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; இதுவும் முருகன் செயலே!

இங்கே வாராந்தம் வெள்ளிக்கிழமை கள் தோறும் விசேட நிகழ்வாக அறம் சார்ந்த தெய்வீகச் சொற்பொழிவுகள் அழகாக நடை பெறுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 63 அடியார்களுக்கு விசேட பூசை நிகழ்த்தி அன்னதானம் வழங்குவது வேறு எங்குமே நடைபெறாத ஓர் அற்புத நிகழ்வாகும். இதிலே மிகவும் சிறப்பு என்னவென்றால் எல்லோருக் கும் சோறு கறி பரிமாறியவுடனே சிவபுராணம் பாடியே உண்பதற்கு அனுமதிப்பார்கள். இது ஒரு புனித நிகழ்வு.

இந்தச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அரிய பல சேவைகள் இலைமறை காயாக வும் நிகழ்வதுண்டு. புகழ் விரும்பாத இந்த சுவாமிகள் கணீரென்ற குரல்வளம் நிரம்பப் பெற்றவர். சிவபுராணம் மற்றும் யோகரின் பாடல்கள் சொல்லிக் கொடுக்கும்போது அவ ரது குரல் ஓங்கி ஒலிக்கும். அனைத்து அடிய வர்களும் சேர்ந்து பாடும்போது பக்திபூர்வமான ஒரு சொல்லில் அதாவது வார்த்தையில் அடக்கமுடியாத அற்புத ஆனந்த பரவசநிலை அங்கே குடிகொண்டிருக்கும். இது வேறு

63 நாயன்மார் குருபூசை நிகழ்வு



சமுதாயப் பணிகள்

எங்குமே காணக்கிடைக்காத ஓர் அரிய நிகழ்வாகும். இதுவும் ஆற்றங்கரையானின் அற்புதந் தான். செல்வச்சந்நிதியான் திருவருள் பெற வரும் அடியார்கள் ஆனந்தமாக அறுசுவை உணவுண்டு செல்லும் பாங்கு இங்கன்றி வேறெங்குமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் வேலவன் தன்னிடம் வரும் அடியார்களுக்கு நிம்மதியையும் மன அமைதியையும் ஆனந்தத்தையும் அள்ளி வழங்கிக்கொண்டே இருப்பான். இங்கு நிறைவேறும் திருமணங்கள் எண்ணிலடங்காதவை. இந்தக் கந்தனைக் கைதொழுது தமது வாழ்க்கையை ஆரம்பிப்பவர்கள் ஒருபோதும் சோடை போனதில்லை. அனைத்துத் தம்பதிகளும் ஆனந்தமான வாழ்வு வாய்க்கப்பெற்று நன்றாகத்தான் இருக்கின்றார்கள். இது காலங்காலமாக நடைபெற்று வருகின்ற உண்மை நிகழ்வாகும்.

முற்றாகத் தம்மை முழுமையாக ஒப்படைத்து, "முருகா! நீயே கதி; எம்மைக் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பே!" என்று விட்டுவிட்டால் அனைத்தையும் அவனே பார்த்துக்கொள்வான். "எல்லாம் அவன் செயல் தான். அவனன்றி ஓரணுவும் அசையாது; அவனே முழுமுதற் கடவுள். அவன் ஆட்டுவிக்கிறான் நாங்கள் ஆடுகின்றோம்" என்பதே எமது நினைப்பாக இருக்கவேண்டும். சந்நிதி முருகனின் நினைப்பு வந்தால் ஆணவ முனைப்பு அடங்கிவிடும். எமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும் முருகனே செய்விக்கின்றான் என்பதே முழு உண்மையாகும். "செல்வச் சந்நிதி உறையும் செல்வனே! முத்துக்குமரனே! குகனே சரவணனே! சரணம் சரணம்!!" என்று சதா சர்வகாலமும் சொல்லிக்கொண்டே இருந்தால் வாழ்க்கை சந்தோஷமாக அமைந்துவிடும். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனான சந்நிதி முருகனை சிந்தித்து வந்தித்துச் சேவித்து நாம் அனைவரும் வாழ்வில் நற்கதி அடைவோமாக.

மனதைக் கட்டுப்படுத்தினால்...

மனம் என்பது உடலின் ஒரு நுண்பகுதி மட்டுமே என்பதையும் நாம் நம்புவதானால் உடலும் மனத்தின்மீது செயற்படுகிறது என்று நினைப்பது நியாயமானது.

உடல் நோயுற்றால் மனமும் சஞ்சலமடைகிறது. உடல் ஆரோக்கியமாக இருந்தால் மனமும் நலமாக வலிமையாக இருக்கிறது. கோபம் வரும்போது மனம் சஞ்சலமடைகிறது. அதுபோலவே மனம் கலங்கினால் உடல் நலமும் கெடுகிறது. மக்களில் பெரும்பாலோரைப் பொறுத்தவரை மனம் ஏறக்குறைய உடலின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அவர்களின் மனம் மிகக் குறைவாகவே வளர்ச்சியடைந்திருக்கிறது. அவர்கள் விலங்குகளிலிருந்து மிகச் சிறிது மட்டுமே வேறுபட்டுள்ளனர். அதுமட்டுமல்ல அவர்களுள் பலருக்கும் கட்டுபாட்டு ஆற்றல், தாழ்ந்த விலங்குகளைவிடச் சிறிதளவே அதிகமாக உள்ளது. நமக்கு நம் மனதின்மீது மிகச் சிறிதளவே கட்டுப்பாடு உள்ளது. அந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கு உடலையும் மனதையும் கட்டுப்படுத்துவதற்கு உலைச் சார்ந்த சில உதவிகள் வேண்டும். போதியளவிற்கு உடம்பை அடக்கிய பின்னர் மனதை வசப்படுத்த முயலலாம். மனதை வசப்படுத்தினால் அது நமது கட்டுப்பாட்டுக்குள் வரும். அதன்பிறகு நாம் விரும்புவதுபோல் அதனை வேலை செய்ய வைக்கலாம். அதைக் கட்டாயப்படுத்தி நாம் விரும்புவதுபோல் அதன் ஆற்றல்களை ஒருமைப்படுத்தலாம்.

அளவில்லாத வேதனைகளைத் தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.

கொடுப்பதை தடுப்பது பெரும்பாவம்

– திரு சின்னப்பு தனபாலசிங்கம் அவர்கள் –

பசி என்று வருவோர்க்கு புசி என்று கொடுக்கின்ற
மோகனதாஸ் சுவாமி அவர்களுக்கு நீண்டகையே!
ருசி என்று பாராமல் பசிபோக்க வருபவர்கள்
துயர் இங்கு தற்போது துன்ப நிலையே

கொரோனா நோய் என்ற ஒன்றாலே
கொடுக்கின்ற மனதையும் தடுக்கின்ற துன்ப நிகழ்வே
அரோஹரா என்று சொல்லி அமுதுண்ணும் அடியார்கள்
நோயகலும் என்பதுண்மை - இதுவும்
அன்னதானக் கந்தனெனப் பெயர் கொண்ட கோவிலிது
அனைத்தையும் அறிவான் குகன், உண்மை இதுவே.

எண்ணில் அடங்காத பலநூறு ஆண்டுகளாய்
பல மடங்கு மடங்கள் இருந்ததே இங்கு
பசி போக்க வருபவரும், தம் துயரினைப் போக்கி வருவார்கள்
சந்நிதி வேலவனின் புதுமையில் இதுவும் ஒன்று.

காசிற்காய் வேலை செய்யும் கடமை புரிபவரோ, எவரோ
அறியார்கள் செல்வச்சந்நிதி முருகன் பெருமை
யோசித்தால் புரிந்திடுமே நொந்தவர்கள் மகிழ்வதும்,
நோயுற்றோர் நோய் தீருதலும், முருகன் கருணை.

தூசி பறப்பதுபோல் சிறுகாற்று வீசி விட்டாலே
தெரியாது தொலைந்து போகும் எம் வாழ்வின் பெருமை - இதனை
அறிந்தாலே யாருக்கும் தீங்கு துயர் புரிவாரோ?
யோசித்து நடந்தாலே நன்மை பல நன்மைதானே
நெறியோடு வாழ்பவர்கள் சில பேரே உண்மை
அவரை நின்மதியாய் வாழ நாம் விடுவோமே.

கதிர்காம யாத்திரை
-எனது அனுபவம்-

(தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

வருடா வருடம் கதிர்காம உற்சவத்தின் நிமித்தம் ஐயா எம்மை அழைத்துச் சென்றாலும் இம்முறை நாம் கிழக்கு மாகாணத்தில் பிரபலம் பெற்று விளங்கும் முருக ஆலயங்களான வெருகல் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், தாந்தாமலை முருகன் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் என்பவற்றோடு மிகவும் மகிமை பொருந்திய உகந்தைமலை முருகனையும் வணங்கிவிட்டு அப்படியே கதிர்காமம் போகலாம் என்று ஐயா கூறியதும் எனக்கும் கட்டாயம் உகந்தைக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அத்துடன் பல இடங்களில் இருந்து கதிர்காம பாதயாத்திரைக் குழுவில் ஈடுபடும் அடியவர்கள் ஒன்றுசேரும் இடமாகவும், உகந்தை வழிபாட்டின்பின் காட்டினூடாக நடந்து சென்று கதிர்காமம் அடைவதற்குரிய நீண்ட காட்டுப்பாதை திறப்பதையிட்டும் ஐயா பலமுறை எனக்குக் கூறியுள்ளார்.

இதன்படியும் உகந்தை முருகன் உகந்தையில் இருந்து பல திருவிளையாடல் புரிந்ததாகவும் பல அடியார்கள் ஆசிரமம் வந்து கூறுவதையும் நான் கேட்டிருக்கின்றேன். அவ்வகையில் உகந்தை சென்று அங்கே நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கவேண்டும் எனும் ஆவலை இம்முறை நான் கலந்துகொண்ட யாத்திரையின் மூலம் தெரிந்துகொண்டேன்.

கடந்த மலரில் அம்மையார் எமது குழுவினரை கடற்கரையோரம் அழைத்துச் சென்று அவ்விடங்களில் இடம்பெற்ற அதிசயங்களுடன் கூடிய முருகனோடு சம்பந்தப்பட்ட இடங்களைக் காட்டியபின் எம்மை ஆலயத்தின் பின்பகுதியில் உள்ள ஒரு உயரமான மலைக்கு அழைத்துச் சென்றார். மலையென்று சொல்வதைவிட வழுக்குப் பாறை என்றுதான் சொல்லவேண்டும். அதன் உச்சியில் ஒரு சிறிய கோவிலும் எமது கண்ணில்பட்டது. எல்லோரையும் மேலே ஏறி வரும்படி அம்மையார் கூறிவிட்டு தான் முதல் ஆளாக மலையில் ஏறத் தொடங்கினார். அவரை நாம் அனைவரும் பின் தொடர்ந்தோம். படிகளற்ற அம்மலையில் பயத்துடனும், மிகுந்த சிரமத்துடனும் எமது குழுவினர் அனைவரும் ஏறினோம். மேலே வந்து ஆலயச் சுற்றுப் புறச் சூழலைப் பார்த்தபொழுது ஒரு பக்கம் சமுத்திரம் மறுபுறம் காடுகளும், மலைகளுமாகப் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மலை உச்சியில் உள்ள ஆலயம் தெய்வானை அம்மன் ஆலயம் எனவும் ஆலயத்தைச் சுற்றி 11 நீர்ச் சுனைகள் உண்டு என்றும் கூறியதற்கிணங்க அந்தந்த நீர்ச் சுனைகளைப் பார்வையிட்டு அந்நீரை எடுத்து தலையில் தெளித்துவிட்டு அம்மை யாரைப் பின் தொடர்ந்தோம்.



அம்மையார் மலையின் பின்புறம் ஒரு உயரமான இடத்தில் ஒரு சிறிய கோவில் ஒன்று உள்ளது வாருங்கள் போவோம் என்றதும் எனக்கு ஏற்பட்ட களைப்பு காரணமாகப் பார்த்தது போதும் இப்படியே கீழே இறங்குவோம் என்று ஐயாவிடம் கூற, எனக்கும்தானே களைப்பு ஆனாலும் அம்மையார் வந்து காட்டுவது என்பது சாதாரண விடயமன்று. எங்களுக்காகவே வந்திருக்கின்றார், நானும்தான் வருகின்றேன் எல்லோரும் போங்கள் என்று கூறி எம்மை முன்விட்டு ஐயா பின்னால் வந்துகொண்டிருந்தார். அக்கோவிலை அடைவதென் பது நாம் நிற்கும் மலையில் நின்று சிறிது இறங்கி ஒரு ஒற்றையடிப் பாதையூடாக மறு பக்கத்தில் உள்ள மலைக்குச் செல்ல வேண்டும். அங்கேயும் படிகள் இல்லை. ஒரு பக்கம் முட்புதர்களும் மறுபக்கம் பெரிய பாறைகள். ஆனாலும் இடையினூடாக சென்ற பாதையின் ஊடாக நாம் அனைவரும் ஒருவர் ஒருவராக கைபிடித்து மலையில் ஏறி அவ்வாலயத்தை அடைந்தோம். வழியில் மான், மரை, காட்டுக்கோழி போன்ற விலங்குகளைக் காணக்கூடிய தாக இருந்தது. உச்சியில் ஒரு சிறிய கோவிலைக் கண்டோம். கருவறையில் ஒரு பெரிய வேல்.

ஆதிகாலத்தில் போகர் என்னும் சித்தரினால் இவ் வேல் வழிபாடு செய்யப்பட்டதாகவும், பல சந்நியாசிகள் இங்கே தவம் செய்தபடியாலும் இம் மலையை சந்நியாசி மலை என்று கூறி, இம் மலை மிகுந்த சக்திவாய்ந்தது என்றுங் கூறி அம்மையார் வேறோர் பகுதிக்கு அழைத்துச் சென்றார். கீழே பார்த்தால் பயங்கரம்தான். நாம் ஏறிய வழி வேறு கீழே இறங்கும் வழி வேறு.

என்ன அதிசயம். ஒரு சிறிய ஓடைபோன்ற வழியில் சரிவான பொந்து ஒன்று காட்சி அளித்தது. அதைக் காட்டி இப் பொந்துக்குள்தான் முருகன் வள்ளியைக் கொண்டுவந்து மறைத்து வைத்திருந்தார் பாருங்கள் என்று அம்மையார் கூறினார். வள்ளியைத் தேடி

வந்தவர்கள் அதற்குள் நுழைந்து தேடமாட்டார்கள். அவ்வளவு சிறிய ஓடை. திரும்பவும் முடியாது நிமிரவும் முடியாது. அதைப் பார்த்ததும் அம்மையார் முன் வழிகாட்டிச் செல்ல எல்லோரும் முருகா, முருகா என்று கூறியபடி கைகோர்த்தபடி சென்றோம். முன்னோக்கி செல்லலாமே தவிர பின் நோக்கித் திரும்ப முடியாது. அதுமட்டுமா எம்மோடு வந்தவர்கள் பெரும்பாலானோர் முதியவர்கள். நான் அழுத படியே என்னால் ஏறமுடியாது என பயந்த



வண்ணம் நின்றேன். அந்த நேரத்தில் ஐயா எல்லோரும் மேலே ஏறித்தான் போக வேண்டும் அம்மையார் போகின்றார்தானே பயப்படாமல் அவ பின்னே செல்லுங்கள். நான் கடைசியாக வருகின்றேன் என்று எமக்குக் கூறியதுடன் தானும் வந்து கொண்டிருந்தார். எமக்கு முன் ஏறிய பிரபா அண்ணன் மேல்நின்றபடி ஒவ்வொருவர் கையையும் பற்றிப்பிடித்து மேலே ஏற்றி விட்டார். எல்லோரது மனத்திலும் முருக சிந்தனையே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவ்வேளை அந்த அம்மையார் இதுதான் முருகனின் திருவிளையாடல் எனக் கூறி, இனி நான் போய் வருகின்றேன் மோகன் சாமி என்று கூறிவிட்டு கீழே சென்று விட்டார். நாம் கீழே வந்ததும் ஆலயத்தில் பூசைக்குரிய ஆயத்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

கீழே இறங்கியதும் ஐயாவும் உடன் வந்த ஆண்களும் உடல் அசதிபோக எங்கேயாவது குளிப்போம் என்று கூற, செல்வச்சந்நிதியிலிருந்து பாதயாத்திரை அடியார்களுள் ஒருவராக

வந்து உகந்தையில் நின்றிருந்த உரும்பராயைச் சேர்ந்த கணபதி வெதுப்பகத்தின் உரிமையாளரும் ஐயாவை தனது குரு என்று கூறிக்கொள்பவருமாகிய திரு தபேந்திரநாதன் அவர்கள் ஐயாவைப் பார்த்து சுவாமி மேலே வாருங்கள் நான் மேலே உள்ள 11 தீர்த்தங் களிலும் நீர் அள்ளித் தருகின்றேன் என்று கூறியதுடன் வாளியும் கயிறுமாக நின்றார். ஐயா வும் சரி என்று கூற எம்மோடு வந்த ஆண்களில் ஒருசிலர் மேலேபோய் தீர்த்தங்களில் குளித்துவிட்டு வந்தார்கள். அவர்கள் கீழே வரவும் பூசை ஆரம்பமாயிற்று. பூசை வழிபாட்டை முடித்து வெளியே வர அங்கே முன்பே கூறியபடி எமக்குரிய உணவுச் செயற்பாட்டில் ஈடுபட்ட அடியவர் எம்மை தனது இடத்துக்கு அழைத்துச் சென்று சின்ன வெள்ளை அரிசிச் சோறும், கறி, அப்பளம் என்பவற்றுடன் உணவு அளித்தார். அவர் அளித்த உணவை உண்டபின் அவருக்கு நன்றிகூறிவிட்டுச் சென்றவேளை ஐயாவைப் பார்த்து இனிமேலும் இந்த இடத் தில்த்தான் இருப்பேன் சாமியார். இங்கே வாருங்கள் என்று கூறி வழி அனுப்பி வைத்தார்.

இந்த உகந்தை முருகனின் ஆலய சுற்றாடலில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஏராளம். ஆனாலும் நாம் பார்த்தது ஒரு சில பகுதிதான். அதற்கும் காரணம் அம்மையார் வந்து அழைத்துச் சென்றமைதான். அவரும் எம்மைத் தேடிவந்து அவ்விடமெல்லாம் எம்மோடு இணைந்து சுற்றிக்காட்டியதுகூட ஒரு அதிசயம் என்றுதான் கூறவேண்டும். ஆனாலும் ஐயா விடம் எம்மை அழைத்துச் சென்ற அம்மையாரைத் தெரியுமா? அவர் உங்களை நன்கு அறிந் தவர்போல் தெரிகிறாரே என்று நான் கேட்டபொழுது, அதற்கு ஐயா எனக்கு முன்பின் அவரைத் தெரியாது. இன்றுதான் காண்கின்றேன். கதிர்காம பாதயாத்திரைக் குழுவோடு வந்தவராகவும் இருக்கலாம். அதைப் பற்றிய விசாரணை உனக்கு எதற்கு. யாராவது வருவார்கள்தானே என்று சொன்னேன். அவ் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் யாரோ ஒருவர் வந்திருக்கின்றா. அவ வந்தபடியால் ஒருவரும் போகமுடியாத இடத்துக்கெல்லாம் எம்மை

அழைத்துச் சென்று நீங்கள் பார்க்கவேண்டும் என்ற உங்கள் எண்ணத்தை பூர்த்தி செய்துள்ளார். எம்மை அழைத்துச் செல்ல வந்த அம்மையார் இச் சுற்றாடலை நன்கு அறிந்தவர் என்றுதான் கூறவேண்டும். அவர்களைத் தேடிப் பிடிக்கமுடியாது. நாம் திரும்பி மீண்டும் இந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்றாலும் நாமாகப் போய்ப் பார்க்க முடியாது என்று கூறியதுடன் இதற்கெல்லாம் மூலகாரணம் உகந்தை முருகன் அருளே என்றுங் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணியளவில் எமது கதிர்காம பயணத்துக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டோம். எமக்குரிய இரவு உணவுச் செயற்பாட்டினை தழ்பிலுவிலைச் சேர்ந்தவரும், ஆசிரமத்தோடு நன்கு இணைந்தவருமாகிய திரு கணேசண்ணன் ஏற்பாடு செய்து தந்திருந்தார். அதனையும் பெற்றுக்கொண்டு அவருக்கும் நன்றி கூறியதுடன் மலையில் எம்மோடு ஏறிவந்து 11 தீர்த்தக்கிணறுகளில் இருந்து நீர் எடுத்து ஏமக்கெல்லாம் தெளித்த திரு தவேந்திரநாதன் அவர்களுக்கும் நன்றிகூறியபின் உகந்தை முருகனையும் வள்ளியையும் மீண்டும் வணங்கி எமது கதிர்காம யாத்திரையைத் தொடர்ந்தோம்.

பாணமையிலிருந்து உகந்தை வரையிலான சுமார் 20 கிலோமீற்றர் தூரம்வரை காட்டுப் பாதை. நாம் உகந்தைக்குப் போகும்போது இரவு நேரமாக இருந்த காரணத்தாலும் முதன் முதலாக காட்டுப்பாதையூடாக பிரயாணம் செய்வதையும் இட்டும் ஒருவித பயத்துடனே தான் சென்றிருந்தேன். ஆனால் உகந்தையிலிருந்து மாலைப்பொழுதில் புறப்பட்டபடியால் காட்டுப்பாதையை நன்கு பார்க்கக்கூடியதாக இருந்தது. வழியில் மான் கூட்டங்களையும் முயல்களையும், காட்டுக்கோழி வகைகளையும், யானைகளையும் வழியில் உள்ள குன்றுகளின்மேல் ஒருசில கோயில்களையும் காணக்கூடியதாக இருந்தது. உண்மையில் உகந்தை தரிசனம் ஒரு பெரும்பேறாகவே கருதுகின்றேன். இவ்வகை அனுபவங்கள் எனக்குக் கிடைப்பதற்கு ஐயாவின் அருட்திறம் என்றுதான் கூற வேண்டும். (தொடரும்...

ஞானச்சுடர்

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

தேரேறி வருக சந்நிதி வேலா!

ஆற்றோரந் தனிலே வீற்றிருக்கும் வேலவா!
அற்புதனே அடியவர் துயர்தீர்க்கும் சந்நிதி முருகா!
பல்லாயிரம் பக்தர் வடம்பிடிக்க வல்லவனே!
அத்தனை பேரையும் அன்பொழுகப் பார்த்து
தேரேறி வருகின்ற தெள்ளு தமிழ்ப்புலவனே!
தொட்டெழுதுகின்றேன் உனக்குப் பாட்டினால் அர்ச்சனைகள்.

தொல்பதியாகிய தொண்டைமானாற்றில்
செல்வச்சந்நிதியில் உறைகின்ற திருமுருகா!
வல்லமையே உன் வடம்பிடித்தே - என்
தொல்லைகள் போக்கியே நீ அருள்வாய்!
அன்னதானக் கந்தனாய்ச் சிறப்பவனே!
அவலங்களைக் களைகின்ற ஏழைகளின் தெய்வமே!
உன் அடிவந்தேனே நான் இன்று
உய்திட வைத்திடய்யா என்வாழ்வை.

எண்ணிலடங்கா பக்தர்கூட்டம் கூடிஉண்டேகளிக்க
கடியமன முடையவரும் அரோகரா எனும் ஒலி
வானைப் பிளக்க காவடிகள் பலநூறும் நின்றாட
கற்பூரச் சோதி எங்கும்மிளிர கந்தனை ஆற்றங்கரை
சூழ்ந்து அலங்கரிக்க நம் அன்னதானக்கந்தன் ஆடியாடி
அலங்கரித்த தேரினிலே வருகின்றான் புடைசூழ்ந்த
பக்தர்களின் துயரங்களைத் தீர்க்கின்றான்
வாருங்கள் கந்தனின் வடம்பிடித்து இழுப்போம் நாமும்!!!

–திருமதி நாகேஸ்வரி கந்தசாமி–

பதிவு இல: QD/78/NEWS/2020

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்